
# தியாகராஜம்

# Thiyagarajam



## Late.Hon.K.Thiyagarajah

Principal, Mayor, North-East Provincial Director,
Secretary for Ministry of Education, Regional Coordinator for Governor.

மீன்பாடும் தேனாட்டார்
மேன்மை கொள் நீதியாளர்!
'நான்' என்ற மமதையில்லார்,
நற்படிப்பால் மேலுயர்ந்தார்!

தோன்றினார் புகழுடன்
தூயநெறி மேற்கொண்டார்!
ஈன்ற தமிழ் மண்ணுக்கும்
இன மொழிக்கும் பணிசெய்தார்!

பல பதவி - பல பணிகள்
பதினெட்டாண்டானாலும்,
நலமறிவார் உள்ளமுளார்
நற்கல்விக் கொருவரவர்!

நல்லோர் 'தியாக' மதை
நாட்டார் மறந்தறியார்!
பல்லாண்டு அவர் வாழ் வார்,
பயில் கல்வி உள்ளவரை!

- தாமரைத்தீவான்



# தியாகராஜம்



மட்டக்களப்பு கல்வி வரலாற்றில் மட்டுமன்றி மட்டக்களப்பின் சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய ஓர் மனிதன் பற்றிய நினைவுகளை பதிவுகளாகக் கொண்ட நூல் இது.

இந்த மண் எத்தனையோ புத்தி ஜீவிகளையும், சேவையாளர்களையும் பிரசவித்துள்ளது. ஆனால் இத்தன்மைகளை ஒன்றாக கொண்டவர்கள் மிகக் குறைவே. அந்தவகையில் இவ் இரண்டு தன்மைகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு மாமனிதன் அமரர். தியாகராஜா அவர்கள்.

சாதாரண ஒரு பயிற்சி ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்த தியாகராஜா அவர்கள் படிப்படியாக உயர்ந்து வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்விச் செயலாளராக உயர்ந்ததும், இலங்கையின் உயர் கல்வி நிலையமாக திகழும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக பல வருடங்கள் செயற்பட்டதும் அவரது அறிவு ஜீவிதத்தின் உன்னதமாகும்.

இருபது வருடங்களுக்கு மேலாக கல்லடி ஆலய பரிபாலன சபையின் தலைவராக, விபுலாநந்தா நூற்றாண்டு விழாச் சபைத் தலைவராக இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் அரும்பணி ஆற்றியவர். மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு பெரும்பணி ஆற்றியவர்.

மட்டக்களப்பு மண்ணில் **சிலை அமைத்து** பெருமைப்படக் கூடியவரான அமரர் தியாகராஜா அவர்களின் சேவைகள் இன்னும் இன்னுமாய் பேசப்படவேண்டும். அதன் ஆரம்பமாக இந்நூல் அமையும் என நினைக்கிறேன்.

வாழ்த்துகளுடன்
**மகுடம். வி. மைக்கல் கொலின்**



மலர் தொகுப்பு

**கவிஞர் கேணிப்பித்தன் ச. அருளானந்தம்**

**மருதம். வி. மைக்கல் கொலின்**

**பேராசிரியர் பாலசுகுமார்**

மலர் தயாரிப்பு

**மருதம். வி. மைக்கல் கொலின்**

# இரங்கற் செய்தி

**பேரின்ப பெருவாழ்வு பெற்றுய்க**

அமரர் தியாகராஜா சிவானந்த வித்தியாலயத்துடனும், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனுடனும் பெரிய ஈடுபாடும் பற்றுறுதியும் கொண்ட பெருமகன்.

"ஓரிருநாள் கழியுமுன்னர் மாரடைப்பு நோயால்
ஊனுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்
ஆருயிர் நேர்நண்பனெனும் அவலவுரை செவியில்
அனற்பிழம்பாய்ப் புகுந்துள்ளத்தை உருக்கியதப் பொழுதில்
பொங்கியெழுந்துயர்க்கனலைப் போக்குவதற்கு மாய்ப்
பொய்யுலகின் உண்மையினைப் புலங்கொளற்குங்கருதிக்
கங்கையெனும் தெய்வநதிக் கரைப்புறத்தையடைந்து"

நண்பன் பிரிவுக்கு ஓலை எழுதிக் கங்கையில் விட்ட சுவாமி விபுலானந்தரின் உள்ளக் கிடக்கை போலுள்ள நிலை எமக்கு (சுவாமி விபுலானந்தர் ஆக்கம் 4 பக்கம் 137)

"இவரது பிரிவு துறவியாகிய எனதுள்ளத்திற்கே துயர் விளைவிக்குமாயின் ஏனைய நண்பரும், மாணவரும், சுற்றத்தாரும் எத்துணை மனத்துயர் எய்தி நிற்பர் என்பதையான் எடுத்துக்கூற வேண்டியதில்லை" (ஆக்கம் 3 பக்கம் 46) என்று சுவாமி விபுலானந்தர் தனது நண்பரது பிரிவுக்குத் தெரிவித்துள்ள துயரச் செய்தியையே நானும் நினைவு கூற வேண்டியுள்ளது.

அமரர் தியாகராஜா நினைவு தெரிந்த காலம் தொடக்கம் எம்மோடு நெருங்கிப் பழகியவர். அவர் சிவானந்த வித்தியாலயத்திற்கு முதன் முதல் பதவியேற்ற காலந் தொடக்கம் இறுதிவரை எம்மோடு துணைநின்று உதவியவர். மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் கிளையின் பவள விழாவில் அவரது பங்கும், பணியும் மகத்தானவை. அவரிடம் பல்வேறு திறமைகள் இருந்தன. எடுத்த கருமங்கள் எதனையும் துணிவுடன் நின்று நிறைவேற்றி முடிக்கும் வல்லாளர். ஆசிரியராக, அதிபராக, கல்வியதிகாரியாக, கல்விச் செயலாளராக, மாநகர மேயராக, ஆளுனரின் பிராந்திய ஆணையாளராக என்று பல பதவிகளை அலங்கரித்தவர். அவரால் பல பதவிகள் சிறப்புற்றன. சிவானந்த வித்தியாலய பவளவிழா, சுவாமி நடராஜானந்தா நூற்றாண்டு விழா என்று நிகழ்வுகள் தொடங்கப்பட்டு செயலுருவாகும் இக்காலகட்டத்தில் அவரது பிரிவு ஈடுசெய்ய முடியாதது. அவரது இழப்பின் வெற்றிடம் நிரப்பமுடியாதது.


அவரது ஆன்மா ஈசன் கழலடியில் பிறவாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்யப் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவடி வேண்டுகின்றேன். ஆறுதலற்றிருக்கும் அவரது குடும்ப அன்பர்கள் அனைவருக்கும் இறையருள் சித்திப்பதாக.

ஓம் சாந்தி

இறைபணியில்,

**சுவாமி ஜீவனானந்தா**

# சேவைக்கொரு தியாகராசா



மானிடப் பிறவி மகத்தானது. தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பதற்கான வழிகளையும் வகுத்து வாழ்பவன்தான் மனிதன். இவ்வுலகில் பிறந்தவர் நிலைத்து நிற்பதில்லை. சிலரால்தான் அப்படி நிற்கமுடியும். அப்படிப்பட்டவர்களே செயற்கரியன செய்தவர்களாவர். அமரர் கந்தையா தியாகராஜா அவர்கள் செயற்கரியன செய்தவர்கள் வரிசையில் வைக்கப் படுபவராவார்.

அவர் சிவானந்த வித்தியாலயத்தில் கற்கும்போதே புகழடைந்தவர். சிவானந்த வித்தியாலயம் வெறுமனே கல்லும் சீமெந்தும், மனித முயற்சியும் கொண்டு எழுப்பப்பட்டதல்ல. அதன் உயிர்நாடியாக, உயிர் மூச்சாக விபுலானந்தரின் உழைப்புடன் ஆத்மாவும் பிணைந்து, சேர்ந்து கலந்து எழுப்பப் பட்டது. அந்த உயிர்த்துடிப்புள்ள கல்விக் கூடத்தில் புடம் போடப்பட்டவர். சிறந்த ஒழுக்க நெறியோடு கூடிய கல்வியைக் கற்றவர். மாணவரின் தலைமைத்துவத்துக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர். ஆங்கிலத்தில் புலமை மிக்கவர். சிறந்த பேச்சாளனாக விளங்கியவர். அவரது நடையில் ஒரு கம்பீரம் எட்டிப் பார்க்கும். அவரது புன்னகையில் ஏழைகளுக்கு இரங்கும் மனத்துடிப்பு குந்தியிருக்கும். சுவாமி விபுலானந்தர் ஏழைகளின் கண்ணீரில் இறைவனைக் காணும் கல்வியைப் போதித்தார். அவ்வழியூடாகப் பயணித்த அமரர். கந்தையா தியாகராஜா ஏழை பங்காளனாகச் சேவை செய்தவர்.

அவர் படிக்கும் காலத்தில் விஜயமுனி என்றொரு ஆசிரியர் கற்பித்தார். அவருக்குத் தமிழ் தெரியாது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த திறமையான ஆசிரியர். அவர் மேல்வகுப்புகளுக்கு ஆங்கில மொழி, இலக்கியம், வரலாறு, குடியியல் பாடங்களைக் கற்பித்தார். தியாகராஜா எல்லாப் பாடங்களிலும் கெட்டிக்காரர். விஜயமுனிக்கு மிக விரும்பிய மாணவராக விளங்கினார். அந்த ஆசிரியருக்கு வேண்டிய உதவிகளை தியாகராஜாவே செய்தார். சந்தேகமான பாடங்களை அவர் விரும்பிச் சொல்லிக் கொடுத்தார். ஆசிரியர்களுக்கு விருப்பமான மாணவராக விளங்கினார்.

நான் விடுதியில் தங்கியிருந்து கற்றேன். அவர் கல்லடியில் தங்கள் வீட்டில் இருந்தே பாடசாலைக்கு வந்து கற்றார். அத்துடன் அவர் கலைப்பிரிவில் கற்றார். நான் உயிரியல் பிரிவில் கற்றேன். நான் ஆறாம் வகுப்புக் கற்கும்போது அவர் எட்டாம் வகுப்பில் கற்றார். அவர் எஸ்.எஸ்.சி. பரீட்சை எடுத்ததன் பின்னர்

நான் அவரைச் சந்திக்கவில்லை. அவர் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து வெளியில் வந்ததும், இராமக்கிருஷ்ண சங்கம் ஆசிரியர் பதவியைக் கொடுத்தது. ஆசிரியராக நியமனம் பெற்றுவிட்டார்.

பல ஆண்டுகளுக்குப் பின் திருகோணமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளராக தியாகராஜா கடமையாற்றினார். திருகோணமலை வந்தால் சந்திப்பேன். உரையாடிச் செல்வேன். நான் படித்த எங்கள் ஊர் பாடசாலையில் ஆசிரியராகி, அதிபராகவும் கடமையாற்றினேன். திருகோணமலை, கண்டி மாவட்டங்களில் அதிபராகவும் கடமையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தேர்வில் தோற்றித் தெரிவாகி வவுனியாவில் வட்டாரக் கல்வி அதிகாரியாகவும், கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அமரர் தியாகராஜா தான்கற்ற கல்விக் கூடமான சிவானந்த வித்தியாலயத்தின் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமை ஆற்றினார்.

**அரசியல் வாழ்க்கை**

அரசியலிலும் அவருக்கு ஆர்வம் அதிகம் இருந்தது. மட்டக்களப்பின் முதல் மாநகரசபை மேயராக திரு.செ.இராசதுரை தெரிவுசெய்யப்பட்டாரர். அப்போது நான் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தேன். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையால் ஒரு வரவேற்புக் கொடுத்தோம். நான் கவிதை பாடினேன். அப்போது இன்றுள்ள வசதிகள் இல்லை. மட்டக்களப்பு வாவி கிழக்கு மேற்காக வவுணதீவு நிலப்பரப்புகளை ஆக்கிரமித்துக் கொள்ளும் வகையில் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. வடக்குத் தெற்காகப் புளியந்தீவையும் மட்டக்களப்பு நிலப்பரப்பையும் சிறிய பாலம் இணைத்திருந்தது. அந்தப் பாலத்தில் நின்றவாறே அதிகாலையில் சூரியோதயத்தையும், மாலையில் சூரியன் மறைவதையும் பார்க்கலாம். “அந்தப்பாலத்தை திருத்தி அழகாக அமைத்தால் இதற்காக கன்னியாகுமரி முனைக்குப் போகவேண்டியதில்லை. மட்டக்களப்புக் கோட்டைமுனைப் பாலத்தில் இருந்தே அக்காட்சிகளைப் பார்க்கலாம். கரையோரங்களில் இருக்கைகளையும், பூந்தோட்டங்களை அமைத்தும் தாருங்கள்” என்று கேட்டிருந்தேன். அதனை பின்னால் மாநகரமுதல்வராக வந்தவர் செய்துள்ளார். கல்விக் கட்டமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. அதன்படி வடக்குக் கிழக்கு மாகாணம் ஒன்றாக இணைக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாணக் கல்வி அமைச்சில் ஒரு செயலாளரின் நிர்வாகம் நடந்தது.

திருகோணமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளராக தியாகராஜா கடமையாற்றினார். நான் ஆசிரியராகப் பணியாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து வவுனியாவில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினேன். திருகோணமலைக்குக் கடமை காரணமாக அடிக்கடி வரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அவரைச் சந்தித்தால் பழையன பற்றி உரையாடுவோம். சந்திக்கும் போதெல்லாம் ‘திருகோணமலைக்கு எப்படாப்பா வாற எண்ணம்’. என்றே கேட்பார். ‘இங்கே வந்தால்தான் பல பிரச்சனைகளைத் தீர்க்கலாம்’ என்று விளக்கம் தருவார். அவர் பின்னர் மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

மாகாணக் கட்டமைப்பின் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். தனது கடமையைப் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செய்தார். எப்போதெல்லாம் கடமை நிமித்தம் திருகோணமலைக்கு வந்தாலும் ‘எப்படாப்பா திருகோணமலைக்கு வாற எண்ணம்’? என்ற கதையைத்தான் தொடங்குவார். பல இன்னல்களுக்கு மத்தியில் நான் வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றி வருவதை உணர்ந்தவர்.

அது 1993 ஒக்ரோபர் மாதம் திருகோணமலை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு வந்தேன். மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறைக்கதவை அடைந்ததும் அவரே எழும்பி வந்து ‘வாங்க வாங்க’ என்று வரவேற்றார். இருக்கையில் அமரவைத்தார்.

'உண்மையில் எனக்கு இன்றுதான் மனநிறைவு' என்றார்.

'நான் வருவேன் என்று நீங்க நினைக்கவில்லை. அப்படித்தானே'?

'உண்மைதான் உங்கள வவுனியா விடுமா'?

'இம்முறை ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறன். திரும்பப் போவதில்லை. அதனால்தான் கடிதம் கிடைத்ததுமே யாருக்கும் தெரியாமல் இன்றே வந்துவிட்டேன். நான் இரண்டு நாள் விடுமுறையில் சென்றுள்ளேன் என்றே பலரும் நினைப்பார்கள்' என்றேன்.

**மனிதநேயம் மிக்கவர்**

நான் வவுனியாவில் இருந்து இடமாற்றம் பெற்று வந்து வீடுதேடும் படலத்தில் இருந்தேன். எனது ஆலங்கேணிக் கிராமத்தில் இருந்த எனது வீடு கலவரத்தினால் அழித்தொழிக்கப்பட்டது. எனது தம்பி இருக்கும் சிறிய வாடகை வீட்டின் ஒரு ஒதுக்கு புறத்தில் தங்கியிருந்தேன். தம்பியும், குடும்பமும் அகதி வாழ்க்கைதான் வாழ்ந்தார்கள். அவர்களும் இரவல் வீட்டிலேயே இருந்தார்கள். நானும் அந்தக் குருவிக் கூட்டில் தஞ்சமானேன். ஒரு நாள் கடும் மழை. பெரிய சிரமத்தைச் சந்திக்க வேண்டி இருந்தது. காலையில் அலுவலகம் வந்தேன். கடமையில் ஈடுபட்டிருந்தேன். சற்று நேரத்தால் நிமிர்ந்து பார்த்தேன். மாகாணக் கல்விப் பணிப்பாளர் என் முன்னே நின்றார்.

"சேர். அழைத்திருந்தால் நான் வருவேன்தானே. நீங்க ..."

"நான் நீங்க வேலை செய்யிறீங்களா... இல்லையா... என்று பார்க்க வரல்ல"..

கூறிக் கொண்டே கதிரையை இழுத்து என் முன்னால் அமர்ந்தார். "சொன்னால் நீங்க நம்ப மாட்டீங்க. இரவு முழுக்க எனக்கு நித்திரையில்லை. நீங்க எப்படி இந்த மழையில் தவித்திருப்பீங்க. தங்கராசா என்ன பாடு பட்டிருப்பார்? என்ற ஏக்கமாகவே இருந்தது. அதுதான் வந்ததும் உங்களைப் பார்க்க வந்தேன்." என்றார். அவரது முகத்தின் சலனத்தைப் படித்தேன். எனது கண்கள் பனித்தன.

தனது அலுவலர்களின் நலனில் அக்கறை கொள்பவன்தான் உண்மையான தலைவன். இவர் நெப்போலியன் பொனபாட் போன்றவர்தான். என் மனம் பெருமிதம் கொண்டது. ஒரு விபுலானந்தரைக் கண்டு கொண்டேன்.

நெப்போலியன் தனது படை வீரர்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்டவன். போர்க்களத்தில் வீரர்களை அவர்களுக்குத் தெரியாமல் பார்வையிட்டு வருவது வழக்கம். அன்றும் அப்படித்தான் பாசறைகளை நோக்கி அவனது கால்கள் நடந்தன. போர் வீரர்கள் களைப்பு மிகுதியால் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். பாசறைக் கூடாரங்களில் அரிக்கன் லாம்புகள் மெலிதான வெளிச்சத்தில் மௌனித்தன. ஆனால் ஒரு கூடாரத்தில் இருந்த விளக்கு மங்கலான வெளிச்சத்தை விசிறிக் கொண்டிருந்தது. மெல்ல நெப்போலியன் கூடாரத்தை அடைந்தான். எட்டிப் பார்த்தான். ஒரு வீரன் மேசையின்மீது கைகளை வைத்து இருந்தபடியே உறக்கத்தில் இருந்தான். அடிமேல் அடி வைத்து அருகில் சென்றான். வீரனின் ஒரு கையில் பேனா இருந்தது. எழுதி முடிக்கப்படாத கடிதம் விளக்கின் கீழ் தெரிந்தது. நெப்போலியன் அதனை அப்படியே மனதினுள் வாசித்துப் பார்த்தான்.

'அம்மா! இவ்வளவு கடன் இருப்பதாகத் தெரிவித்திருந்தீர்கள். நான் போர்முனையில் இருந்து கொஞ்சமாகத்தான் உழைக்கிறேன். இவ்வளவு பணத்தையும் எப்படிச் செலுத்துவது? 'இதனை யார் தீர்த்து வைப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை'. என்று கடிதம் முடியாமல் இருந்தது.

நெப்போலியன் கடிதத்தை எடுத்தான். தனது பொக்கற்றில் இருந்த பேனாக் கத்தியினால் தனது கைவிரலில் குத்தினான். இரத்தம் வந்தது. கத்தி முனையினால் இரத்தத்தைத் தொட்டு

'இதனை யார் தீர்த்து வைப்பார்" என்பதற்குக் கீழே 'நெப்போலியன் பொனபாட்' என்று கையெழுத்திட்டுச் சென்றான். விடிந்ததும் வீரன் கடிதத்தைப் பார்த்ததும் ஏங்கிவிட்டான். என்ன நடக்குமோ என்று தவித்தான்.

அவன் பயந்தது போல் நெப்போலியனிடம் இருந்து அழைப்பு வந்தது. வியர்த்தபடி வீரன் நெப்போலியன் முன் நின்றான். நெப்போலியன் தனது படையதிகாரி மூலம் வீரனின் வீட்டுக்கு உரிய பணத்தினைச் செலுத்தியதைத் தெரிவித்தான். இந்தக் கதைதான் எனக்கு நினைவுக்கு வந்தது.

1990 ஜுலையில் கலவரம் வெடித்தது. தமிழ் கிராமங்கள் அல்லோல கல்லோலப்பட்டன. மக்கள் வேறு மாவட்டங்களுக்கும், இந்தியாவுக்கும் உயிர் தப்பிப் பிழைப்பதற்காக ஓடினார்கள். பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். அகதியாக்கப்பட்டு அகதி முகாம்களில் தஞ்சமானார்கள். திருகோணமலை மாவட்டத்தின் பல கிராம மக்கள் சீனக்குடாவில் உள்ள கிளப்பன்பேர்க் அகதிமுகாமில் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தஞ்சமெனக் கிடந்தார்கள். நானும் கடமை நிமித்தம் திருகோணமலைக்கு வந்திருந்தேன். எனது ஊர்மக்களோடு காடுகளில் கிடந்து பின்னர் கிளப்பன்பேர்க் அகதி முகாமுக்கு வந்தேன். சுமார் ஆறு மாதங்கள் அகதிமுகாம் வாழ்க்கை. திருகோணமலை மாவட்டத்தின் அரைவாசி மக்கள் இந்த அகதி முகாமில் இருந்தனர். நான்காயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருந்தனர். என்னோடு நண்பர் தங்கராசாவும் இருந்தார். இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் என்னாவது? சிந்தித்தோம். அந்த நேரத்தில் எங்களுக்கும் மாகாணக் கல்விப் பணிமனைக்கும் கைகொடுத்து உதவியவர் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.மடுகல்ல அவர்களே. அவரால் மட்டுந்தான் அப்போது வெளியில் செல்ல முடியும். அவரோடு தொடர்பினை ஏற்படுத்தினோம். அகதி முகாமில் பாடசாலையைத் திறக்கலாமா? என்பதை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து அனுமதியைப் பெற தூது அனுப்பினோம். அடுத்த நாளே சாதகமான பதிலோடு திரு.மடுகல்ல வந்தார். முந்திய நாளே நானும் திரு.தங்கராசாவும் விமானத் தளபதி திரு.வட்டுக்கொட அவர்களைச் சந்தித்து 'பிள்ளைகளின் எதிர்காலம்' பற்றி விளக்கினோம். உயர் பதவியில் இருப்போர் போருக்கு எதிரானவர்கள். அமைதியையே விரும்புபவர்கள் என்பதைப் புரிந்து கொண்டோம். அவர் எங்களுக்காக பெரியதொரு கட்டிடத்தை ஒதுக்கித் தந்தார். அத்துடன் விமானப் படைவீரர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுத் தந்தார்.

பாடசாலை தொடங்கப்பட்டது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் வேண்டிய கற்றல் கற்பித்தல் சாதனங்களைத் தந்து உதவின. மேசை கதிரைகள் இல்லை. வேண்டிய அளவு பாய்களைத் தந்துதவினர். நாங்களும் கற்பித்தோம். அகதி முகாமில் இருந்த ஆசிரியர்களை ஒன்றிணைத்துப் பாடசாலையை நடத்தினோம். ஆசிரியர்கள் அனைவரும் முன்வந்து உதவினர். அமரர் தியாகராஜா நேரடியாக திரு.மடுகல்ல அவர்களோடு வந்து வேண்டிய உதவிகளைச் செய்தார்.

"இப்படியான நேரத்தில் நம்மாலான உதவிகளைச் செய்வதே மனிதாபிமானமாகும். நீங்கள் இந்த அகதி முகாமில் அகதிகளாக இருக்கிறீர்கள். நாங்கள் நிம்மதியாக இருக்கிறோம் என்று எண்ண வேண்டாம். நாங்களும் வீட்டுச் சிறைக் கைதிகள்தான். நாங்கள் அங்கிருந்து இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம். நித்திரையில்லாது தவிக்கின்றோம். நானும் ஒருவகையில் அகதிதான். இருக்கும் வரை மக்களுக்காக சிறப்பாக இந்தப் பிள்ளைகளுக்காக வாழுவோம். உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். உங்கள் கடமையைச் செய்யுங்கள்." அவர் பேசும்போது அவரது கண்கள் பனித்தன. கண்களைத் துடைத்துக் கொண்டார். ஆசிரியர்களுக்கு உரிய சம்பளத்தைப் பெற மாகாணக் கல்விப் பணிப்பாளர் அமரர் தியாகராஜா வேண்டிய உதவிகளைச் செய்தார். அடிக்கடி வந்து ஆசிரியர்களையும், பாடசாலைச் சிறுவர்களையும் உற்சாகப்படுத்தினார். இந்த இடத்தில் தோப்புரைச் சேர்ந்த ஜனாப். சாபீரை நினைவுகொள்ளாமல் இருக்க முடியாது. உயிரைப்

பணயம் வைத்து ஆசிரியர்களது சம்பளத்தைக் கொண்டு வந்து வழங்கினார்.

இச்செயற்பாடுகள் தியாகராஜா அவர்களது மனிதத் தன்மையைப் பறைசாற்றுகின்றன. அருமையான மனைவியையும், ஆற்றலும், அன்பான பிள்ளைகளையும் பேறாகக் கொண்டவர். அவரது இந்த செயல்களுக்கு ஒத்துழைப்புக்களை அவரது குடும்பப் பின்னணி வலு சேர்க்கிறது என்பார்கள். கற்ற பள்ளிக் கூடம் களமமைத்து வழிநடத்த ஏதுவாகியது.

**தமிழ் பாடசாலைகளில் மாற்றம்.**

திருகோணமலை மாவட்டத்தில் சில தமிழ் பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக மாற்றம் பெற்றன. அதற்கான திட்டங்களைத் தீட்டிச் சந்தர்ப்பங்களைப் பார்த்திருந்தனர். உப்பாறு றோ.க.தமிழ் வித்தியாலயம் பறிபோனது. தமிழ் தலைமை ஆசிரியர் இடமாற்றத்தினால் அடுத்துஇருந்த முஸ்லிம் ஆசிரியர் முஸ்லிம் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்தது மட்டுமல்லாது முஸ்லிம் பாடசாலையாக பெயரையும் மாற்றிச் செயற்பட்டார். காலங்காலமாக இயங்கி வந்த றோமன் பாடசாலை மறைக்கப்பட்டுவிட்டது. அதற்காகக் குரல் கொடுத்த தமிழ் ஆசிரியரையும், சில இளைஞர்களையும் வன்செயலில் காணாமல் ஆக்கிவிட்டனர். நான் திருகோணமலை மாகாணக் கல்வித்திணைக்களத்துக்கு இடமாற்றம் பெற்று வந்ததும், முதல்வேலையாக, உப்பாறு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் விபரங்களைத் தேடிப் பிடித்து உரிய சுற்று நிருபங்களுக்கு ஏற்ப படிவங்களை நிரப்பி பாடசாலையை மீளத்திறக்கும் வழிகளை முன்வைத்தேன். திரு. தியாகராஜா அனுமதித்தார். பாடசாலையைத் திறந்தோம். அது பின்னர் சின்னத் தோட்டத்தில் நன்றாக இயங்குகிறது.

**தமிழ் மொழித்தினம்.**

"ஒரு பணிமனையில் சேவை வழங்கல் முக்கியமானது. கல்வித் திணைக்களத்தில் அவதானிப்போடும், விரைந்தும் சேவைதனை வழங்கவேண்டும். இவ்வளவு காலமும் இதனைப் பொறுப்போடு கடமையாற்ற வல்லவர்கள் இல்லை. இதனை நீங்க பொறுப்பெடுங்க. இவற்றுள் பாடசாலைச் சீருடை, இலவச பாடநூல் வழங்கல், தமிழ் மொழித்தினம், பாடசாலையிடையே போட்டிகளை நடத்துதல் போன்றன அடங்கும். அவற்றைச் சரியான நேரத்தில் சரிவரச் செய்ய வேண்டும் என்பதனைப் புரியவைத்தார். அத்துடன் நமது அடையாளத்தையும் பதிக்க வேண்டும் என்றார். அதனை அடிப்படையாகக் கொண்டு 1994ல் தமிழ்மொழித் தின விழா மலரை புதுமைகள் நிறைந்ததாக **'சுவைத்தேன்'** மலராகப் படைத்தோம். அது ஒரு கனதியான மலராக விரிந்தது. அதனைத் தொடர்ந்து 1995ல் தமிழ்மொழித் தினவிழா **'பார்த்தேன்'** மலராக விரிந்தது. திரு. தியாகரதாஜா மாகாணக் கல்விச் செயலாளராக நியமனம் பெற்றார். அந்த இடத்துக்கு செல்வி. பெரியதம்பி வந்தார். 1996ல் தமிழ்மொழித் தினவிழா மலராக **'மலைத்தேன்'** வெளிவந்தது. திரு. தியாகராஜா ஓய்வு பெற்றுச் சென்றார். நானும் ஓய்வு பெற்றேன். கனதியான தமிழ் மொழித் தினவிழா மலரும் மறைந்துவிட்டது.

எந்தப் போட்டிகள் எங்கு நடந்தாலும் அங்கு அமரர்.க.தியாகராஜா வந்து நிற்பார். எந்தக் குறைகளும் ஏற்படாதவாறு கண்காணிப்பார். 'நீங்கள் தவறு விடமாட்டீர்கள் என்று தெரியும். உங்களை அறியாமல் ஏதாவது தவறுகள் விட்டால் அதற்கு நானே பொறுப்பாவேன்'. என்று கூறுவார். இதனால் எந்த அலுவலரும் உன்னிப்பாகத் தனது கடமையில் கண்ணாயிருந்தார்கள். அவர் மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலங்களில் இலவசச் சீருடை விரைந்தும், சீராகவும் விநியோகிக்கப்பட்டது. மத்திய அமைச்சில் இவற்றையிட்டு அறிக்கைகள் அனுப்பப்படும். அமைச்சின் அதிகாரிகளும் திருப்தியுடன் எம்மோடு பயணித்தார்கள்.

எங்கள் மாகாண மட்டத்தில் இருந்து அகில இலங்கை மட்டப் போட்டிகளில் போகும்

நிகழ்ச்சிகள் அதிகமானவை முதலிடங்களைப் பெற்றுள்ளன. அதே நேரத்தில் அகில இலங்கை மட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணமே முதலிடத்தைப் பெற்று வந்தது. வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு இந்நிலை பல ஆண்டுகளாக் கிடைத்துள்ளமையையும் கவனத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும். இவை அனைத்துக்கும் மூலகாரணம் அமரர் க. தியாகராஜா அவர்களின் முகாமைத்துவ ஆளுமையே ஆகும்.

**வெற்றி பெற்ற மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களை கௌரவித்துப் பரிசளித்தல்.**

அகில இலங்கை மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற தனி, குழு நிழ்ச்சிகளில் பங்கு கொண்ட மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தலா ரூபா.1000, ரூபா.750, ரூபா.500 வங்கியில் வைப்புச் செய்து வங்கிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. குழு நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஒவ்வொவருக்கும் அதே தொகையைக் கொண்ட கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இந்தப் பாராட்டு வைபவம் வெகுசிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெறும் நிகழ்வாக இருந்தது. பங்கு கொண்ட பாடசாலையின் அதிபர்களையும், பயிற்றுவித்த அத்தனை ஆசிரியர்களையும் பாராட்டிப் பரிசுகள் அளிக்கப்பட்டன. இவை அமரர் தியாகராஜாவின் காலத்தில் நடந்த மறக்க முடியாதவையாகும்.

**கல்விச் செயலாளராக..**

மாகாணக் கல்வி அமைச்சைக் கொண்டு செல்ல வேண்டியதற்கு நல்லதொரு தலைவரைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பொருத்தமானவராக அமரர் தியாகராஜா முன்வந்தார். அது ஒரு பொன்னான காலம் என்று சொல்லுவார்கள். எதுவித தளம்பலும் இல்லாது அமைச்சு சென்றது. இலக்கிய விழாவில் சில நல்ல நிகழ்வுகள் நடந்தன. சிறுவர் இலக்கியப் பரிசளிப்பு நிகழ்வு பற்றி சில நல்ல முன்மொழிவுகளை வைத்தபோது அதனை ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்தினார். சிறுவர் இலக்கியத்தில் சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள் சிறுவர் நாவல்கள். எனப் பிரித்துப் பரிசு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

**ஆளுநரின் இணைப்பாளராக..**

கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற போதும் அன்றைய ஆளுநர் திரு.காமினி. பொன்சேகா அவர்கள் ஆளுநரின் கிழக்கு மாகாண இணைப்பாளராக அமரர் தியாகராஜாவை நியமித்தார். தன்னால் முடிந்தவரை மக்களுக்காக தனது சேவையைச் செய்தார்.

**சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவராக...**

சுவாமி விபுலானந்தர் அருந்தமிழ்ப் புலவராகத் திகழ்ந்தார். அவர் இராமக்கிருஷ்ண சங்கத் துறவியாக இருந்த போது பிரபுத்த பாரதம் என்ற சஞ்சிகைக்கு ஆசிரியராகவும் இருந்தார். ஏராளமான கட்டுரைகளை எழுதினார். ஆங்கிலத்திலும், தமிழிலும் அவை வெளிவந்தன. ஆளுமை மிக்க கவிதைகளையும் எழுதிக் குவித்தார். ஆங்கிலக் கவிதைகளை தமிழில் மொழி பெயர்த்தார். அவை யாவும் பத்திரிகைகளில் வெளிவந்தன. மட்டக்களப்பைக் களமாகக் கொண்டு விபுலாநந்த நூற்றாண்டு விழாச் சபை உருவாகியது. அதன் தலைவராக அமரர்.க.தியாகராஜா தேர்ந்தெடுக்கப்பட்டார். வித்துவான் சா.இ.கமலநாதன் அதன் செயலாளராக செயற்பட்டார். திரு.செல்வநாயகம், திரு.செபரத்தினம் போன்ற அறிஞர்கள் உறுப்பினராக விளங்கினர். சுவாமி. விபுலாநந்தரின் ஆக்கங்களை தேடியெடுத்தார்கள். மொழி ரீதியாகவும், காலத்தைக் கருத்தில் கொண்டும் வரிசைக் கிரமத்தில் ஒழுங்கு படுத்தினார்கள். தொகுத்தும், வகுத்தும் அச்சகத்தில்

ஒப்படைத்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒப்புநோக்கி செவ்வை பார்த்தார்கள். எத்தனை வேலைப்பளு இருப்பினும் சுவாமி விபுலாணந்தரின் ஆக்கங்களை வெளிக் கொண்டு வருவதில் ஆர்வமாக இருந்தார். அவற்றை பல தொகுதிகளாக தமிழ் கூறும் நல்லுலகத்துக்குத் தந்த பெருமையும், கௌரவமும் அதன் தலைவராகச் செயற்பட்ட அமரர் க.தியாகராஜாவையே சாரும். அவர் இல்லையேல் சுவாமி விபுலாணந்தரின் நூல்கள் வெளிவந்திருக்கும் என்பது ஐயமே.

'தக்கார் தகவிலர் என்பது அவரரவர்
எச்சத்தால் காணப்படும்'

என வள்ளுவன் வகுத்த வான்மறை கூறும். இவ்வுலகில் ஒருவர் செய்கின்ற செயல்கள் மூலம் அவரது நிலையை உணரமுடியுமாம். அமரர் தியாகராஜா செய்த செயல்கள்தான் இவ்வுலகில் அவர் விட்டுச் சென்ற எச்சங்களாக விளங்குகின்றன. அதனாலேயே அவர் மனிதருள் மாணிக்கமாக நினைவு கூறப்படுகிறார்.

**- கேணிப்பித்தன் ச.அருளானந்தம்**





# கல்வியாளர் திரு.தியாகராஜா



வாழ் நாளில் நமக்கு சிலரை பற்றிய ஞாபகங்கள் அடிக்கடி வரும் அப்படி என் நினைவுகளுடன் கலந்த ஒருவராக மட்டக்களப்பில் மதிப்பு மிகு கல்வியாளராக திழ்ந்தவர் வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய திரு. தியாகராஜா அவர்கள்.

மட்டக்களப்பில் மாறாத பற்றும் கிழக்கு மண்ணின் வளர்ச்சியில் அக்கறையோடு செயல் பட்ட ஒரு சேவையாளர். பல தலைமைப் பதவிகளை ஏற்று தான் ஏற்ற பணிகளை சிறப்பாக பணியாற்றியவர். சிவானந்த வித்தியாலய அதிபராக கடமையாற்றிய காலங்களில் அவரது கண்டிப்பான வழிகாட்டல் பல சாதனையாளர்களை உருவாக்கியது. அன்றைய நாட்களில் கிழக்கு மாகாணம் முழுவதுமிருந்து மாணவர்கள் சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்றனர் அவர்களுக்கான சிறப்பான வழிகாட்டியாய், இருந்தவர் திரு. தியாகராஜா அவர்கள்.

மட்டக்களப்பு மாநகர மேயராக கடமையாற்றி அரசியலிலும் முத்திரை பதித்தவர். மக்கள் மீதும் நகரின் வளர்ச்சியிலும் அக்கறையோடு செயல் பட்ட முன்னோடி அவர். மாவட்ட கல்விப்பணிப்பாளர், மாகாண பணிப்பாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என பல பதவிகளிலும் தன் கடமையின் மூலம் அந்தந்த பதவிகளுக்கு சிறப்புச் சேர்த்தவர். சுவாமி விபுலானந்தர் ஆய்வுகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, விபுலானந்த நூற்றாண்டு விழா சபையின் தலைவராக பொறுப்பேற்று, வெளிவராமல் இருந்த விபுலானந்தரின் ஆக்கங்கள் வெளிவர தீவிரமாக செயற்பட்டவர். கிழக்குப்பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக கடமையாற்றிய காலங்களில் பல்கலைக்கழக வளர்ச்சியில் அவர் பங்களிப்பு முக்கியம் பெற்றது.

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதற்கான முயற்சியில் முன்னின்று உழைத்தவர்களில் இவரது பணி குறிப்பிடத்தக்கது.மட்டக்களப்பின் பாரம்பரிய கலைகளில் மிகுந்த நாட்டம் கொண்டவர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை நடத்திய உலக நாடக தின விழாவின் பிரதம அதிதியாக அழைத்து அண்ணருக்கு மதிப்பளித்தது. அவரது மகள் பவானி சுகப்பிரியா அவரது பெயரால் கொழும்பில் ஒரு நடனப்பள்ளியை அமைத்து சிறப்பாக கலைச் சேவையாற்றி வருகிறார்.

அவருக்கும் எனக்குமான தொடர்பு 1991ம் ஆண்டிலிருந்து அவர் இறக்கும் வரை நெருக்கமானதாகவே இருந்தது.

கிழக்கு மண் மறக்க முடியாத கல்வியாளர் திரு.தியாஜராஜா அவர்கள். வாழ்நாள் சாதனையாளரான அவருக்கு கிழக்குப் பல்கலைக் கழகம் அவர் வாழ் நாள் சாதனையை கௌரவிக்கும் விதமாக கௌரவ கலாநிதி பட்டம் கொடுத்து சிறப்புச் சேர்க்க வேண்டும்.

– **பேராசிரியர். பால.சுகுமார்**

மேனாள் புல முதன்மையர், கலை கலாசாரப் புலம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



திரு. தியாகராஜா அவர்கள் இன்று இருந்திருந்தால் அவருக்கு இப்போது 87 வயதாகியிருக்கும், தொண்டு கிழவராக பழைய நினைவுகளை அசை போட்ட படி அல்லது பழைய நினைவுகளை மறந்து போனவராகக்கூட அவர் வாழ்ந்திருப்பார்.

அந்நிலை வாழும்போதே இறந்த நிலை, அது யாருக்கும் வரக்கூடாது அந்நிலையடையாமல் அவர் நினைவோடு சென்று விட்டார் அவர் ஒரு முழுமையான மனிதர். வாழ்வின் முதிர்ச்சியடைந்து முதிர்ந்த நிலை அடைந்த பின்னரே இறந்தார்.

அது ஓர் அமைதியான மரணம்.

காலையில் வழமைபோல எழுந்தார், மனைவி தந்த தேநீரை அருந்தியபின் வெளியே சென்றார், நடைபயிற்சி முடித்துத் திரும்பினார், நடைப்பயிற்சியின் போது ஏற்பட்ட உடல் மாற்றங்களை அவர் அவதானித்திருக்கவும் கூடும், அவற்றை மனைவியிடம் சொல்லுமுன் சரிந்து விட்டார் உயிர் பிரிந்து விட்டது.

செய்தி கேட்டு உடன் அவர் வீடு விரைகிறோம் வழக்கமாக நாம் செல்லும் வீடு அது. சனம் நிறைந்து நிற்கிறது. அவர் அருமை பெருமையாக லட்சியக் கனவோடு வளர்த்த பவானியை அவர் பிள்ளைகளை அக்கா என நாம் அழைக்கும் அவர் மனைவியைக் காண்கிறோம்.

அழுகை ஒலி கேட்கிறது. பலரும் பதறி நிற்கிறார்கள். பவானி அவர் இழப்பை ஏற்கவில்லை. அவள் அழவில்லை. அப்பா அப்பா என அப்பாவை அழைத்து அழைத்து அவரது உயிர் பிரிந்த உடலோடு பேசிக் கொண்டிருந்த காட்சி மனதில் இப்போதும் நிழலாடுகிறது .

ஆம் அவர் இறந்து விடவில்லை இப்போதும் நம்மோடு வாழ்வதாகவே எண்ணப்படுகிறது இறந்தும் இறவாதோர் மிக மிகச் சிலரே, அவர்களுள் அவரும் ஒருவராகி விட்டார்.

# உழைப்பின் உதாரணபுருஷர்

## அமரர். திரு.க.தியாகராஜா

தனது வாழ்வின் முதிர்ந்த நிலைக்கு வந்த பின்னரே அவர் இறந்துள்ளார் என்றேன் ஆம் மிகக் கனிந்த நிலைக்கு உயர்ந்த பின்னரே இறந்துள்ளார் போல எனக்குப் படுகிறது.

அவர் தக்கார் எனும் சிறப்பைப் பெற்றுள்ளார்.

தக்கார் என்போர் யார்? இது வினா. இதற்கு

தக்கார் தகவிலர் என்பது அவர்தம்

எச்சத்தாற் காணப்படும்.

என்று விடை தருவார் வள்ளுவர்.

எச்சம் என்பதன் பொருள் யாது? உரையாசிரியர்கள் பல விளக்கமளிப்பர். எச்சம் அவர்கள் உலகுக்கு விட்டுச் செல்லும் நன்மக்கள், புத்திரபாக்கியங்கள் என்பது ஒரு கருத்து.

எச்சம் என்பதற்கு இன்னொரு கருத்துமுரைப்பார்: வாழ்பவர்கள், வாழ்ந்தவர்கள் மக்கள் மனதில் நிலைக்குமாறு விட்டுச்செல்லும் அவர்தம் செயல்கள் என்பது அது.

எந்த எச்சங்கள் மூலம் திரு. தியாகராஜா தக்கார் எனும் சிறப்பைப் பெறுகிறார்?

அவர் மேற்சொன்ன இரண்டு எச்சங்களையும் கொண்டுள்ளார். நன்மக்களையும் எச்சங்களாகக் கொண்டுள்ளார். நற்செயல்களையும் எச்சங்களாகக் கொண்டுள்ளார். எனவே அவர் மக்களால் மதிக்கப் படவேண்டிய, பாராட்டப்பட வேண்டிய 'தக்கார்' ஆகின்றார்.

அவரின் ஆரம்ப வாழ்வு, வளர்ச்சி, சேவை என்பன அவர் எச்சங்களைப் பறைசாற்றி நிற்கும் வாழ்க்கைப் படிகளாகும்.

**ஆரம்ப வாழ்வு:**

திரு. தியாகராஜா அவர்கள் 20.03.1935இல் மட்டக்களப்பு, கல்லடியில் பிறந்தார். தந்தையார் வைரமுத்து கந்தையா, தாயார் வேலாயுதர் சின்னப்பிள்ளை குடும்பத்தின் ஒரே வாரிசு தியாகராஜா. இதனால் வீட்டின் செல்லப்பிள்ளையாக வளர்ந்தார். அவரின் சுறுசுறுப்பும், குறும்புச் செயல்களும், அழகும் ஊரவரின் கவர்ச்சிக்குரியனவாயின. இதனால் குடும்பத்திற்கு மாத்திரமன்றி சுற்றத்தவரினதும், ஊரவரினதும் செல்லப்பிள்ளையுமானார்.

மருதநிழச் சூழல், அமைதியும், எளிமையும் நிறைந்த கிராமம். கோயிலும், சடங்கும், உடுக்கடியும், பறையொலியும் கலந்த கலை நிறை கிராம வாழ்க்கை.

இராமகிருஷ்ண மிஷனின் கண்பார்வை பெற்றதால், இராமகிருஷ்ண விவேகானந்த தத்துவங்கள் வேரூன்றத் தொடங்கிய சூழல் நிறை ஊர். சுவாமி விபுலாநந்தரின் பாதம் படிந்ததால் கல்வி சுரக்கத் தொடங்கிய காலம்.

இந்தச் சூழலே சிறுவனான தியாகராஜனை வளர்த்தெடுத்தது. ஐந்து வயதிற்குள் மனதிற் பதியும் எண்ணக்கருக்களே, ஒருவரின் ஆளுமையை நிர்ணயிப்பதுடன் அவர் வளரவளர சூழலுக்கிணைய அவையும் வளருகின்றன என்பர் உளவியலாளர்.

மண்பற்று மிக்கவராக, மக்கள் நலன்களில் அக்களை கொண்டவராக, வறுமைப்பட்ட மக்கள் பக்கமே என்றும் நிற்கும் மகனாக. சமத்துவ நோக்குமிக்க, முற்போக்காளனாக, சமூக சேவையாளனாக, கல்வியியலாளனாக, கலைமகளின் காதலனாக திரு. தியாகராஜா பிற்காலத்தில் வளர்ச்சிபெற மேற்சொன்ன கிராம அடித்தளமே காலாயிற்று.

ஆரம்பக் கல்வியினை கல்லடி உப்போடை விவேகானந்த மகா வித்தியாலயத்திலே 1940 தொடக்கம் 1944 வரை சிறுவன் தியாகராஜா பயின்றான். இடைநிலைக் கல்வியினை 1945 தொடக்கம் 1952 வரை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் பெற்றான். பல்கலைக்கழக புகுமுகக் கல்வியினை 1953 தொடக்கம் 1954 வரை அன்றைய அரசினர் கல்லூரியான இன்றைய மட்/இந்துக் கல்லூரியிற் பெற்றான். இவ்வண்ணம் 2 வருடங்கள் மட்டக்களப்புச் சூழலிற் தன் கல்வியினைப் பெறும் வாய்ப்பு தியாகராஜாவுக்குக் கிடைத்தது.

ஆரம்ப இடைநிலைக் கல்விகளைப் பெற்றமை இராமகிருஷ்ண மிஷனின் அனுசரணையில் இயங்கிய பாடசாலைகளில், இடைநிலைக் கல்வி முக்கியமாக சிவானந்த வித்தியாலயத்தில் கட்டுப்பாடும், ஒழுக்கமும் மிகுந்த கல்விக்கூடம் சிவானந்த வித்தியாலயம். சுவாமி விபுலானந்தரின் தூர நோக்குமிக்க கல்விக் கொள்கைகளை அடித்தளமாகக் கொண்ட நடைமுறைகளிற் பெற்ற பயிற்சி. சிறுவன் தியாகராஜனின் அடிமனதில் உறைந்திருந்த விழுமியங்களை மேலும் வளர்த்தன. செம்மை செய்தன, நெறிப்படுத்தின. மட்டக்களப்பு அரசினர் கல்லூரித் தொடர்பு கல்லடியில் வாழ்ந்த தியாகராஜனை மட்டக்களப்போடு மேலும் பிணைத்தது.

இங்கெல்லாம் கல்வி பயிற்றிய திருவாளர்கள்: நாகையா, முருகுப்பிள்ளை, திருநாவுக்கரசு, குகதாசன், பண்டிதர் வி. சீ. கந்தையா, க. கணபதிப்பிள்ளை, S. அம்பலவாணர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, B.T. சின்னையா என்போர் தியாகராஜனின் ஆசிரியர்களாயினர். மனம் கவர்ந்தனர். அவர்களின் ஆளுமையும், நடத்தையும், வழிகாட்டலும் மாணவன் தியாகராஜனின் மனதையும் குணநலன்களையும், செயற்பாடுகளையும் மேலும் வளர்த்தன. சிவானந்த வித்தியாலயத்தில் நடராஜனந்தாஜீ இவர் மனம் கவர்ந்த துறவியானார். அவரின் வாழ்வும், செயற்பாடும் இவருக்கு பெரும் ஆதர்சமாயின. சுவாமி ஜீவானந்தாஜீயைத் தமது ஆன்மீகக் குருவாகக் கொண்டு ஒழுகிவந்தார் தியாகராஜா.

20 வயது நிரம்பிய திரு. தியாகராஜா பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையிற் சித்திபெற்று பட்டப்படிப்பும் பெற 1955இல் பேராதனை செல்கிறார். பேராதனையில் 1955 தொடக்கம் 1958 வரை பட்டப்படிப்பினை மேற்கொள்கிறார். அவர் அங்குபெற்ற கலைத்துறைப் பாடங்கள் அவரின் உலக ஞானத்தை மேலும் வளர்க்கின்றன. இடதுசாரிச் சிந்தனைகளும், சமத்துவக் கொள்கைகளும் அவரை ஈர்க்கின்றன. அவரின் உலக நோக்கு மேலும் விரிவடைகிறது.

சிவானந்த வித்தியாயம் விதைத்துவிட்ட சமத்துவக் கொள்கை என்ற விதை பல்கலைக் கழகத்தில் இன்னொரு சூழலில் பொதுவுடமை விருட்சமாக வளர ஆரம்பிக்கிறது.

பல்கலைக்கழகத்தில் பயின்ற காலையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் ஜயசூரியா, பேராசிரியர். குணசேகர, வணபிதா இமானுவல் என்போரால் மிகவும் கவரப்பட்டார். அவர்களின் பெரும் அன்பிற்குரிய மாணவனுமானார். கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் இவருடன் பயிலும் மாணவராயினர்.

பேராசிரியர் வித்தியானந்தன் 1956, 57களில் தயாரித்த 'துரோகிகள்' நாடகத்தில் இவர் பங்குகொண்டார். அதில் நடித்தும் இருந்தார் இதனால் இளமையில் இவரிடம் ஊறிக்கிடந்த கலை ஆர்வம் மேலும் வளரச் சந்தர்ப்பம் கிட்டியது.

**வளர்ச்சி - கல்விப் பணி :**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து கலைமாணிப் பட்டத்தினை 1958இல் பெற்ற பின்னர் அவரது கல்விப்பணி ஆரம்பமாகிறது. அன்றைய சூழலில் பல்கலைக்கழகக் கல்வி பெற்று வெளியேறியோர் நிர்வாகத் துறைகளை நாடிச் சென்றனர். இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை எடுத்து (C.A.S) நிர்வாக சேவையில் அன்று D.R.O , G.A போன்ற அதிகாரம் மிகுந்த உயர் . பதவிகளை அடைந்தனர். செல்வாக்கும், வசதிகளும் மிக்க கவர்ச்சிகரமான பதவிகளாக அன்று அவை இருந்தன.

திரு. தியாகராஜா அவற்றை விரும்பவில்லை. அவர் கல்விப் பணியினையே விரும்பினார். அவரின் சமூக நலனாட்டமும், சிறுவயதில் விதையாகி இளமையில் மரமான சமூக நலனாட்டமும் அவரை அன்று இவ்வண்ணமே சிந்திக்க வைத்தது. அதனால் நமக்கு ஓர் கல்வித் தலைமை கிடைத்தது.

1958 தொடக்கம் 1961 வரை கல்முனை பாத்திமாக் கல்லூரியின் உதவி ஆசிரியராக இளைஞர் தியாகராஜா பதவி ஏற்றார். தொடர்ந்து 1961 தொடக்கம் 1969 வரை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரான தியாகராஜா அங்கு ஆசிரியராகப் பணியாற்றுகையில் செய்த சேவைகள் ஏராளம். பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கு இவர் காலத்திற் பல மாணவர்கள் தெரிவாயினர். படிப்பித்தல் மூலம் தம் ஆளுமையினாலும், செயற்பாங்கினாலும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பெரிதும் கவர்ந்தார். இதனால் 1969இல் இவ் வித்தியாலயத்தின் அதிபர் பதவி இவரைத் தேடி வந்தது.

இவர் தலைமையில் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் பல வளர்ச்சியைக் கண்டது. வருடாவருடம் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் அனுப்பப்பட்டனர்.

அதிபர் பணியுடன் சிறிது காலம் மட்டக்களப்பு நகர வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார். எனினும் சிவானந்தாவின் வளர்ச்சிக்காக வட்டாரக் கல்வி அதிகாரி பதவியை விட்டுவிட்டு தொடர்ந்தும் சிவானந்தா அதிபராகக் கடமையாற்றினார்.

பாடசாலைக் கல்விப் பணியினால் மாணவர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் இருந்த மதிப்பு அவரை மட்டக்களப்பின் மேயராக்குமளவும் உயர்ந்தது.

1971 ஜனவரி 01 தொடக்கம் 1973 ஜூன் 01 வரை மட்டக்களப்பின் மேயராகக் கடமைபுரிந்து மட்டக்களப்பு நகரின் வளர்ச்சிக்கு உழைத்தார். எனினும் அவரின் அடிப்படை கல்விப்பணியே எனக்கண்டு மீண்டும் கல்வித் துறைக்குள் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டார்.

அக்கரைப்பற்று இராமகிருஷ்ண வித்தியாலயத்துக்கு அதிபராகச் சென்ற தியாகராஜா அங்கு பணியாற்றுகையில் உயர்தர விஞ்ஞானப் பிரிவினை ஆரம்பித்து மருத்துவ, பொறியியல் பீடங்கட்கு மாணவர்களை அனுப்பி வைத்தமையை இவரது சாதனையாகக் குறிப்பிடலாம்.

மீண்டும் சிவானந்த வித்தியாலயத்திற்கு அதிபராக வந்த திரு. தியாகராஜா தாய்வீடான சிவானந்தாவுக்காக மேலும் உழைத்தார். சிவானந்தாவின் பௌதீக வசதிகள் மேலும் பெருப்பிக்கப் பட்டன. சிவானந்தா கட்டுப்பாடுமிக்க ஆண்கள் பாடசாலை. எனினும் கல்லடியிலிருந்து நகரப்புறப் பாடசாலைகட்கு உயர்தரக் கல்வி பெறச் செல்ல வாய்ப்புக் குறைந்த மாணவிகளது நலனுக்காக உயர் வகுப்புகளில் (A.L) பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆண்கள் பாடசாலையிற் பெண்களா? என்ற எதிர்ப்பை இவர் எதிர்நோக்க வேண்டியிருந்ததும், தூர நோக்குமிக்க திரு. தியாகராஜா அதனையும் எதிர்கொண்டார்.

சிவானந்த வித்தியாலயத்தில் அதிபராக இருந்து பணி செய்த தியாகராஜருக்கு மட்டக்களப்பு கல்வித் கல்வித் திணைக்களத்திற் கல்வி அதிகாரி பதவி கிடைத்ததும் பதவியைப் பயன்படுத்தி மட்டக்களப்பு கல்லூரிகளின் கல்வி மேம்பாட்டை உயரவைத்தார்.

பின்னர் அவர் அதே கல்வித் திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரியானார். அன்றைய மாவட்டக் கல்விப் பணிப்பாளரான ஜனாப் R.D. ஹனான் அவர்களது விசேட வற்புறுத்தல் கல்வி அலுவலகப் பணியினை ஆரம்பிக்கக் காலாயிருந்தது. பின்னர் மாவட்டக் கல்விப் பணிப்பாளரானார்.

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும், மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்த தியாகராஜர் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரானார். தனி ஒரு மாவட்டத்திற்கன்றி இவர் சேவை மாகாணம் முழுவதற்கும் கிடைக்கலாயிற்று.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கான மாகாணக் கல்வித் திணைக்களத்தை நிறுவி அதன் முதல் மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியமையை இவ்விடம் நினைவு கூறலாம். இக்காலத்தில் சிங்கப்பூர், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குப் பயிற்சியின் நிமித்தம் சென்றுவந்தார்.

இவரது சேவையும் அர்ப்பணிப்பு மிக்க வேலையும், நேர்மையும் இவருக்கு செயலாளர் பதவியினை காலடிக்குக் கொணர்ந்தது. வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரானார். திரு. தியாகராஜா தன் பதவிக்காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவர்செய்த சேவைகள் அனந்தம்.

தனி ஒரு சிவானந்தாவின் தாய் இப்போது பன்நூற்றுக் கணக்கான பாடசாலைகளின் தாய் அவர். கிராமப்புறப் பாடசாலைகளும், வசதி குறைந்த பாடசாலைகளும் அவரின் தனிக்கணிப்பிற்குள்ளாயின. நேர்மையும், உண்மையும், அர்ப்பணிப்பும் மிக்க ஆசிரியர்களும். அதிபர்களும் இனம் காணப்பட்டனர். ஊக்கமும், முன்னுரிமையும் அளிக்கப்பட்டன.

பலத்த சோதனைகளின் மத்தியில் மாகாணக் கல்வி அமைச்சில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருந்த ஊழல் கைங்கரியங்களை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். இதனால் பணம்படைத்த, அரசியல் வலுவுள்ள சக்திகளின் விரோதங்களைத் தாராளமாகச் சம்பாதித்தார்.

மக்கள் நலனாட்டம் கொண்டு, கஷ்டப்படும் மக்கள்பால் அன்புகொண்டு செயலாற்றிய தியாகராஜருக்கு, இராமகிருஷ்ணர், விவேகானந்த தத்துவமும், சமத்துவ நெறிச் சித்தாந்தமும், உண்மையும், நேர்மையும் மிக்க ஆசிரியர்களும், நண்பர்களும், அவரையும் அவர் நேர்மையையும் குணாதிசயங்களையும் புரிந்து கொண்ட மேலதிகாரிகளது துணையும் பலங்களாக அமைந்தன. அந்தப்பலம் தந்த துணிவில் காரியங்கள் பலவற்றைச் செய்து முடித்தார்.

10.06.1996 இல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

மாணவனாகத் தன் கல்வி வாழ்வை ஆரம்பித்து
உதவி ஆசிரியனாக தன் கல்வி வாழ்வைத் தொடர்ந்து
அதிபராக நிமிர்ந்து,
வட்டாரக் கல்வி அதிகாரியாக உயர்ந்து
பிரதம கல்வி அதிகாரியாக வளர்ந்து
மாவட்டக் கல்விப் பணிப்பாளராக நீண்டு
மாகாணக் கல்விப் பணிப்பாளராக அகன்று
வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக ஓங்கி
நின்ற தியாகராஜா உழைப்பின் உதாரண புருஷராகிறார்.

ஆசிரியராயிருந்து அத்துறைக்கே செயலாளரான வளர்ச்சி சேவையின் வளர்ச்சி. அது ஒரு வரலாற்று வளர்ச்சியுமாகும்.

இது பதவி ரீதியாக அவர் பெற்ற வளர்ச்சி. எனினும் மக்களுக்கு இப்பதவிகள் மூலம் உதவி ரீதியாக அவர் புரிந்த பணிகளிற்தான் அவரின் 'தக்கார்' என்ற பட்டம் தங்கி நிற்கிறது.

அரசாங்க சேவையினின்று ஓய்வுபெற்ற பின்னரும் தம் வேலையினின்றும் ஓய்வு பெற்றாரில்லை. ஓய்வு என்பது அவர் அறியாதது. 'ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்.' என்பது பாரதி வாக்கு.

தன் சேவை மனோபாங்குக்கு ஏற்ப சேவா லங்கா நிறுவனத்தின் ஆலோசகராக பின்னர் பதவியாற்றினார் . சமூகசேவை உணர்வுமிக்க இவரின் இப்பணியால் தமிழ் சமூகம் மாத்திரமன்று ஏனைய சமூகங்களும் இலங்கை முழுவதும் பயன் பெறுகின்றன.

**சமூகப்பணி:**

மண்ணோடும் ஊரோடும் தன்னைப் பிணித்துக் கொண்ட திரு. தியாகராஜா கடந்த 20 வருடங்களாகக் கல்லடி ஆலய பரிபாலன சபையின் பொருளாளராகக் கடமையாற்றியவர் புயலினால் ஏற்பட்ட பேரழிவின் பின் ஆலயங்களின் புனரமைப்பில் இவர்கொண்டபங்கு மிக முக்கியமானது.

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராகக் கடமையாற்றிய காலத்தில் மாநகர சபைக்கென தனியான கொடி, இலச்சனை என்பன உருவாக்கப்பட்டன. கல்வியியலாளரான இவர் மேயராக இருந்த பொழுதுதான் மட்டக்களப்பு நூலகத்தில் சிறுவர் நூலகப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது.

மதிப்பும், செல்வாக்கும், வசதியும் மிகுந்த மேயர் பதவியை அதிபர் பதவி கிடைத்ததும் இவர் ராஜினாமாச் செய்தார். அந்த ராஜினாமா தான் நமக்கு ஓர் அருமையான செயலாளரைப் பிற்காலத்தில் தந்தது.

**விபுலானந்த நூற்றாண்டு விழாச்சபைத் தலைவர்**

விபுலானந்த நூற்றாண்டு விழாச் சபைத் தலைவராக இருந்த இவர் ஆற்றிய பணிகள் அதிகம். விபுலானந்த அடிகளை மிகப்பரந்த அளவில் அறிமுகம் செய்தமை மிக முக்கிய நிகழ்வாகும் பாடசாலை மாணவர்க்கு விபுலானந்தரை அறிமுகம் செய்தல் சுவாமி பற்றிய நினைவுச் சொற்பொழிவுகள், அடிகளார் பற்றிய வரலாற்று நூல், அடிகளார் நூற்றாண்டு நினைவாக விழாப் பெரும் மலர், நினைவுப் பரிசில்கள் என்பன விபுலாநந்த நூற்றாண்டு விழாச்சபையின் பணிகளாகும்.

சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்களை தொகுதி ஒன்று தொகுதி இரண்டு என பல தொகுதி களாக நூல் வடிவிற் கொணர்ந்தமை இச் சபையின் தலையாய பணி எனலாம்.இன்று எம்மிடம் விபுலானந்தர் ஆக்கங்கள் மிக அதிகம் உள்ளன. இதற்கு மூல காரணஸ்தர் தியாகராஜா அவர்களே

இப் பணியில் இவருக்கு திரு. வ. சிவசுப்பிரமணியமும், வித்துவான் சா. இ. கமலநாதனும், திரு. கே. கார்த்திகேசும், ஆசிரிய சிரோமணி திரு. த. செல்வநாயகமும், திரு. காசுபதி நடராஜாவும் பெரும் துணை புரிந்தனர்

அனைவரையும் இணைத்து உரியவர்களை இனங்கண்டு முரண்பாடுகளைத் தவிர்த்து இவர் செயற்பட்ட விதமே விபுலாநந்த நூற்றாண்டு விழாச் சபையின் வெற்றிக்குக் காலாயிற்று. இக் கால கட்டத்துள் வந்த நூல்களுக்கு இவர் எழுதிய முன்னுரைகள், நினைவுச் சொற்பொழிவுகட்குத் தலைமை தாங்கி இவர் நிகழ்த்திய உரைகள் என்பன இவரின் ஆழமான புலமைக்குச் சான்று பகர்வன கல்வி கலாசார அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் கலாசாரத்துறை வளர்ச்சிக்கு இவர் எடுத்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கன.

**கூத்துக்களையும் அண்ணாவிமார், கலைஞர்களின் உரைகளையும் ஆவணப்படுத்தல்**

மட்டக்களப்பின் நாட்டுக்கூத்துக் கலையை ஆவணப்படுத்தும் முயற்சிகளை இவர் ஆரம்பித்தார். அவரோடு இம்முயற்சியில் ஈடுபடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பிரதேசக் கலைகள் மீது அவர் கொண்டிருந்த பற்றையும் நான் கண்டேன்

முழு நீள வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை வீடியோவில் பதிவு செய்வதுடன், அண்ணாவிமார், கூத்து நடிகர், ஒப்பனை கலைஞர்களைப் பேட்டி கண்டு அப்பேட்டியினை வீடியோவில் பதிந்து ஆவணப்படுத்தலும் இதனுள் அடங்கும்.

11 வீடியோ நாடாக்களில் இவை பதிவு செய்யப்பட்டு ‘மட்டக்களப்பு கூத்து ஆவணம்’ என்ற பெயரில் வெளியிடவும் பட்டது . இதற்கு ஆரம்ப கர்த்தாவாக நின்று உதவியதுடன், கூத்துக்களை விடிய விடிய இருந்து பார்வையிட்டு ஊக்கிய அவரின் மனோபாங்கு விசாலமானது.

உத்தரவிட்டு விட்டு சொகுசு அறைக்குள் உறங்கியவர் அல்ல அவர்.

**அவர் ஓர் களப்போராளி**

அத்தோடு நாட்டுக் கூத்து பற்றிய ஆய்வு நூல்களை வெளியிடும் முயற்சியிலும் அவர் ஆரம்ப அடிகளை எடுத்து வைத்துள்ளார். இதன் காரணமாக மட்டக்களப்பு கூத்துக்கள் சம்பந்தமான ஆய்வு நூலொன்று அச்சில் வெளிவரவிருந்தது.

செயலாளராக இவர் கடமையாற்றிய காலத்தில் கலாசார அமைச்சின் விரிவாக்கம் செய்ய இவர் எடுத்த நடவடிக்கைகள் குறிப்பிடற்குரியன.

### கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முக்கிய உறுப்பினரான பேரவையின் (COUNCIL) உறுப்பினர் இவர். நீண்ட காலமாக அப்பேரவையின் உறுப்பினராக இருந்ததுடன் பேரவையில் ஏற்படும் சிக்கலான பிரச்சனைகட்குத் தீர்வு காண்பதற்கு இவர் வழங்கிய ஆலோசனைகளும் முக்கியமானவை. அப்போது நான் கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியாக இருந்தேன். அதனால் தியாகராஜருடன் பல வருடங்கள் பேரவையில் அமர்ந்திருக்கும் வாய்ப்பும் அவரது ஆளுமையும் எனக்குத் தெரிய வந்தது. கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் தீவிர அக்கறை செலுத்தி அதற்காக உழைத்தும் வந்தார்

பீடாதிபதியாக இருந்த போதும் பதவி நிலை காரணமாக பேரவை உறுப்பினராக இருந்தேன், ஓய்வு பெற்றபின்னர் ஆறு வருடங்கள் பேரவை உறுப்பினராக கடமை புரிந்தேன். பல குணாதிசயங்களை அங்கு நான் சந்தித்துள்ளேன், அவர்களுள் தியாகராஜர் தனித்துவமாகத் தெரிந்தார்

அவர் கவுன்சிலின் அங்கத்தவராக இருந்தபோது நிகழ்ந்த ஓர் நிகழ்வு ஞாபகம் வருகிறது. ஒரு முறை உபவேந்தர் தெரிவு ஒன்றில் ஒரு சிறு தவறு நடந்து விடுகிறது, சிலருக்கு அதில் உடன்பாடில்லை ஆனால் தியாகராஜர் அதனை உடனே பேரவை உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டினார். சிலர் ஏற்றனர் பலர் ஏற்கவில்லை. அதனால் அது கவனிக்கப்படாமல் போனது.

அதற்காக அவர் தன் முடிவை விட்டு விடவில்லை உடனடியாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு பேரவையில் நடந்த பிழைகளைச்சுட்டிக்காட்டி துணிவோடு ஒரு கடிதம் எழுதினார்,

உடனடியாக ஆணைக்குழு அக்கடிதத்தின் ஞாயப்பாட்டை உணர்ந்து மீண்டும் ஒரு முறை உப வேந்தர் தெரிவு நடத்துமாறு கட்டளை பிறப்பித்தது. அதனால் அவர் சிலரது அதிருப்திக்கும் எதிர்ப்புக்கும் உள்ளானார்.

அதுவல்ல இங்கு முக்கியம்.

ஒரு அநீதி நடக்குமிடத்து தனியே நின்றாயினும் அதனை எதிர்க்கும் அவரது பண்பே நான் இங்கு கூற வருவது.

இதுபோல பல நிகழ்ச்சிகள் எனக்கு ஞாபகம் வருகின்றன அவை எழுதப்பட வேண்டியவை,, அவரது அன்றைய வாழ்வு கிழக்குப் பல்கலைக்கழக கல்வி அபிவிருத்தி சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக வளர்ச்சி ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்திருந்தது

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நான் பீடாதிபதியாகவும் நுண்கலைத் துறைத் தலைவராகவும் பின்னர் விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக தலைவராகவும் பணிபுரிந்தபோது அவர் அளித்த ஆதரவும் ஊக்குவிப்பும் ஆலோசனைகளும் சோரும் போது கைகொடுத்து உற்சாக மூட்டிவிடும் தன்மையும் பற்றி மிக விரிவாக எழுதலாம்

நுண்கலைத் துறை நடத்திய உலகநாடகதின விழாவை பேரவை உறுப்பினராக இருந்து ஊக்கியதுடன் தினமும் வந்து கலந்து ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர் அவர். அங்கு நுண்கலைத் துறையால் உருவாக்கப்பட்டு இன்று பட்டமளிப்பு விழாவின் முன் செல்லும் இன்னிய அணியில் நாம் தமிழர் வாத்தியமான பாரம்பரிய வாத்தியங்களான பறை, உடுக்கு, மத்தளம் முதலான உள்ளூர் வாத்தியங்களை பாவித்தபோது எழுந்த சிறு சலசலப்பைக்கண்டு மாணவர் தயங்கியபோது நேரில் வந்து சந்தித்து ஆதரவும் பலமும் தந்தவர் அவர்

விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2003 ஆம் ஆண்டில் நாம் மட்டக்களப்பு தமிழகமும் இந்துப்பண்பாடும் எனும் மையப்பொருளில் ஓர் பெரும் கண்காட்சி செய்தபோது இராப்பகலாக வேலை செய்ய வேண்டி இருந்தது.

கல்லடியில் மிக அருகில் இருந்த அவர் இரவு நேரங்களில் சாரனையும் கட்டிகொண்டு

வந்து நிறுவகத்தில் வேலை செய்து கொண்டிருந்த எங்களோடு உறவாடி ஊக்கமளித்த அந்த இனிய நினைவுகளை எப்படி மறக்கலாம் ஒன்றா இரண்டா?

சொல்ல அதிகம் உள ஆனால் இது அதற்கான சந்தர்ப்பம் அன்று

மேற்சொன்ன அவரது இந்தத் துணிவும் பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு உற்சாகமூட்டி ஊக்குவிக்கும் பண்பும் அவரிடமிருந்து அனைவரும் கற்க வேண்டிய ஒன்றாகும்

**சமூகசேவை**

அவர் சேவாலங்கா நிறுவனத்தின் ஆலோசகராகப் பணிபுரிந்தபோது அவரது சமூக சேவை மேலும் விரிந்தது, சமூக அபிவிருத்தி, புனர்நிர்மாணம், சத்துணவூட்டம், சூழற்பாதுகாப்பு, வறுமை நீக்குதல், முன் ஆரம்பக்கல்வி என்பன இந்நிறுவனத்தின் பிரதான இலக்குகளாக இருந்தன.

கல்வி ஆளுமையும், ஆர்வமும், சமூகசேவை மனப்பாங்கும் கொண்ட திரு. தியாகராஜா அவர்கட்கு கல்விப்பணியும், சமூகப்பணியும் செய்யும் ஒரு நிறுவனத்தின் ஆலோசகர் பதவி கிடைத்தது தற்செயல் அன்று. அவரது வரலாற்றுப் போக்கின் தர்க்க ரீதியான வளர்ச்சி இப்படித்தான் செல்கிறது, செல்லும். இதனை நாம் விதி எனலாம். ஆம், அது வரலாற்று விதி.

**கணவன் தந்தை பாட்டன்**

இத்தனைக்கும் அப்பால் அவர் ஓர் அன்பான கணவர், அருமையான அப்பா, பாசம் மிக்க பாட்டன். அவரது மனைவி ரஞ்சிதம். அன்போடும், ஆர்வத்தோடும் விருந்தினரை உபசரித்து, கணவனின் காரியம் யாவிலும் கைகொடுத்து அவருக்கு என்றும் சக்தியாக, துணையாக நின்ற அவரது சரிபாதி. அவரது அன்பான கணவர் இவர்.

இவருக்குப் பிள்ளைகள் எழுவர். சந்திரிகா, ராஜகலா, ரவி தியாகேந்திரன், பவானி, சரவணபவன், முரளிதரன், நிர்மலா. 4 பெண்கள், 3 ஆண்கள்

மூத்த மகள் அவுஸ்திரேலியாவில், இன்னொரு மகள் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் பயின்று அங்கேயே விரிவுரையாற்றியவர். நடனம் இவரது பிரதான துறை. இவரது எச்சங்கள் இவை. பிரகாசிக்கின்ற, பிரகாசித்துகொண்டிருக்கின்ற எச்சங்கள் இவை.

பவானி மிகசிறந்த சிருஸ்டித்துவம் மிக்க ஓர் நாட்டியக் கலைஞர் தனது நாட்டிய நாடகங் களால் உலகக் கவனத்தை ஈர்த்தவர், இவரது நாட்டிய நாடகம் சிங்கப்பூரில் மேடையேறியபோது இலங்கைக் கலைஞர் திறமையை அவ்வூர் வியந்து நோக்கியது.

அவரது மகன் சரவணபவன் இன்று மட்டக்களப்பு மாநகரசபை மேயர். தந்தை வழியில் மேயராக பணிபுரியும் இவர் மட்டக்களப்பு நகரின் முன்னேற்றத்திற்குப் புரியும் பணிகள் பல.

தியகராஜரிடம் உறைந்து கிடந்த கலை ஆர்வமும் சமூக ஆர்வமும் அவரது எச்சங்களான பிள்ளைகள் மூலம் சமூகத்திற்குபாய்கிறது என நாம் கொள்ளலாம்

இவர்களது அன்பான அப்பா இவர்.

இவருக்குப் பேரப்பிள்ளைகள் பதின்மூன்று. இவ்வகையில் பாட்டனும் ஆகிவிட்டார். ஒருவகையில் கணவனாய், தந்தையாய், பாட்டனாய் முழு குடும்பவாழ்வு வாழ்ந்தது மட்டுமன்றி தன் சமூகசேவை களாலும், கல்விப்பணிகளாலும் முழு வாழ்வு வாழ்ந்து மறைந்தவர் தியாகராஜா அவர்கள்.

வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளரான பெரும் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. தியாகராஜா, தான் வகித்த பதவிகளுள் மிகச் சுதந்திரமானதும், மனதிற்கு இன்பமானது மான பதவிகள் உதவி ஆசிரியர், அதிபர் பதவிகளே என்று கூறுவதுடன், தான் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்த காலங்களும் அவையே என நினைவு கூறுவார்.

ஒரு முறை என்னுடன் பேசும் போது நான் வகித்த பதவிகளில் அதிபர் பதவி, கல்வி அதிகாரி பதவி, மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி, மேயர் பதவி, செயலாளர் பதவி என்பன, நான் கேட்டுப் பெற்ற பதவியில்லை எனக்கூறினார். தொடர்ந்த அவர் "நான் கேட்ட பதவிகள் எனக்குக் கிடைக்காமற் போனதுண்டு" எனச் சிரித்துகொண்டு சுவாரஸ்யமாகச் குறிப்பிட்டார்

கல்விசார் பதவிகள்அவரைத் தேடி வந்தன என நாம் இதன் மூலம் அறிகின்றோம். அவர் கல்வித் துறைக்கே உரியவரானார்.

தொகுத்துரைப்பின் கல்வித்துறையில் ஆசிரியர் தொடக்கம் , அதிபர், உதவிக்கல்விப்பணிப்பாளர், கல்விப்பணிப்பாளர், கிழக்கு மாகாண கல்விச் ...... செயலாளர் வரை,

சமூகத் துறையிலே சாதாரண பிரஜை, தொடக்கம் மாநகரசபை மேயர், கிழக்குப்பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் வரை

குடும்பத்துறையில் கணவன் தொடக்கம் பாட்டன் வரை

பல மட்டங்களிலும் பிரயாணம் பண்ணி பிறந்த காலம் தொடக்கம் இறக்கும் வரைக்கும் ஒரு முழுமையான வாழ்வை வாழ்ந்து மடிந்தவர் திரு. தியாகராஜா. அவரது பணிகள் சமூகம், கல்வி, எனப் பரந்து சென்றாலும் அவரது. கல்விப் பணியே அனைத்திலும் ஊடுபாவாகச் செல்லும் பணியாக இருந்தது

அவரது பெரும் பணி கல்விப்பணியாக இருந்த போதும் சிறுவர் நூலகம் தான் அவருக்குப் பெரிதாகத் தெரியும். விபுலாநந்தரின் அறிவுசால் பெரும் பணிகளைப் போற்றினாலும் அவரது யாழ்நூல்தான் தியாகராஜரது பேச்சில் எப்போதும் பெரும் இடம் பெறும். மட்டக்களப்பு கூத்துக்களை அவர் வளர்க்க முயன்றாலும் கூத்து நூல் ஆய்வு வெளியீடு தான் அவருக்குப்பெரிதாகத் தோன்றும்

அவர் ஓய்வு பெற்றபின் சேவாலங்காவில் சேவைபுரிந்தாலும் அங்கும் அவரது நோக்கு முன் ஆரம்பக் கல்விதான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை தோன்ற வேண்டும் என்பதை பேரவையில் அடிக்கடி வலியுறுத்தியதோடு மாத்திரமன்றி அது உருவாவதற்குச் சகல உதவிகளையும் புரிந்தவர் தியாகராஜா..

தன்னை ஒரு கல்வியிலாளராகவே வளர்த்துக் கொண்ட திரு.தியாகராஜா அவர்கட்கு கல்விசார் பட்டம் கொடுத்துக் கௌரவித்தனர் மட்டக்களப்பின் சிவானந்த வித்தியாலய பழைய மாணவர்கள் அவர்கள் வழங்கிய விருது **வித்தியா ஜோதி** என்பதாகும்

என்னை அன்று அவர்கள் திரு.தியாகராஜா பற்றி ஓர் பேருரையாற்ற அழைத்திருந்தனர் அவ்வுரையில் நான் அவருக்கு அளிக்கும் பட்டங்களில் கல்வித்துறைசார் இப்பட்டமே பொருத்தமானது என்று கூறியமை ஞாபகம் வருகிறது


அவ்வுரையின் இறுதியில் நான் ஒரு கேள்வியை எழுப்பினேன்.

"தக்கார் யார்? என்பதே அக்கேள்வி.

அதற்கு விடையும் உரைத்தேன். திரு.தியாகராஜாவின் வாழ்க்கைக்கு அவ்விடைகள் பொருந்துவதாகவும் கூறினேன். தன் கல்வி, கலை, சமூக செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் அவர் எச்சங்களாக விட்டுள்ளார் அது மாத்திரமல்ல திரு.தியாகராஜா அவர்கள். புகழ்மிக்க புத்திரர்களையும் எச்சங்களாக விட்டுள்ளார்.

இந்த எச்சங்களை விட்டுள்ள திரு. தியாகராஜா அவர்களைத் தக்கார் என ஏற்றி அவருக்குப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் இவ்விழாவில் கலந்து கொள்வதையிட்டு நானும் பெரு மகிழ்வெய்துகிறேன்" எனக்கூறி பேச்சை முடித்தமையும் ஞாபகம் வருகிறது. என்றும் நினைவுகூறக்கூடிய பெரும் மனிதர் அவர் தொடர்பாக வெளிவரும் தியாகராஜம் என்ற இந்நினைவு மலர் தியாகராஜாவின் வரலாற்றை கூறும் என்பது மிகையல்ல.

**- பேராசிரியர். சி. மௌனகுரு**



அப்பா!

இந்த ஒரு சொல்லுக்குத்தான் எத்தனை சக்தி, எத்தனை கம்பீரம்! "அப்பா" என்று நாங்கள் அழைக்கும் போது எங்கள் மனதில் நிற்கும் அந்த கம்பீரமான மாமனிதரை, எங்கள் அப்பா என்று சொல்லும் பாக்கியத்தைக் கொடுத்த அந்த இறைவனுக்கும், எங்கள் அன்பு அம்மாவிற்கும் முதலில் கோடானு கோடி நன்றிகள்!

எங்கள் அப்பா எங்களுக்கு ஒரு வழிகாட்டியாக, நண்பனாக, ஆசானாக, தெய்வமாக இருந்து, அன்பையும் கண்டிப்பையும் சமமாகக் கலந்து, எங்களை வழி நடத்தி, எங்களை வாழ்க்கையில் உயரச் செய்த அன்பான ஒரு ஜீவன். அந்த அன்பான அப்பாவை எதிர்பாராமல் இழந்து அம்மாவும் நாங்கள் ஏழு பிள்ளைகளும் தவித்தது எங்களுக்கு மட்டும்தான் தெரியும்.

அப்பாவைப் பற்றிய எங்கள் சிறுவயது ஞாபகங்கள் எண்ணிலடங்கா! எதைக் கூறுவது, எதைத் தவிர்ப்பது என்று மனதில் போராட்டம்! எல்லாம் மனதில் பசுமரத்தாணியா கப் பதிந்துள்ள நினைவுகள்!

எங்கள் சிறு வயது ஞாபகங்களில் ஒன்று... ஒவ்வொரு நாளும் காலையில் அம்மா ஒரு பெரிய கிண்ணத்தில் அப்பாக்கு முட்டைக் கோப்பி கொடுப்பது வழக்கம். அம்மா கொடுக்கும் முட்டைக் கோப்பியை, எங்கள் ஏழு பேருக்கும் ஒரு வாய் கொடுத்து, அம்மாக்கும் கொடுத்து தானும் குடிப்பார். ஒரு நாளும் தான் மட்டும் தனியாக அருந்த மாட்டார்.

அந்த நாட்களில் அப்பா, அம்மா, நாங்கள் ஏழு பிள்ளைகள் ஒன்றாக, எங்கள் வீட்டு முற்றத்து மண்ணில் அமர்ந்து, சந்தோசமாகக் கதைத்து, சிரித்து இருந்த நினைவு இப்போது நினைத்தாலும் இனிக்கின்றது. பூரணை நாட்களில், இரவில் கல்லடிக் கடற்கரைக்கு எல்லோரும்

சென்று சந்தோஷமாக இருப்போம். அப்பா என் தம்பிகளுக்கு சின்ன நண்டு பிடிக்க சொல்லிக் கொடுப்பார். ஒவ்வொரு மார்கழி விடுமுறைக்கும் எங்களை மாங்கேணித் தோட்டத்திற்குக் கூட்டிச் சென்று இயற்கையை அனுபவிக்க எங்களை ஊக்குவித்தார். அப்பாக்கு தோட்டக்கலையில் நிறைந்த ஆர்வம், அதை எங்கள் வீட்டு வளவில் மிளிரும் பசுமை பறைசாற்றும்.

அப்பா எங்களை பறவை தன் குஞ்சுகளை சிறகுக்குள் வைத்துக் காப்பது போல் கவனமாக வளர்த்தார். எங்கள் ஏழு பிள்ளைகளுக்கும் செல்லமாக பட்டப் பெயர் சூட்டி எங்களோடு விளையாடினார்.அதை நாங்கள் இன்றும் சொல்லி பரிகாசம் பண்ணுவோம். அப்பாவின் சைக்கிள்/ மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டதும் ஆரவாரத்துடன் வாசல் கதவைத் திறக்க ஓடுவது எவ்வளவு சந்தோஷமான நினைவு! பிறகு, அவர் தேனீர் அருந்தும் போது பக்கத்தில் இருந்து அவர் சொல்லும் கதைகளைக் கேட்பது தனி ஒரு சுகம்! அந்த இனிய நினைவுகளை அம்மாவும் நாங்கள் ஏழு பிள்ளைகளும் எண்ணாத நாட்களே இல்லை!

அப்பா எங்கள் ஏழு பிள்ளைகளுக்கும் கற்பித்த மிக சிறப்பான பண்பு எல்லாரையும் சாதி, மத பேதமின்றி சமமாக மதிக்கும் குணம். எவர் வந்தாலும் வீட்டுக்குள் இருத்தி உபசரிப்பார். தன்னலமற்ற சமுதாயத் தொண்டன் அவர், தான் சார்ந்த சமூகம் மட்டுமன்றி அனைவரும் கல்வித்தரத்தில் உணரவேண்டும், அவர்தம் சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டும், அவர்தம் வாழ்க்கை தரம் உயர வேண்டும் என்ற மிகப் பரந்த மனப்பாங்குடைய வித்யா ஜோதி அவர். அதே சமயம், யாரும் பிழை செய்தால் முகத்திற்கு நேரே கூறி விடுவார்.

மனிதர்களிடம் மட்டுமல்ல, வாயில்லா ஜீவன்களிடமும் அவர் அதீத அன்பு காட்டினார். எங்கள் வீட்டில் வளர்ந்த செல்லப் பிராணிகள் எல்லாம் முற்பிறப்பில் ஏதோ புண்ணியம் செய்ததால்தான் அப்பாவிடம் வளர்ந்தன என்று சொல்ல வேண்டும். எங்கள் வீட்டில் குறைந்தபட்சம் இரண்டு செல்லப் பிராணிகள் எப்போதும் இருந்தன.

ஆசிரியர்,
உதவி அதிபர்,
அதிபர்,
பிரதம கல்வி அதிகாரி,
மாவட்ட கல்விப்பணிப்பாளர்,
மாகாண கல்விப்பணி ப்பாளர்,
வடகிழக்கு மாகாண கல்விச்செயலாளர்,

ஆளுனரின் இணைப்பாளர் என்று எத்தனையோ உயர்ந்த பதவிகளை அப்பா வகித்திருந்தாலும், எங்கள் அம்மாவின் அன்புக் கணவர், எங்கள் அன்பு அப்பா என்ற உறவுதான் அவர் வகித்த உயர்ந்த பதவிகள்! அவரை அப்பாவாக அடைய நாங்கள் ஏழு பேரும் நிறைய புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அப்பா, உங்களின் ஆளுமைத் திறனுக்கு முன் நாம் துரும்பாகி நிற்கிறோம். எதுவுமே கைமாறாகப் பெறாமல் கடைநொடியில் கடுகதியில் காலன் கூட்டிச் சென்றுவிட்டான். எதற்குமே உங்களிடம் ஆலோசனையும் அறிவுரையும் கேட்கும் இடத்தில் இன்றுவரை வெற்றிடமே. இருப்பினும், உங்களாசியால் உங்கள் பெயரில் உருக்கொண்டது "தியாகராஜர் கலைக்கோவில்" பரதநாட்டிய கலைக் கூடம். தாங்கி நிற்பது தங்கள் பெயரல்லவா, அதனாலேயே அது சிறப்பாகத் தன் பரதக்கலைப் பணியை செய்கின்றது. உங்களின் சமூக அக்கறையே உங்களை அரசியலிலும் தடம் பதிக்க வைத்தது. கறைபடியும் அந்த சகதிக்குள் சிறுதுளி கறைபடியாது கரையேறிய ராஜராஜ சோழன் அல்லவா நீங்கள். இன்று நீங்கள் அமர்ந்த அதே மாநகர முதல்வர் சிம்மாசனத்தில்,

ராஜேந்திர சோழனாக, கலகக்காரர்களின் சிம்ம சொப்பனமாக சிலிர்த்து நின்று தங்களின் கனவு வித்துக்களை விருட்சமாக்குகிறான்.

அப்பா, உங்கள் சமூக சேவைப் பற்று பற்றி அறிந்தவர் பலர். ஆனால், எவருக்கும் தெரியாமல் நீங்கள் செய்த உதவிகள் எத்தனை, எத்தனை! உங்களிடம் உதவி பெற்றவர்கள்தான் எத்தனை! நீங்கள் எங்களுக்கு கூறியவை இன்னும் காதில் ஒலிக்கின்றன அப்பா! "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம், வலதுகை கொடுப்பது இடதுகைக்கு தெரியாமல் செய்ய வேண்டும், ஊரார் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்", இப்படிக் கூறி எங்களுக்கும் சமூக சேவையில் ஆர்வத்தீயை வளர்த்தீர்கள். அது இன்று நாங்கள் புலம் பெயர்ந்து, கடல் கடந்து பிறநாடுகளுக்குச் சென்றும் உங்கள் பெயரால் ஏழைகளுக்கு உதவும் படி எங்களை நெறிப்படுத்தியுள்ளது அப்பா.

சிலர் கூறுவார்கள் பெண் குழந்தைகளுக்குத் தங்கள் அப்பாதான் முதல் ஹீரோ என்று, ஆனால் எங்கள் ஏழு பேருக்கும் அப்பாதான் எப்பவும் முதல் ஹீரோ! நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் திரைப்படங்களைப் பார்க்கும் போது, எங்களுக்கு அப்பாதான் திரையில் தெரிவார்! அதே கம்பீரம்! அதே ஆணழகன் தோற்றம்! எங்கள் அப்பாக்கு நிகர் அப்பாதான். இப்போதும் எங்கள் சினேகிதர்கள் சொல்லுவார்கள், எவ்வளவு வடிவான ஆண் உங்கள் அப்பா என்று! எங்களுக்கு எவ்வளவு பெருமிதமாக இருக்கும் அப்போது! அந்த கடை வாய்க்குள் குழியும் குறும்புச் சிரிப்பு, சந்தோசமாக சிரிக்கும் போது சிவக்கும் முகம், எங்களுக்குப் புத்திமதி சொல்லும் போது தெரிந்த பாவம் எல்லாம் என்றும் எங்கள் நினைவை விட்டு அகலாது.

எங்கள் அப்பா ஒரு நல்ல ஓவியர்! அவரின் கைவண்ணத்தை எங்கள் வீட்டு நெற்பெட்டகத்திலும் மார்கழி மாதத்தில் எங்கள் வீட்டு சுற்று மதிலில் படிந்த பாசியிலும் அவர் வரைந்த பல சித்திரங்கள் பறைசாற்றின. அதை நாங்கள் குழந்தைகளாக வியப்போடு ரசித்தது இப்போதும் எங்கள் மனதில் பசுமையாய்!

அப்பா, உங்கள் ஏழு குழந்தைகளும், பேரக்குழந்தைளும் நீங்கள் பெருமை கொள்ளும் விதத்தில், வெவ்வேறு துறைகளில், கடல் கடந்தும் உங்கள் பெயர் சொல்லி, உங்களதும், அம்மாவினதும் ஆசீர்வாதத்தால் இன்று தலை நிமிர்ந்து நடக்கின்றோம். உங்கள் கனவுகளை நாங்கள் எங்களால் முடிந்தளவு நிறைவேற்றுவோம் அப்பா.

இப்படி இன்னும் எத்தனையோ உள்ளது, ஆனால் அப்பாவைப் பற்றிச் சொல்ல ஒரு பக்கம், ஒரு புத்தகம் போதாது!

அப்பா, நீங்கள் மறைந்து இத்தனை ஆண்டுகள் சென்றும் அந்த வலி மறையவில்லயே. தெய்வமாக இருந்து எங்களை இன்றும் வழிகாட்டி, வாழ வைக்கும் எங்கள் அன்பு அப்பாவின் நினைவு என்றும் அழியாதது.


ஓம் சாந்தி!!!


**உங்கள் செல்லமகள்**
**ரதிக்குட்டி**
உங்கள் ஏழு அன்புச்
செல்வங்களின் சார்பாக

# தியாகராஜர் கலைக்கோயில்







திகழ் சுடையன் நடம் போற்றும் தியாகராஜா கலைக்கோவில், கல்வி உலகுக்காய் செம்மை வயசமைத்த சிறந்த சிந்தனையாளர் தியாகராஜா அவர்கள். கல்வித்துறையில் பணிப்பாளராய் இருந்த காலம் கிழக்கின் சிறந்த காலம். பணி என்ற சொல்லிற்கு பொருள் கொடுத்தவர். அறிவுக் கண்களை திறந்தது மட்டும் ஐயா தியாகராஜரின் செயல் முடிவல்ல. அவர் மிகச்சிறந்த கலைஞன், மிகச் சிறந்த எழுத்தாளர் தனது ஆசிரியப் பணியை மட்டுநகர் சிவானந்தா கல்லூரியில் தொடங்கிய காலத்தில் பலப்பல நாடகங்களை ஆற்றுகை செய்த நாடகக் கலைஞர். கூத்துப் பிரியர் நாட்டுக் கூத்து வளர வேண்டும் என்பதில் மிக அக்கறை கொண்டவர். ரதி என்ற புனைப்பெயரில் எழுத்துலகம் நிறையவுமாய் எழுதி தமிழாட்சி செய்தவர் என்றும் பசுமை மாறாத கிராமிய மணம் தழுவும் வாழ்க்கையாளர், உள்ளம் கலையாய் செயல் அறிவாய் வாழ்ந்தவர். அவரது மகள் பவானி குகப்பிரியா அவர்கள் சிறந்த ஆடற் கலைஞர், சிறந்த நடன ஆசிரியர். ஆசிரியர் என்ற பதமும் கலைஞர் என்ற பதமும் வேறானவை அவர் கலைஞராகவும் ஆசிரியராகவும் திகழும் ஆற்றல் பெற்றவர்.

தி/ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் கலை வரலாற்றில் அவரது காலம் திருகோணமலைக்கும் பெருமை சேர்த்த காலமாகும். தந்தையின் மறைவுக்குப் பின்பாக கிட்டிய ஆண்டில் தியாகராஜா கலைக்கோயில் உருப்பெற்றது. ஆங்காங்கு கலைக்கோயில் இடம் பதித்து ஈழத்தலைநகரில் கலைக் கோலோச்சும் தியாகராஜா கலைக்கோவில் கலைக்கும் தமிழுக்குமாய் ஆற்றி வரும் பங்களிப்பு வியந்து போற்றத்தக்கது. கலை, இறை, சமூகம் என்றதொரு பார்வையில் கலை, தமிழ், இறை என்றதொரு பாதையில் கலை, தமிழ், சமூகம், இறை என்ற பொருள் கண்டு அதன் வழி செல்கிறது. தியாகராஜா கலைக்கோயில் ஆளுமை மிகு படைப்புக்களாக அரங்கேற்றிய சிவகாமி சபதம், நேற்று இன்று நாளை, காரைக்கால அம்மையார், நந்தனார், வில்லூன்றிக் குறவஞ்சி போன்ற ஆடல் கதைப் படைப்புக்கள் பரதக்கலை வரலாற்றில் பேசப்படவேண்டிய முன்னின்று நோக்க வேண்டிய அரங்காட்டிகளாகும்.

ஆடற் கலையை அதன் இலக்கணம் மாறாமல் அடுத்த சந்ததிக்கும் கொடுக்கும் அதேவேளை இலக்கணம் அறியாது இனிது கலை விருப்பம் கொள்ளும் உள்ளங்களுக்கும் கலை சொல்லும் கதை என்ன என்று சமூக நெஞ்சங்களுக்கு ஆடற்கலையை எடுத்துச்செல்லும் பெரும்திறன் தியாகராஜா கலைக்கோவிலுக்கு உண்டு. காலம் அறிந்து கலைக் காட்டும் உலகம் இது. காலத்தை தொலைத்து விடும் இந்நிலை கலையையும் தொலைத்து விடும் தருணம் இது. ஆனால் காதலால் கலை வடிப்பது தியாகராஜா கலைக் கோவில் காதலுல் கலையில் நிலைத்தல் உண்டு. உயிரை அணைத்தல் உண்டு, உலகை பிணைத்தல் உண்டு, அன்பு திளைத்தல் உண்டு, உணர்வில் செழித்தல் உண்டு, உணர்வில் செழித்தல் உண்டு, அறிவை பெருக்கல் உண்டு. ஆடலால் காதல் செய்து அரும்பணி ஆற்றுகிறது தியாகராஜா கலைக் கோவில்.

**தவத்திரு அகத்திய அடிகள்**
தென்கயிலை ஆதினம்
திருகோணமலை.



# தந்தையே
# எனது ஆசானும்
# வழி காட்டியும்...



எனது தந்தையார் ஆகிய அமரர்.கந்தையா தியாகராஜா அவர்களது வாழ்வியல் பற்றி வெளியீடு செய்யப்படவுள்ள நூலிற்கு அவரது மகனும் மட்டக்களப்பு மாநகர சபையின் நகர பிதாவுமாகிய எனக்கு அவரது நினைவுகளை பகிர்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு அளவில்லா ஆனந்தமடைகின்றேன்.

அவர் 7 பிள்ளைகளின் பொறுப்புமிக்க தந்தையாக இருந்தார். இதில் நான் அவரது 5வது மகனாவேன்.

அவர் என்மீது ஏதோவோர் அடையாளத்தைக் கண்டு கொண்டவராக தான் தமது சொத்துக்களைப் பராமரிக்க செல்கின்ற இடங்களுக்கெல்லாம் என்னையும் கூடவே அழைத்துச் செல்வார். அதேபோன்று சந்தை, வயல், தோட்டம், கால்நடை பட்டிகள் என எல்லா இடங்களிற்கும் என்னையும் சிறு வயது முதலே அழைத்துச் சென்றதுடன், நாளடைவில் அங்கு வேலை

செய்பவர்களுக்கான கூலிகளை வழங்குதல், சந்தையில் பொருட்கள் வாங்குதல் என்பவற்றுக்கு என்னை தனியாக அனுப்பி செய்வித்ததன் மூலம் என்னை இந்த உலகத்தில் உள்ள சவால்களை எதிர் கொள்ளக்கூடிய வலிமை உள்ள ஒருவனாக உருவாக்கினார்.

அதேவேளை நான் தற்போது இருப்பது போல் நீயும் பிற்காலத்தில் இருக்க பழகிவிடாதே எனவும், ஏனெனில் தற்காலத்தில் நேர்மை, ஊழலற்ற இறுக்கமான செயற்பாடு என்பவற்றுக்கு இருக்கின்ற அங்கீகாரமும் கௌரவமும் எதிர் காலத்திலும் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. இதனால் நீ என்னைப் போன்று செயற்பட முற்படுவாயாகின் பல சவால்களையும், பிரச்சனைகளையும் எதிர் கொள்ள வேண்டிவரும் என அடிக்கடி என்னிடம் கூறுவார்.

அவரது இல்லறம் தொடர்பான செயற்பாட்டினைப் பொறுத்த வரையில், வெளியில் தொழில் ரீதியில் எவ்வாறான நெருக்கடியான நிலையிருந்தாலும் அவை எதனையும் வெளியில் காட்டிக் கொள்ளாது ஒரு நாளில் ஒரு வேளையாவது குடும்பத்தினர் அனைவரையும் ஒரே மேசைக்கு அழைத்து அவர்களுடன் இருந்து கதைத்து பேசி உணவருந்துவார்.

அவருடன் நெருக்கமாக இருந்து அவதானித்ததன் காரணமாக அவரிடமிருந்த நேர்மை, நிலையான தீர்மானம் ஒன்றில் நிலைத்து இருத்தல், அவரது சகோதரங்களுடன் அதேபோன்று எனது தாயின் சகோதரங்களுடனும் அவர் கொண்டிருந்த அன்னியோன்னியம் என்பனவற்றால் நான் கவரப்பட்டவனாக இருந்தேன்.

இதனாலோ என்னவோ எமது குடும்பத்தில் அம்மப்பா உள்ளூராட்சி சபையின் தவிசாளராக பதவி வகித்திருந்தார். அதைத் தொடர்ந்து எனது தந்தையார் 1970 ல் அவர் மீது நம்பிக்கையும் விசுவாசமும் கொண்ட சமூகத்தினரால் மாநகர சபையின் முதல்வராக்கப்பட்டிருந்தார்.

அவர் இருந்த மாநகர முதல்வர் என்ற அதே பதவியில், அதே கதிரையில் அவரது மகனாகிய நானும் 48 வருடங்களின் பின்னர் அதே சமூகத்தினரால் கொண்டு வந்து அமர்த்தப் பட்டிருக்கின்றேன். இந்த இடத்தில் எனது தந்தை கூறிய மற்றொரு விடயமும் எனக்கு ஞாபகத்தில் வருகின்றது. அதாவது “நீ இருக்கின்ற கதிரையில் அதன் பின்னராக இருக்கின்றவர்கள், உன்னையும் உனது செயற்பாட்டையும் நினைத்து கதைக்குமளவிற்கு உனது செயற்பாடு உன்னதமாக இருக்க வேண்டும்” எனவும் அறிவுரை கூறுவார்.

அதேபோன்று எனது தந்தை வகித்துச் சென்ற சமய, சமூக பணிகளும் அவருக்கு வழங்கப் பட்டிருந்த அதே பதவிகளுடன் அப்பிரதேசம் சார்ந்த மக்களினால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவரால் என்னையும் இணைத்து மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செயற்பாடுகள் ஒவ்வொன்றும் என்னை முழு மனிதனாக கொண்டு வருவதற்கு புடம் போட்டதாகவே இருந்தது. இவை அனைத்திற்கும் அமரத்துவமடைந்த எனது தந்தையினது பெறுமதியான ஆசீர்வாதமே காரணமாக இருக்கலாம் என நம்புகின்றேன்.

**- திரு.தி. சரவணபவன்**
மாநகர மேயர்
மாநகரசபை, மட்டக்களப்பு.

# அமரர். திரு.
# க. தியாகராஜா அவர்களின்
# நினைவலைகள்




**1963**ம் ஆண்டு அமரர். திரு. க. தியாகராஜா அவர்கள் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டு இங்கு சேவையாற்ற தொடங்கிய திகதியிலிருந்தே அவரை எனக்குத் தெரியும். நான் பொது தராதரம், உயர்தரம் வகுப்பின் முதலாம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்ட போது அவர் எங்கள் வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். அக்காலப் பகுதியில் கலைப் பிரிவில் கல்வி கற்பது வேண்டத்தகாதது என அப்போதைய அதிபரினதும் பெரும்பாலான மாணவர்களதும் கருத்தாக இருந்தது. 8ம் வகுப்பிலிருந்து *(JSB)* பொதுத் தராதர சாதாரண தரத்திற்கு வகுப்புயர்வு செய்து போது விஞ்ஞானப் பிரிவு, கலைப் பிரிவுகளில் எதற்கு வகுப்பேற்றம் செய்யப்படுகின்றார் என குறிப்புப் புத்தகத்திலே *(Record Book)* தெரிவிக்கப்பட்டிருக்கும். கலைப் பிரிவிற்கு வகுப்பேற்றம் பெறுபவர்களில் 90% வீதமான மாணவர்கள் அதிபருடன் கதைத்து விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்து விடுவார்கள். முடியாதவர்கள் வேறு பாடங்களுக்கு

மாற்றம் கேட்டுப் பெற்றுக் கொள்வார்கள். கலைப் பிரிவிற்கு வகுப்பேற்றம் பெற்ற 27 பேர்களில் நான் மட்டுமே கிடைத்த பெறுபேற்றின் படி கல்வியைத் தொடர்ந்தேன். என்னுடன் வேறுபாடங்களில் இருந்து இடமாற்றம் பெற்ற மேலும் மூவர் சேர்ந்து கொண்டார்கள். முதலாம் வகுப்பில் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்ததால் போதிய வசதிகளோ வகுப்பறைகளோ நிர்வாகத்திற்கு செய்து தரப்படுவதில்லை. பாடசாலை கட்டிடத்தின் மூலையில் உள்ள விறாந்தை அல்லது ஓலைக் கொட்டில் ஒழுங்கு செய்து தரப்படும். இவ்வாறு பாடசாலை நிர்வாகத்தினால் ஒதுக்கப் பட்டவர்களாக இருக்கும்போது அமரர். தியாகராஜா இடமாற்றம் பெற்று வந்து வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். அவரின் நீண்ட நாள் முயற்சியில் கலைப்பிரிவு சாதாரண தரம், உயர் தரம் ஆகியவற்றிற்கு நிரந்தர வகுப்பறை கிடைத்தது.

மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்ட அவர்மீது மாணவர்களாகிய எங்களுக்கு பெரும்மதிப்பும் மரியாதையும் இருந்தது. நான்கு ஐந்து மாணவர்கள் தானே என அலட்சியமாக இருக்காது எங்களுக்கு சிறந்த முறையிலே கற்பித்தார். 1969ம் ஆண்டு ஐந்து மாணவர்களில் இருவர் பல்கலைக்கழக அனுமதி பெற்றோம். இதற்கு மிக முக்கிய காரணராக இருந்தவர் அமரர். தியாகராஜா எனின் அது மிகையாகாது.

பல்கலைக்கழகத் தேர்வின் பின்பும் அவருக்கும் எனக்குமிருந்த தொடர்பு நெருக்கமாக இருந்தது. நான் பேராதனை பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு கற்றுக் கொண்டிருந்த போது அவர் கல்வி டிப்ளோமா *(Diploma in Education)* கற்கைக்காக தெரிவு செய்யப்பட்டு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு வந்தார். அப்பொழுது எங்கள் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. பல்கலைக்கழகப் படிப்பை தொடர்வதற்காக கண்டிக்கு அருகாமையிலுள்ள கட்டுக்கெஸ் தோட்டையில் ஒரு முஸ்லீம் பாடசாலைக்கு அவருக்கு இடமாற்றம் கிடைத்தது. அங்கு அவர் செயற்பாட்டினால் மாணவர்களினதும் அதிபரினதும் பெரும் மதிப்பைப் பெற்றார்.

அப்போது தான் அவருடைய குடும்பத்தில் பெரும் சோதனையொன்று இடம்பெற்றது. அவருடைய குழந்தைகளில் மூன்றாவது பிள்ளைக்கு பெரும் சுகவீனம் ஏற்பட்டது. மட்டக்களப்பி லிருந்த வைத்தியர்கள் பலராலும் பிள்ளையை சுகமாக்க முடியாது போனதும் கண்டிக்கு கொண்டு சென்று அவரின் மனைவியின் உறவினரான வைத்திய கலாநிதி வரகுணமவர்களிடம் பிள்ளையைக் காட்டினர். பரிசோதனைகளின் பின்னர் ஏற்பட்டிருந்த சுகவீனம் மூளைக் காய்ச்சல் எனத் தெரியவந்தது. சகல முயற்சிகளையும் எடுத்தபின்னர் பிள்ளையைக் காப்பாற்றுவது கஸ்டமென கூறிவிட்டார். மிகவும் கவலையுடன் பாடசாலைக்கு சமூகமளித்த போது இவரின் முகத்தைப் பார்த்ததும் ஏதோ பெரும் கவலையில் இருக்கின்றார் என்பது அதிபருக்குப் புரிந்து விசாரித்த போது தனது பிள்ளைக்கு சுகவீனம் என்பதை கூறியிருக்கின்றார். அப்போது அதிபரான அந்த முஸ்லீம் பெரியவர் அங்கிருந்த அம்மன் கோயிலுக்குச் சென்று குடும்பத்துடன் வழிபடுமாறு கூறியிருக்கிறார்.

இவரோ ஒரு நாஸ்திகன். கோவில்களுக்குச் சென்றாலும் கும்பிடுவதில்லை. மகனின் சுகவீனத்தினால் பெரும் அதிர்ச்சியில் இருந்த இவர் மனைவியுடனும், பிள்ளையுடனும் குறிப்பிட்ட கோவிலுக்குச் சென்றிருக்கின்றார். கணவனும் மனைவியும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அம்மாளை கும்பிட்டுக் கொண்டிருக்கும் போது மகனின் முகத்தில் சோர்வு நீங்கி சிரித்ததை அம்மா பார்த்திருக்கின்றார். அன்றுடன் குழந்தை நோய் நீங்கி சுகமானது. அவரும் அன்றிலிருந்து தெய்வங்களை வழிபடத் தொடங்கிவிட்டார். கட்டுக்கெஸ்தோட்டையிலிருந்து இடமாற்றம் பெற்று மட்டக்களப்பிற்கு வந்த பின்பும் ஆண்டு தோறும் மகனுடன் குறித்த அம்மன் கோயிலுக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இவர் தனது கடமையில் கண்ணியத்துடனும் பொறுப்புடனும் நடந்து கொண்டாலும் மிக கண்டிப்பானவரும் கூட. இதற்கு உதாரணமாக இரு சம்பவங்களைக் கூறலாம். சிவானந்தா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய போது வழக்கம் போன்று பாடசாலை விடுதியை

நிர்வகிக்கும் பொறுப்பும் இவரிடமிருந்தது. மாணவர்கள் அனுமதியில்லாது பகலிலோ இரவிலோ பாடசாலையை தவிர எங்கும் செல்ல முடியாது. ஒரு நாள் இரவு சில மாணவர்கள் விடுதியை விட்டு கடலில் நண்டு அடிப்பதற்காக சென்றிருந்தனர். அலையினால் அள்ளுண்டு கரைக்கு வரும் நண்டுகள் அலையினால் கரைக்கு வந்த நீர் மீண்டும் கடலுக்கு செல்லும் போது வெறும் கரையில் நிற்கும். அவற்றை அடித்து பிடிப்பதைத்தான் நண்டடித்தல் என்பார்கள். இரவில் தான் இவ்வாறு நண்டுகளைப் பிடிக்கலாம். இளைஞர்கள் பொழுது போக்காக கடற்கரைக்குச் சென்று நண்டு பிடித்து அங்கேயே சமைத்து சாப்பிடுவது வழக்கம். அதிபர் தனது திடீர் பரிசோதனையின் போது நால்வர் விடுதியில் இல்லாதிருந்ததை அவதானித்து விசாரித்த போது சம்பவமும் சம்பந்தப் பட்ட மாணவர்ளும் தெரிய வந்தது. நால்வரில் மூவரை மன்னித்து அவர்களை வழிநடத்திச் சென்ற மாணவனை விடுதியிலிருந்து நீக்கினார். நீக்கப்பட்ட மாணவன் அவருடைய வகுப்பைச் சேர்ந்தவன். மாணவனின் தந்தை வந்து அவனை மன்னித்து விடுமாறு வேண்டிய போதும் மாணவர் திரும்பவும் விடுதியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மாறாக அம்மாணவனை தனது வீட்டில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்தார். தனது படிப்பு முடிந்து வேலையில் சேரும்வரை குறித்த மாணவன் அவர் வீட்டிலேயே தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் அவன் ஒரு ஆசிரியராக வேலையில் சேர்வதற்கு உதவிசெய்தார். இச் சம்பவத்தின் மூலம் அவரின் கண்டிப்பும், கருணையும் வெளிப்பட்டது.

இரண்டாவது சம்பவம் அவர் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வராக இருந்த காலத்தில் நடைபெற்றது. இவர் அரசியலில் இடதுசாரிக்கொள்கையைக் கடைபிடித்தவர். 1970ம் ஆண்டு மாநகர சபை உறுப்பினர் தேர்தலில் தனது வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தேர்தல் முடிந்தவுடன் காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரம் பெற்றவருமான (Political Authority) கௌரவ இராஜன் செல்வநாயகம் சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்ற அங்கிருந்தவர்களின் ஆதரவுடன் முதல்வரானார். முதல்வராக கடமையாற்றிய காலத்தில் மின்சார பகுதியில் தொழில் புரிந்த ஒரு தொழிலாளி மோசடியொன்றில் ஈடுபட்டு, மோசடி கண்டுபிடிக்கப்பட்ட போது முதல்வர் அத் தொழிலாளியை வேலை நீக்கம் செய்தார். வேலை நீக்கம் செய்யப்பட்டவர் இவர் முதல்வராக தெரிவு செய்யப்படுவதற்கு ஆதரவு வழங்கிய மேலே குறிப்பிட்ட பிரமுகரின் ஆதரவாளர். இவரை மன்னித்து விடுமாறு குறித்த அரசியல் பிரமுகர் கேட்டுக் கொண்ட போது மறுத்து விட்டார். இதற்கு இவர் மீது ஆத்திரம் கொண்ட அரசியல்வாதி இவரை மேயர் பதவியிலிருந்து நீக்குவதற்கு தனது கட்சி அங்கத்தவர்கள் ஆதரவுடன் நம்பிக்கையில்லா பிரேரனை ஒன்றை முன் வைத்த போது இவரது நிர்வாகத் திறமையை அறிந்து கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்கள் இவரை ஆதரித்தனர். அமரர். தியாகராஜா மீது மதிப்பு வைத்திருந்த சுயேட்சை அங்கத்தவர்களும் சேர்ந்து இப் பிரேரணையை முறியடித்தமையினால் தொடர்ந்தும் மாநகர முதல்வராக செயற்பட்டு பதவி நிலை அலுவலராக (Staff Officer) பதவி உயர்வு பெற்றவுடன் முதல்வர் பதவியை இழக்க வேண்டியேற்பட்டது. இச் சம்பவத்தின் மூலம் தனது பதவி போனாலும் நீதி தவறாதிருக்க வேண்டுமென்ற இவரின் கண்டிப்பான கொள்கை வெளிப்பட்டது.

அமரர். தியாகராஜா அவர்களின் காதல் திருமணத்திலும் ஒரு சுவாரஸ்மான சம்பவம் நடைபெற்றது. இவர்கள் இருவரும் காதலித்ததை பெண்ணின் பெற்றோர் விரும்பவில்லை. இதற்கு இவர் தகுதியற்றவரல்ல என்பது காரணமல்ல. பெண்ணிற்கு திருமணம் நிச்சயிக்கப் பட்டிருந்தமையே காரணமாகும். அப்போது ஒரு நாள் பெண் காணாமற்போய் விட்டார். அப்போது எல்லோரும் காதலர்கள் இருவரும் ஓடி விட்டார்கள் (பெண், மாப்பிள்ளை இருவரும் பெற்றோர் விருப்பமின்றி திருமணம் செய்வதற்கே ஓடிவிட்டனர் எனக் கூறுவது வழக்கம்) என்று கருதினர்.

ஆனால் அடுத்த நாள் மாப்பிள்ளை சாவகாசமாக பாடசாலைக்குச் சென்றார். இதைக்

கண்ணுற்ற அயலவர்கள் ஆச்சரியப்பட்டனர். சில தினங்களுக்குப் பின்னர் இருவரும் திருமணம் செய்து மாப்பிள்ளை வீட்டிற்கு வந்தது தெரியவந்தது. நடந்தது என்னவெனில் பெண் தங்கியிருப்பதற்கு கொழும்பில் பாதுகாப்பான இடமொன்றை தனது நெருங்கிய நண்பனூடாக மாப்பிள்ளை ஏற்பாடு செய்திருந்தார்.

இரண்டாயிரமாம் ஆண்டு இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு கிளையின் பவள விழாக் கொண்டாடப்பட்டது. இவ் பவளவிழாக் குழுவில் அமரர் தியாகராஜா அவர்கள் குழுத் தலைவராகவும் நான் செயலாளராகவும் செயற்பட்டோம். விழாக் கொண்டாட்டத்தில் மாணவர்களுக்கு நன்மை பயக்கும் பல செயற்பாடுகளுடன் இறுதி நாளன்று ஒரு ஊர்வலமும், பொதுக் கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டது. ஊர்வலம் அமரரினால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனினால் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் ஆணைப்பந்தி பாடசாலையிலிருந்து கூட்டம் நடைபெற்ற கல்லடி உப்போடை சுவாமி விவேகானந்த வித்தியாலயம் வரை இடம்பெற்றது. பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டவர்கள் ஊர்திகள், பாடசாலை மாணவர்கள், பிரமுகர்கள், கல்விமான்கள், அரசியல் தலைவர்ளென பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். இவ்வூர்வலம் நான் அறிந்த வகையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற மிகப்பெரிய ஊர்வலமாக அமைந்தது.

அமரர் சம்பந்தப்பட்ட இன்னொரு வேடிக்கையான சம்பவமும் எனது நினைவலையில் உள்ளது. ஒருநாள் பிற்பகல் நாங்கள் இருவரும் நொச்சிமுனையிலிருந்த ஒரு முக்கியஸ்தர் வீட்டிற்கு சென்று அவரை சந்தித்த பின்னர் பிற்பகல் 8.00 மணியளவில் கல்லடியில் உள்ள அவரது வீட்டிற்கு மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தோம். கல்லடியில் பழைய கல்முனை வீதியூடாக நாங்கள் சென்று கொண்டிருந்த போது இரு அழகான நாய்க்குட்டிகள் வீதியின் குறுக்கே வந்தன. அப்போது நான் அவற்றை தூக்கிக் கொண்டு போவதற்காக சைக்கிளில் இருந்து இறங்கினேன். அப்போது அவர் "டேய் வேண்டாம் வாடா'' என கூறியதனால் நான் நாய்க்குட்டிகளைத் தூக்கவில்லை. நாங்கள் வீட்டையடைந்து கதைத்துக் கொண்டிருந்த போது வீட்டிற்கு முன் சாலையில் நாய்க்குட்டிகள் கத்தும் சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்த போது நான் தூக்க முயற்சித்த நாய்க்குட்டிகள் என்பது தெரியவந்தது. பார்த்த போது இரண்டு பெட்டைக் குட்டிகள் பொதுவாக எவரும் பெண்குட்டிகளை விரும்புவதில்லை. அவற்றை "கண்ட இடத்திலேயே கொண்டு விடுவமென" நான் கூறியதற்கு வேண்டாம் என கூறி அவையிரண்டையும் தானே வளர்த்தார்.

பிற்காலத்தில் எங்கள் உறவு ஆசிரியர் மாணவர் என்ற நிலைமாறி நெருங்கிய நண்பர்களானோம். இருந்தபோதிலும் நான் மாணவன் என்ற நிலைப்பாட்டுடனேயே பழகினேன். இருவரும் சேர்ந்து கூட்டு தொழில்கள் செய்து நஷ்டமடைந்தது மறக்க முடியாத விடயங்கள்.

அமரர் தியாகராஜா அவர்களின் கல்வி, தொழில் அந்தஸ்து என்பவற்றை பார்க்கும் போது, இவர் மட்/ சிவானந்த வித்தியாலயத்தில் க.பொ.த (சா.த) வரை கல்வி கற்று அக்காலத்தில் இக்கல்லூரியில் க.பொ.த (உ.த) இல்லாதிருந்தமையினால் அரசினர் கல்லூரியில் (தற்போது இந்துக் கல்லூரி) உயர்தரம் கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி அங்கு பொது கலைமாணி பட்டம் பெற்றார். பின்னர் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். கல்முனை பாத்திமா கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றினார். பின்னர் சிவானந்த வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று ஆசிரியராகவும் பிரதி அதிபராக, அதிபராக நீண்ட காலம் கடமையாற்றினார். இக் காலப்பகுதியில் பாடசாலை பரிசோதகராக பதவி உயர்வு பெற்றபோது தான் கற்ற பாடசாலையின் நன்மையைக் கருத்திற்கொண்டு சிவானந்த வித்தியாலயத்தில் அதிபராகவே கடமையாற்றிமை குறிப்பிடத்தக்கது. இக் காலத்திலேயே அரசியல்வாதிகளால் அன்னார் இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் பொத்துவில் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் கனகரெத்தினத்தின் முயற்சியினால் அக்கரைப்பற்று மகா வித்தியாலயத்தில் அதிபராக நியமிக்கப்பட்டு குறிப்பிடத்தக்க

காலம் அங்கு கடமையாற்றி அப்பகுதி தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்றார். பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பொறுப்பான கல்வி பணிப்பாளராக, திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளராக, வடகிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராக, மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னரும் ஒப்பந்த அடிப்படையில் ஓர்வருடம் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. ஓய்வு பெற்ற பின்னர் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தில் உயர் பதவியில் கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது வடகிழக்கு மாகாண ஆளுநரின் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டு மரணமடையும்வரை கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அமரர். தியாகராஜா அவர்களின் நினைவலைகளை பகிர்வதானால் இன்னும் எவ்வளவோ கூற முடியும் இருந்த போதிலும் அவற்றை விபரிப்பதனால் கட்டுரை நீண்டு கொண்டே போகும். அமரரின் மரணம் மிக அதிர்ச்சியை தரக் கூடியதாக இருந்தது. 2003ம் ஆண்டு சிவானந்த பழைய மாணவர் மன்றத்தினால் சுவாமி நடராஜா நந்தாஜி அவர்களுக்கு சிலை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு கொண்டிருந்த போது கல்லாற்றில் ஒரு சிற்பியைக் கொண்டு சிலை செய்யும் வேலையைப் பொறுப்பேற்றார். கல்முனையில் அமைந்திருந்த தனது காரியாலயத்தில் தினமும் சென்று வந்ததினால் சிலை அமைப்பை மேற்பார்வை செய்வது அவருக்கு இலகுவாக இருந்தது. 2003ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ம் திகதி காலை 9.00 மணியளவில் இவ்விடயம் சம்பந்தமாக இருவரும் தொலைபேசி மூலம் உரையாடினோம். இது நடைபெற்று ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அமரரின் மரணச் செய்தி அவரின் பால்ய நண்பரொருவர் மூலம் எனக்கு கிடைத்தது. சற்றும் எதிர்பாராத இச் செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

68வயதில் இவரது திடீர் மரணம் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருப்பினும் மரணமடையும் போது தனது குடும்பத்திற்குரிய சகல கடமைகளையும் முடித்திருந்தார். தனது மூன்று ஆண் பிள்ளைகளுக்கும் நான்கு பெண்பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து அவர்களை குடும்ப வாழ்வில் இணைத்திருந்தார். எமக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பினும் அவரது மரணம் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழாது நடைபெற்ற சிறந்த மரணமாகவே அமைந்தமை அவரது நற்செயல்களின் பிரதிபலன் என்றே கூறவேண்டும்.

அமரர். தியாகராஜா அவர்களின் நினைவு இன்னும் பல்லாண்டுகள் நிலைக்கும் என கூறி இச்சந்தர்ப்பத்தை அளித்த தியாகராஜா அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது நன்றிகளைத் கூறிக்கொள்கிறேன்.

**செ. புண்ணியமூர்த்தி**

ஓய்வு பெற்ற அரச அதிபர், மட்டக்களப்பு



# தியாகரும் நானும்




ஆளுமைமிக்க அமரர். க. தியாகராசா அவர்களின் சிறப்புகள் பேசும் மலரொன்று விரிகின்றது; அம்மலரில் ஓரிதழாய் எனது எண்ணமும் இணைகிறது. ஒவ்வொருவரினதும் வாழ்க்கையில் ஓர் மூலையில் வலி இருக்கத்தான் செய்யும். வலி இல்லாமல் வாழ்க்கை இல்லை. இந்த வலிகளைத் தாண்டியதால், தாங்கியதால் வாழ்ந்தார். இன்றும் வாழ்கின்றார். காரணம் வலியை உணர்ந்தமையும் வலியை நினைத்து துன்பப்படாமையுமே.

பிரச்சனைகளைக் கண்டு பின்வாங்காமல் நிமிர்ந்து நிற்கும் போது அவரிடம் பல தடவைகள் கேட்டிருக்கின்றேன். இது உங்களுக்கு எப்படி சாத்தியமாகின்றது? என்று, “எனக்கு கல்வியைப் புகட்டிய நிறுவணங்கள்'' என்று சொல்லுவார். இதனூடாக அவர் தனக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்களின் பெருமையைச் சொல்லுகிறார். கல்வி புகட்டும் நிறுவனங்களின் பொறுப்பை உணர்த்துகிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

மட்/ கல்லடி உப்போடை பெண்கள் பாடசாலையில் அவரது ஆரம்பக் கல்வி. இது இப்போது மட்/ விவேகானந்தா மகளிர் கல்லூரி ஆகும். அவரது இடைநிலைக் கல்வி மட்/ சிவானந்தா வித்தியாலயத்தில், அக்கால வேளையில் உயர்தரக் கல்வியையும் பல்கலைகழக புகுமுக கல்வியையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கிய ஒரே ஒரு கல்லூரி மட்/அரசினர் கல்லூரியாகும். (BT. Government College) பின்னர் காலம் போகப் போகத்தான் மற்றைய பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த அரசினர் கல்லூரியை அமைத்தவர் அமரர். ஏ. நல்லையா அவர்கள். அரசியல்வாதிகள் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு இவர். இவர் சிறந்த கல்விமான், சிறந்த அரசியல்வாதி, முன்னாள் அமைச்சர் இப்படிப்பட்டவரை தேர்தலில் தோற்கடித்த பெருமை நம்மக்களுக்கு உண்டு.

இந்த அரசினர் கல்லூரியானது மட்/ கோட்டமுனை மகாவித்தியாலயம் என்ற பெயரை இடைக்காலத்தில் பெற்றது. இப்போது மட்/ இந்துக்கல்லூரியாகத் திகழ்கின்றது. தற்போது தேசிய பாடசாலை என்ற வகுதிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரியில் இருந்துதான் தியாகராசா அவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் தெரிவானார். இந்தக் கல்வி நிறுவனங்களும் அவரது அனுபவங்களுமே அவரை ஆளுமைமிக்க மனிதராக கட்டமைத்தது எனலாம்.

தியாகராஜா அவர்கள் தொழிலுக்குள் நுழைகிறார். இல்லை, இல்லை சேவைக்குள் நுழைகிறார். கல்முனை பற்றிமாக் கல்லூரியில் ஆசிரியராக இணைகிறார். பின் தான் படித்த மட்/ சிவானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராக தொடர்கிறார். அதிபர் என்ற பதவிக்கு அர்த்தம் கொடுத்து வரைவிலக்கணமாய் வாழ்ந்த சிலர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அமரர் மு. கணபதிப்பிள்ளை இவரின் தலைமைத்துவத்தில் தியாகராஜா அவர்கள் ஆசிரியராய் பணிபுரிகிறார். பின்னர் அப்பாடசாலையிலே அதிபராய் பலகாலம் பணிபுரிந்தார். இக்கால வேளையில் நான் அப்பகுதியில் மட்டக்களப்பு தெற்கு வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமை ஆற்றிக் கொண்டிருந்தேன். அக்கால கட்டத்தில் அவரின் நிர்வாகத்திறனை நேரடியாக அவதானிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

மட்/ சிவானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராய், அதிபராயிருந்து பலரை வளர்த்துவிட்ட பெருமைக்குரியவர் இவர். கல்விச் சேவை மூலம் பல முன்னெடுப்புக்களைச் செய்த இவர் மட்டக்களப்பு மக்களுக்காக அரசியல் சேவை செய்ய தலைப்பட்டார். அதில் வெற்றியும் கண்டார். மாணவர்களின் மனதில் மட்டுமல்ல மக்களின் மனதிலும் இடம்பிடித்தவர் இவர். மட்டக்களப்பு மாநகர முதல்வராக இருந்து அரசியல் பணி புரிந்தவர் இவர். இப்போது அதேகதிரையில் அவரது மகன் திரு. சரவணபவன் மாநகரமுதல்வராக பணிபுரிகிறார்.

சட்டம் மட்டுமல்ல அரசியலும் தன் கடமையைச் செய்யும் என்பார்கள். அவ்வாறே அரசியலும் தன் கடமையைச் செய்தது. மட்/சிவானந்தா வித்தியாலயத்தில் பணிபுரிந்த தியாகராஜா அவர்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைக்கு மாற்றியது. அரசியல் மீண்டும் தன் கடமையைச் செய்து மட்/ சிவானந்தா வித்தியாலயத்திற்கு மாற்றியது. என்னே! அரசியல்.

இவர் அதிபராக கடமை ஆற்றிய போது முன்னர் கூறியது போன்று நான் மட்டக்களப்பு தெற்கு வட்டாரக்கல்வி அதிகாரியாக கடமையாற்றி உள்ளேன். அப்போது எமக்குள் நட்பு வலுப்பெற்றது. நட்பு என்றால் உண்மை நட்புத்தான். அதில் போலி நிலை இருக்கவில்லை. இக்கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட கல்வித் திணைக்களத்திற்கு பிரதம கல்வி அதிகாரியாக (Ch.E.O) பதவி உயர்வு பெற்றுச் சென்றார். இப்போது அவர் எனது மேலதிகாரி. பின்னர் படிப்படியாக மாவட்ட கல்விப் பணிப்பாளராக, மாகாண கல்விப் பணிப்பாளராக, வடகிழக்கு மாகாண கல்விச் செயலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். ஒவ்வொரு கட்டத்திலும் எனது மேலதிகாரியாக இருந்தார். ஆனால் நட்பு முறியவில்லை. வலிமையானது. நட்புக்குள் கடமை தலையிட்டதுமில்லை; கடமைக்குள் நட்பு இடையூறு செய்ததும் இல்லை. இங்குதான் தியாகராஜா

அவர்கள் இன்னொரு ஆளுமையாளராக திகழ்ந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்கு முன்னர் திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றிய வேளையில் நான் முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்தேன். அந்த வேளை நெருக்கடியான காலம். கல்வித்துறை அனுபவங்களை தானாக முன்வந்தும் நான் கேட்கும் போதும் கடமைகளைப் புரிந்து பல இடங்களில் வழிகாட்டியாகவும் விளங்கினார். மட்டக்களப்பில் இவர் பிரதம கல்வி அதிகாரியாக கடமை ஆற்றியபோது கலாநிதி. E.J. சற்குணராஜா அவர்கள் கல்விப் பணிப்பாளராக இருந்தார். அக்கால கட்டத்தில் சிறிலங்கா கல்வி நிர்வாக சேவை தரம் I பதவியில் இருந்த ஒரே ஒருவர் கலாநிதி சற்குணராஜா அவர்கள் இவர் தியாகராஜா அவர்களின் நிர்வாகத் திறமையை கண்டு நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைத்தார். இவர் பெயர் கெடாத வகையில் தன் கடமைகளைச் செய்தார். இவ்வாறு தியாகராஜா அவர்கள் பல அனுபவங்களை பெற்று சிறந்த கல்வி அதிகாரியாக திகழ்வதற்கு கலாநிதி சற்குணராஜா அவர்களின் பங்கும் உண்டு.

தியாகராஜா அவர்கள் வடகிழக்கு மாகாண கல்விச் செயலாளராக இருந்த போது நான் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றினேன். அவ்வேளை ஒரு விடயம் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு என்னைப் பணித்திருந்தார். அதற்கு முறைப்படி, சுற்று நிருபத்திற்கமைய நான் கல்விப்பாளர் என்ற பதவி நிலையில் விளக்கமளித்திருந்தேன். அந்த விளக்கத்தைப் பார்க்கின்ற ஓர் மேலதிகாரிக்கு பொதுவாக எங்கோ ஓர் மூலையில் ஓர் கீறல் இலேசாக வேனும் இருக்கும். மேலதிகாரி - கீழ்அதிகாரி என்ற நிர்வாக கட்டமைப்பில் இது பொதுவான ஒன்று. அந்தப் "பொது'' நிலைக்குள் தியாகராஜா அவர்கள் இல்லை. அவர் தனித்துவமான மனிதர். அவர் அந்த விளக்கத்தைக் கண்டு கொந்தளிக்கவில்லை. மாறாக அன்பளிப்புத்தான் கிடைத்தது. அது "தட்டிக் கொடுத்தல்'' எனும் அன்பளிப்பு. இப்படித்தான் விளக்கம் எழுதவேண்டும்; துணிவோடு செயற்பட வேண்டும் என்றவாறு அந்த தட்டிக் கொடுத்தல் இருந்தது. இப்படியாக ஆளுமை மிக்க மனிதர்களை உருவாக்குவதில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

தியாகராஜா அவர்களின் முகாமைத்துவத்தில் பல எடுத்துக் காட்டுகள் உண்டு. அவற்றில் ஒன்றைக் குறிப்பிடுகின்றேன். அதிபர்களுள் பொருத்தமானவர்களை சிறிலங்கா கல்வி நிர்வாக சேவைக்குள் உள்வாங்குதல் என்ற தலைப்பிலான செயற்பாடாகும். இது மிகவும் இரகசியமானது. அவ்வேளை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி E.J. சற்குணராஜா அவர்கள் எனது பௌதிகவியல் ஆசிரியர். அவர் தியாகராஜா அவர்களையும் என்னையும் இப்பணிக்கு ஒப்படைத்தார். இதில் என்னை இணைப்பதற்கு கலாநிதி E.J. சற்குணராஜா அவர்களிடம் வேண்டுகோளிட அவரின் அங்கீகாரத்துடன் இச் செயலில் ஈடுபட இணைந்து கொண்டேன். என்னை இதில் இணைத்துக் கொண்டதற்கான காரணத்தை தியாகராஜாவிடம் கேட்டேன். யார் யாரிடம் எந்தெந்த வேலையை கொடுக்க வேண்டும் என்பது ஒருவகை முகாமைத்துவமாகும். இந்த வேலையை இன்னாரிடம் கொடுத்தால் அது சுகமாகவும், முறையாகவும் நேரத்திற்குள்ளும் முடியும் என்பதில் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தார்.

“”இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்ற திருவள்ளுவர் கூறியதை தியாகராஜா அவர்களிடம் கண்டேன்.

குழந்தைகள் கதிரைகளில் தொடர்ச்சியாக இருந்து கற்கும் மனப்பக்குவம் கொண்டவர்கள் அல்ல. அதிலும் முன்பள்ளி சிறார்களிடம் அதை எதிர்பார்க்கவே முடியாது. பொதுவாக பாடசாலை கட்டமைப்புக்குள் வரமுன்னர் முன்பள்ளி என்ற அமைப்புக்குள் உள்வாங்கப்படுகிறார்கள். இந்த முன்பள்ளிகள் பல தனியாரினால் நடத்தப்படுகின்றன. வசதிகுறைந்தவர்களுக்கு இது கஷ்டம். நான் மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளராக சேவையில் இருந்தபோது

உணர்ந்து தியாகராஜா அவர்களிடம் வேண்டுகோள்யிட முன்பள்ளி நடத்துவதற்கும் அதனை நடத்தும் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்குமாக மட்/விவேகானந்தா மகளிர் கல்லூரியில் இருமாடிக் கட்டிடம் அமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கினார். சேவையில் இருக்கும் போது பொதுப்பணிகளில் ஈடுபடுவது குறைவு. அவ்வாறு இல்லாமல் தியாகராஜா அவர்கள் பொதுப்பணியிலும் ஈடுபட்டார் அவ்வாறான பணிகள் பல உண்டு. அவற்றுள் ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

கிழக்கிலங்கையின் சொத்து என்பதை விட உலகத்தின் சொத்து என்பதை சுவாமி விபுலானந்தரைச் சொல்ல வேண்டும். அவர் உலகறிந்த மகான் என்பதில் சந்தேகமில்லை. அந்த உலகறிந்த நிலை தொடர்ந்து மாணவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் இனி வருவோரிடத்திலும் மையம் கொண்டிருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்த பலருள் தியாகராஜா அவர்களும் ஒருவர். அதன் விளைவு சுவாமி விபுலானந்த நூற்றாண்டு விழாச்சபை உதயம் பலரின் விழைவு தியாகராஜா அவர்கள் தான் தலைமை. பலரின் விழைவால் விளைவுகள் பல. சுவாமி விபுலானந்தரின் பணிகள், ஆளுமை வெளிப்பாடு என்று பட்டியல் நீண்டது. பல பணிகள் பக்குவமாய் நிறைவேறின. நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களுள் நானும், தியாகராஜா உள்ளிட்ட பலரும், இருந்தோம். இப்பலக்கலைக்கழக வளர்ச்சியில் தியாகராஜா அவர்களின் பணி முக்கியமானது. கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீடம் உருவாக்குவதில் இவரின் பங்களிப்பு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருந்தது. இப்பல்கலைக் கழக வேந்தராக இருந்த காலம் சென்ற பேராசிரியர் T. வரகுணம் அவர்களுடன் இணைந்தும், பேரவை உறுப்பினர்களுடன் இணைந்தும் இவர் பணியாற்றினார். மருத்துவபீட உருவாக்கம் வெற்றியளித்தது. ஆனால் பெரிய வருத்தம், மனவருத்தம். மருத்துவபீடம் அமையும் போது தியாகராஜா அவர்கள் உயிருடன் இல்லை. இதுதான் அந்த மனவருத்தம். நாம் நாட்டும் மரங்கள் எல்லாம் நமக்கு கனி தரும் என்றா நாட்டுகின்றோம்?

இவ்வாறு தலைமைத்துவத்திற்கும், முகாமைத்துவத்திற்கும் கால சூழ்நிலையால் ஏற்பட்ட நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்ளாமல் அதற்குப் பொருத்தமான பொறிமுறை நுட்பத்தை பயன்படுத்துவதற்கு, தோல்வியைத் துரத்தி வெற்றி கொள்வதற்கு, பொதுப் பணிகளில் ஈடுபடுவதற்கு, மற்றவர்களை ஈடுபடுத்துவதற்கு எதிர்காலத்தை நோக்கிச் சிந்திப்பதற்கு அதற்கான ஆளுமைகொண்டவர்தான் இவர்.

நான் கற்ற பாடசாலையில் (மட்/ அரசினர் கல்லூரி) எனது காலத்தில் எங்கள் மாணவ தலைவனாக இருந்தவர் தான் இவர். நான் ஆசிரியராக கடமை பார்க்கும் போது (மட்/ சிவானந்தா வித்தியாலயம்) அதிபர் தான் இவர். என் சக அதிகாரி தான் இவர். என் மேலதிகாரி தான் இவர். இவர் யார்? அவர் தான் தியாகராஜா என்னும் சிம்மம்.

**எஸ். எஸ். மனோகரன்**
ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மாவட்ட
கல்விப் பணிப்பாளர்

# மாண்புறு கல்விப் பணியாளர் திரு. க. தியாகராஜா
# அவர்களின் சேவைகளை நினைவுகொள்வோம்




சுவாமி விபுலாநந்தரின் புகழ்பாடும் கிழக்கிலங்கையில், அவர் வழியில் கல்விப்பணி ஆற்றி மக்களின் மனத்திலே தடம்பதித்த பெருமை எங்கள் ஆசிரியர் கல்வியாளர் திருவாளர் க. தியாகராஜா அவர்களையே சாரும். அவரது சேவைகளைப் பாராட்டி, அவரது 85ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் வெளியிடப்படும் "தியாகராஜம்" என்னும் நினைவு மலருக்கு நானும் ஒரு கட்டுரை எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைவதோடு, விழாக் குழுவினரையும் பாராட்டுகின்றேன்.

1965 செப்ரெம்பர் மாதம் முதல் அதிபர் க. தியாகராஜா அவர்களின் இறுதிக் காலம்வரை என் ஆசிரியரை நன்கறிவேன். அவரது வகுப்பு மாணவராக, குடும்ப நண்பராக, மட்டக்களப்புப் பிரதேசக் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டவராக அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சிவானந்தா வித்தியாலயத்தில் அவர் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வரலாறு, அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். அப்போது எங்கள் ஆசிரியர்களாக க. தியாகராஜா,

பண்டிதர் வி. சீ. கந்தையா, வித்யாசிரோன்மணி பூரணதியாகராஜாக் குருக்கள் ஆகிய மூவரும் எமக்குக் கற்பித்துப் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு உதவிய குருமார்களாவர். எனது வகுப்பிற் பயின்றவர்களிற் சி. புண்ணியமூர்த்தி, இராதாகிருஷ்ணன், காத்தான்குடி இஸ்மாயில் ஆகியோரை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். இராதாகிருஷ்ணனுடன் எங்கள் ஆசிரியரின் இல்லம் செல்வேன். கல்லூரி விடுதியில் தங்கியிருந்த எனக்கு அவரது வீட்டு உபசரிப்பு மகிழ்ச்சியைத் தந்தது. ஈழத்தமிழரின் வரலாற்றுச் சிந்தனையை எனக்கு ஊட்டியவர் தியாகராஜா அவர்களே ஆவார்.

தியாகராஜா அவர்கள் பேராதனைப் பல்கழகத்தில் Diploma in Education பட்டப் படிப்புக்காக வந்திருந்தபோது, நான் தமிழ்த்துறை விரிவுரையாளராக இருந்தேன். அப்போது அவர் என்னை வாழ்த்தியதும், கூறிய அறிவுரைகளுமே என்னை உயர்நிலைக்கு வழிநடத்தின என்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். 1984ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பணியாற்றியபோது அவரது மகள் பவானி அங்கே நுண்கலைப்பீட மாணவியாக வந்திருந்தார். தந்தையும் மகளும் எம் இல்லம் வந்தமை இன்றும் பசுமையான நினைவுகளாக உள்ளன.

1992இல் பிரித்தானிய பொதுநலவாய நாடுகளின் சிரேஷ்ட புலமைப்பரிசில் பெற்று செவ்வீல்ட் பல்கலைக்கழகம் சென்றேன். அதன் பின்னர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்ததும் தாயக உணர்வுகளுடன் செயற்படத் தொடங்கினேன். சுவாமி விபுலாநந்தர்மீது ஈடுபாடுள்ளவர்களாகக் கனடாவில் வாழ்ந்தவர்களையும், சிவாணந்தா வித்தியாலயப் பழைய மாணவர்களையும் இணைத்து 2003இல் "சுவாமி வீபலாநந்தர் கலை மன்றம் கனடா" என்ற அமைப்பை உருவாக்கினோம். அதன் தலைவாராக என்னை நியமித்தார்கள். முதலாவது ஆண்டு விழா மிகப் பிரமாண்டமான முறையில் நடத்தப்பட்டது. அப்போது வடக்குக் கிழக்கு மாகாண, அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டசபை ஆணையாளராக எங்கள் ஆசிரியர் பணியாற்றிக் கொண்டிருந்தார். சுவாமி விபுலாநந்தர் வழியில், அரச அதிகாரியாகக் கல்விச்சேவை ஆற்றிக்கொண்டிருந்த எங்கள் ஆசிரியரை அப்பெரு விழாவுக்கு முதன்மை விருந்தினராக அழைப்பது எனத் தீர்மானித்து, அதிபர் தியாகராஜா அவர்களை அழைத்துக் கௌரவப்படுத்தினோம்.

அவர் மட்டக்களப்புக் கல்விப் பிராந்தியத்தில் ஆற்றிவரும் அளப்பெரிய கல்விச் சேவைகளைப் பாராட்டுவதாகவே அவரது வருகை அமைந்தது. அதன் மூலம் எங்கள் கலை மன்றமும் பெருமை பெற்றது. அவ்விழாவில் முதன்மை விருந்தினராக அவர் ஆற்றிய சிறப்புரை, "சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்" பற்றியதாக வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. அத்துடன் விழாவில் வெளியிடப்பட்ட "விபுலம்' என்ற சிறப்பிதழில் அவர் எழுதிய "சுவாமி விபுலாநந்தரின் சமூகப் பணி" என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாமி விபுலாநந்தருக்குப் பின்னர் மட்டக்களப்பிற் சிறந்த கல்விமான்களாகத் திகழ்ந்த வர்களில் அதிபர் க. கணபதிப்பிள்ளை. அதிபர் வி. சீ. கந்தையா. அதிபர் க. தியாகராஜா முதலி யோரைக் குறிப்பிடலாம். இவர்களிற் கல்வித்துறையிலும், நிருவாகத்துறையிலும் உயர்பதவியும் அதிகாரமும் பெற்றிருந்தவர் தியாகராஜா அவர்களே ஆவார். அவர் பிராந்திய கல்விச்சேவை ஆணையாளராகப் பணியாற்றிய காலத்தில் எமது மக்களுக்குப் பிரதேச உணர்வோடு, வழங்கிய சேவைகள் மிகப் பெரியன என்பதை மக்கள் நன்கறிவர். வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பதவியை மக்களது சேவைக்காக நன்கு பயன்படுத்தியவர். அவர் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் மாநகரசபை பல முன்னேற்றங்களைப் பெறுவதாயிற்று.

சிவானந்தா வித்தியாலயத்தில் மாணவராகவோ அல்லது ஆசிரியராகவோ காலடி எடுத்து வைத்தவர்கள் எப்போதும் சமூக நோக்கும், பொது நலப்பணிகளில் ஈடுபாடும் உடையவர்களாகத் திகழ்வார்கள் என்பதற்குச் சான்றாகத் தியாகராஜா அவர்கள் திகழ்ந்தார்கள். சுவாமி விபுலாநந்தர்

எதிர்காலச் சந்ததியினருக்கு இட்டுச் சென்ற எழுத்துச் செல்வங்களைத் திரட்டித் தொகுக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் "மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை" அமைக்கப்பட்டது. அப்போது வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்துறைச் செயலாளராகத் திகழ்ந்த க.தியாகராஜா அவர்கள் இச்சபைக்குத் தலைவராகச் செயற்பட்டார். சுவாமிகளின் ஆக்கங்கள் அனைத்தையும் தேடித் தொகுக்கும் பணிக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிசெய்து, அவற்றை நான்கு தொகுதிகளாக வெளிக்கொணரும் பணியிலும் தியாகராஜா அவர்கள் பெரும் சேவையாற்றியுள்ளார்.

ஒரு பிரதேசத்தின் பன்முகவளர்ச்சியின் அடித்தளமாக அமைவது அங்கு அமைந்துள்ள பல்கலைக்கழகமாகும் என்பதை நன்குணர்ந்த கல்விமானாகிய ஆசிரியர் தியாகராஜா அவர்கள் கிழக்குப் பழ்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தார். அவரது கல்வித் தகைமைகளும் வகித்த பதவிகளும் அவரைக் கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராக்கின. அதன் பயனாகப் அப்பல்கலைக்கழகம் அடைந்த நன்மைகளோ பலப்பல. இவற்றிற் குறிப்பாக கல்லடிஉப்போடையில் இயங்கிய சுவாமி விபுலாநந்த இசை நடனக் கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைத்து அத்துறை பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாக இயங்குவதற்கு உழைத்தவர்களில் தியாகராஜா ஐயா அவர்களின் பங்களிப்பும் முக்கியமானது.

ஆசிரியர், அதிபர், மாநகர முதல்வர், வடக்குக் கிழக்கு மாகாண, அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டசபை ஆணையாளர், கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர், மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் எனப் பல்வேறு தளங்களிற் கல்வி, சமூகம், பண்பாடு, தமிழ்மொழி எனப் பன்முகச் சேவைகள் ஆற்றிச் சாதனைகள் படைத்த ஒரு செயல் வீரனாக வாழ்ந்த ஆசிரியர் க. தியாகராஜா அவர்கள் எங்களுக்கு ஓர் அரிய வழிகாட்டி ஆவார்.

தந்தையின் நினைவாக அவரது மகள் நாட்டிய கலைமணி, திருமதி பவானி குகப்பிரியா, "தியாகராஜர் கலைக்கோவில்" என்ற பெயரில் நடனக் கல்லூரியைக் கொழும்பில் அமைத்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவருக்கு நடனக்கலையைக் கற்பித்து வருகின்றார். "தேசபந்து விருது", "கலைச்சுடர் விருது", " கலைச்சரஸ்வதி விருது" என்பனவும் பெற்றுள்ளார். அத்துடன் தியாகராஜர் கலைக்கோவில் மாணவர்கள் ஐரோப்பா, தமிழகம் ஆகிய இடங்களிலும் தமது நாட்டிய நிகழ்வுகளின் மூலம் தியாகராஜா அவர்களின் நாமத்தைப் பரப்பியுள்ளார்கள். இவை மகள் தந்தைக்கு ஆற்றும் பணிகளாகும்.

"தியாகராஜம்" என்ற சிறப்பிதழை வெளியிடும் முயற்சியும் இவ்வகையிற் பாராட்டத்தக்கதாகும். மேலும் அதிபர் தியாகராஜா அவர்களின் பன்முக சேவைகளைப் பாராட்டும் வகையில் அவர் நினைவாக இலங்கை அரசு தபால்தலை (முத்திரை) வெளியிடுவதற்குரிய முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் நன்றே. கிழக்கிலங்கையிற் கல்வித் துறையிலும், சமூகப் பணியிலும் மாண்புறு சேவைகளாற்றிய கல்வியாளர் திரு க. தியாகராஜா அவர்களுக்குக் கிழக்குப் பல்கலைக்கழகம் உரிய மதிப்பை வழங்கும் என எதிர்பார்கின்றோம்.

ஆசிரியர் தியாகராஜா அவர்களின் புகழ்
அவர் சேவைகளின்வழி நிலைபெறுக.

**- பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி**

தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலை கனடா வளாகம்.

ரொறன்ரோ 25.12.2019

# மாண்புமிக்க
# மானுடவுணர்வுள்ள
# மக்கள் பணியாளர்




முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட பிரதம கல்வி அதிகாரி மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் ஆகிய பதவிகளை அலங்கரித்த திருவாளர் கந்தையா தியாகராசா அவர்கள் குறித்து ஓரிரு நினைவுகளை இச்சந்தர்ப்பத்தில் சற்று மீண்டுணர்ந்து, பகிர்ந்து பரிமாறுவதனைப் பெரிதும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இவருடன் நீண்ட நெடுங்காலத் தொடர்புகள் கொண்டிராத போதும் ஒருசில வருடங்கள் நெருங்கிய உறவுகளைப் பேணிவந்த என்னால் இவரை ஒரு கடமை வெறி கொண்ட கம்பீரமான கல்வி அதிகாரியாக மட்டுமன்றி, சிறந்த சேவையாற்றும் சீரிய செம்மலாக நிமிர்ந்து நின்றதையும் என்னால் இன்றும் நினைத்து வியப்புற முடிகின்றது.

இவர் திருகோணமலை மாவட்ட பிரதம கல்வியதிகாரியாகப் பொறுப்பேற்ற காலகட்டத்தில், திருமலை மாவட்டம் கல்வித்துறையில் கடும் பிரச்சனைகளுடன் வளர்ச்சி வளம் குன்றிய

பின்தங்கிய நிலையில் பயணித்துக் கொண்டிருந்ததெனலாம். கல்விப் பரப்பில் ஆசிரியராக, அதிபராக, அதிகாரியாக, பணிப்பாளராக, செயலாளராக, ஆற்றலும், அறிவும், அனுபவமும், தகுதியும், தனித்திறனும் வாய்ந்த பன்முக ஆளுமை படைத்தவராக தியாகராசா அவர்கள் திகழ்ந்தார். காலத்தின் தேவை கருதி சுறுசுறுப்புடனும், தற்றுணிவுடனும், சமயோசிதத் தன்மையுடனும் செம்மையாகச் செயலாற்றியவர்.

சுற்றுச்சூழல் எதிர்காலத்தேவை, சமூகத்தின் எதிர்பார்ப்புகள், பெற்றோர், மாணவர் அபிலாசைகள் இன்னோரன்னவற்றை யதார்த்தமாகவும் கச்சிதமாகவும் கணித்து கிரகித்துக் கொண்டு செயற்பட்டமை இவரது திறமைகளையும் துணிச்சல் தன்மைகளையும் துல்லியமாக வெளிக்காட்டி நின்றன. இவர்தம் நிர்வாகத் திறனும், முகாமைத்துவச்சிறப்பும் தனித்தன்மை வாய்ந்தவையாகும்.

என்னைப்போன்ற இளம் அதிகாரிகளை அன்று அவர் தேர்ந்தெடுத்து பொறுப்பான பாரிய பணிகளை மேற்கொள்ள முடிவுசெய்து, உரிய ஆலோசனைகள் வழங்கியமை அவரது தீர்க்கதரிசனத்தன்மையையும் சிந்தனைத் தெளிவுத் தேர்ச்சியையும் புடமிட்டுப் புலப்படுத்தின. குறிப்பாக என்னைப் பொறுத்தளவில் தியாகராசா அவர்கள் என்னைவிடச் சிரேட்ட கல்வி அதிகாரிகள் சிலர் இருந்த போதும் எனக்கு முக்கியத்துவம் அளித்து பல பாரிய பொறுப்புள்ள கடமைகளை, என்மீது அசையா நம்பிக்கை வைத்து தந்திருந்தவர். அந்நேரத்தில் பரீட்சைக் கடமைகள், ஆசிரிய இடமாற்ற விவகாரங்கள் ஆரம்பக்கல்விச் செயற்பாடுகள், தமிழ்மொழித் தின விழா ஒழுங்குகள் போன்ற முக்கிய பிரச்சினை சார் பொறுப்புக்களை ஒப்படைத்துச் செயற்படச் செய்தமையெல்லாம் இன்றும் மிக்க நன்றியுடன் நினைவு கூறத்தக்கவையாகும். எடுத்துக்காட்டாக உள்நாட்டுக் கலவர காலத்தில், பல்வேறு குழுக்களின் தலையீடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் அமைந்த சூழலில் அவருடன் நடுநிலையில் பொருத்தமான செயற்பாடுகளை எவருக்கும் பாதிப்பற்ற வகையில் செயலாற்ற இயன்றமை அவரது பூரண சமயோசித விணைத்திறன் மிகு விவேகத்தை வெளிப்படுத்தின. ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சை, க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தல், ஆளணி மற்றும் அமைவிடங்களைத் தேர்ந்து நடைமுறைப்படுத்தல் கண்காணித்தல் ஆகிய பொறுப்பு வாய்ந்த நம்பிக்கையுள்ள பல்வேறு கடமைகளையும் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல், அனுபவம் என்பன அவரால் எனக்குக் கிடைத்த நன்மைகளும் நற்பேறுகளும் நலன்களும் எனலாம்.

ஜனசக்தி ஆசிரியர் நியமனங்களை ஆயிரக்கணக்கில் முறைப்படுத்தி நேர்காணல் செய்து நிறைவுறுத்தி, நியமனங்களைப் பொருத்தமுற வழங்கும் முக்கிய பணியையும் தியாகராசா அவர்கள் முற்றுமுழுதாக எனக்கு ஒதுக்கியதுடன், அவர்சார்பாக நியமனக்கடிதங்களுக்குக் கைச்சாத்திடும் அனுமதியையும் கீழ்நிலை அதிகாரியான எனக்குப் பொறுப்பளித்தமை, அவர் என்னிடத்தில் கொண்டிருந்த அசையா நம்பிக்கையையும், விசுவாசத்தையும் காட்டியது. அவரை என் வாழ்க்கையின் வழிகாட்டியாகவும் முன்னுதாரண புருடராகவும் கருதியே கடமையாற்றி வந்தேன்.

கல்வித் தொடர்புகளுக்கு புறம்பாக அவரும் அவரது குடும்பத்தினரும் என்னுடனும் என் குடும்பத்தினருடனும் பேணிவந்த தொடர்புகள் உறவுகள், உதவிகள் ஒருபோதும் மறக்கவியலாதவை. இவர் உயர்ந்த பதவிகளைப் பெற்று பிறவிடங்களுக்குச் சென்ற போதும், திருகோணமலை வரும் சந்தர்ப்பங்களில் எம்மில்லத்திற்கும் வந்து உடல் உள நலம் விசாரித்து, ஊக்கப்படுத்தி வழிநடத்திய பாங்கும் தனித்தன்மையானது. நான் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் இரண்டு மூன்று தடவைகள் பிரத்தியேக நேரம் ஒதுக்கி எம்மிடம் வந்து சென்றமையையும் குறிப்பிட்டாக வேண்டும். அந்தளவிற்கு சாதாரண மனிதராக எளிய இனிய போக்காளராகப் பழகிக் கொள்ளும் பண்பாளர் அவர்.

சுவாமி விபுலானந்தர் விழாக்குழுவின் தலைவராகவும் விளங்கிய அவர்கள், திருகோணமலையில் இவ்விழா தொடர்பாக என்னையும் இணைத்து, பல செயற்பாடுகளையும் பொறுப்புக்களையும் வழங்கி கௌரவப்படுத்தியமை அவரது பெருந்தன்மையும் விரிந்த உளப்பரப்பையும் உணர்த்துவனவாகும்.

அண்ணரது மரணம் ஒட்டுமொத்த தமிழ்ப்பேசும் சமுகத்திற்கு ஈடுசெய்யவியலாத பேரிழப்பு மட்டுமன்றி மிகத் துரதிஷ்டவசமான நிகழ்வாகும். இந்நிகழ்வு ஒருவேளை மேலும் சிலகாலம் ஒத்திப் போடக்கூடிய நன்நிலையொன்று நடந்திருப்பின், இவரால் தமிழ்ப் பேசும் சமூகம் இன்னும் ஏராளமான நன்மைகளையும், நற்பயன்களையும் பெறக்கூடிய சாதக சூழ்நிலையொன்று உருவாகியிருக்கலாம். இவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் இவரது கல்வி, கலாசார, சமய, சமூகப் பணிகளும் பங்களிப்புக்களும் என்றென்றும் ஏற்றிப் போற்றக்கூடியன என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை எனலாம்.

கனதியான கல்விமான், சிறந்த செயல்வீரன், எல்லோர்க்கும் இனியன், திறமை மிகு கனவான் ஒருவரை இழந்து நிற்பது எதிர்பாராது எமக்கு ஏற்பட்ட பாரிய நட்டமாகும். அவரது நினைவுகள் காலத்தால் கரையுண்டு காணாமல் போகாமல், எம் எண்ணங்களில், இதயங்களில் நிலை நிறுத்திப் பேணப்பட வேண்டியது நாம் அனைவரும் அண்ணருக்குச் செலுத்தும் அன்புசார் அஞ்சலியாகும்.

**செ.அழகரெத்தினம்**
B.A, Dip.in Ed, MA in Ed, SLTES – I
முன்னைநாள் பீடாதிபதி,
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி, வவுனியா.



# தியாகராஜா எனும் கிழக்கு சூரியன்



வடகிழக்கு மாகாணத்தின் முதல் மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று வந்த போது 1993, என்று நினைக்கிறேன். அதிபர் என்றவகையில் சந்திக்கின்றேன். எனவே திருகோணமலை, வலயக் கல்விப் பணிப்பாளராக அவர் கடமையாற்றியிருந்தபோதும் அவருடன் நெருக்கமான தொடர்பு ஏற்பட எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. காரணம் அவர் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் நான் ஒரு சாதாரண ஆசிரியராக கடமையாற்றியது அதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

திரு. தியாகராஜா, வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய காலம் நெருக்கடிகளும் நெட்டூரங்களும் தலைவிரித்து ஆடிய காலம். இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் இலங்கைப் படைகளின் ஆவேசங்கள் மலிந்திருந்த காலத்தில் அதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

கல்வித்துறையில் அவருக்கு இருந்த ஆற்றல் ஆளுமை எங்களைப் போன்ற சாதாரண ஆசிரியர்களை பிரமிக்க வைத்தது. எப்பொழுதுமே மாணவர் நலனிலும் அதை நிர்வகிக்கும்

பாடசாலை நிர்வாகத்துறை மீதும் அதிக அக்கறை காட்டிய ஒரு அதிகாரியாக செயற்பட்டார். எதையுமே வெட்டொன்று துண்டு இரண்டு, என எடுக்கும் தீர்மானம், மாணவர்கள் பால் அவருக்கிருந்த நாட்டம் கல்வித்துறையிலும் நிர்வாகத்துறையிலும் அவருக்கிருந்த ஆளுமை ஆழமான பற்று எல்லோரையுமே வியக்க வைத்தது.

இது ஒருபுறமிருக்க, நான் ஏலவே குறிப்பிட்டது போல் அவருடைய ஆற்றல்மிகு நிர்வாகத் திறன் வெளிப்பட்ட காலம் மாகாண கல்விப் பணிப்பாளராகவும் வட கிழக்கு மாகாண கல்விச் செயலாளராகவும் பதவி உயர்வு பெற்று கடமையாற்றிய காலமாகும்.

வட கிழக்கு மாகாணத்தின் முதலாவது மாகாண கல்விப் பணிப்பாளராக அப்போதைய ஆளுநர் மேஜர் ஜெனரல் நளின் செனிவரட்ணாவினால் நியமிக்கப்பட்டு பதவி ஏற்றுக்கொண்ட காலம். சில முரண்பாடுகள் முட்டுக்கட்டைகளுக்கு மத்தியிலையே மேற்படி பதவியை ஏற்றுக் கொண்டார்.

13ம் ஆம் ஷரத்துக்கு அமைய மாகாண கல்விப் பணிப்பாளர் பதவியாக, வருவிக்கப்பட்டிருந்தது. அதன் கட்டமைப்புக்கள் அதிகாரங்கள் கொள்கைகள் கோட்பாடுகள் நிர்ணயிக்கப்படாத ஒரு காலத்தில் அப்பதவியை, ஏற்றுக் கொண்டவர் எங்கள் தியாகராஜா ஐயா.

வட கிழக்கிலுள்ள ஆயிரக்கணக்கான, பாடசாலைகள், வலய அமைப்புக்கள், லட்சக்கணக்கான மாணவர் கல்வியை நிர்ணயிக்க வேண்டிய பாரிய, பொறுப்பு இவரிடம் பொறுப்பிக்கப்பட்டது. இவருக்குப்பின் பல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் அப்பதவியை வகித்தாலும் இவரிடமிருந்துதான் மாகாண கல்விப் பணிமனையின் செயல் முறைகள் தொடக்கி வைக்கப்பட்டது என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பதிவாகும்.

வட கிழக்கு கல்வித் துறையில் எண்ணளவு, இயல் முறையளவு பெறு பேற்று அளவு ஆகியவற்றில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவந்த பெருமை இவரையே சாரும்.

தமிழ்த் தினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், சாரணியம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்பவற்றில் அதிக ஆர்வத்தை ஊட்டவைத்து வடகிழக்கு கல்வியை, மறுசீரமைப்புக்கு உட்படுத்திய நிர்வாக சாணக்கியனாக விளங்கினார்.

இவரின் ஆற்றல்மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்ட, கிழக்கு மாகாண ஆளுநர் அவர்கள் இவரை, வடகிழக்கு மாகாணத்தின் கல்விச் செயலாளராக்கி செயற்பட வைத்த காலம் ஒரு பொற்காலம்.


நான் அப்போது உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய காலம். கல்வி அமைச்சின் மதிலோடு இணைந்ததாக எமது பாடசாலை அமைவிடமிருந்தது. போதிய ஆசிரியர்களில்லை, வகுப்பறைக் கட்டிடங்கள் வறுமை நிலை கொண்டதாக காணப்பட்டது. விளையாட்டு மைதானமில்லை, விஞ்ஞான கூடமில்லை குறிப்பிட்டு கூறப்போனால் இல்லை, என்பதே இப்பாடசாலைக்குரிய வளமாக காணப்பட்டது.

எனக்கும் செயலாளர் தியாகராஜாவுக்கும் இடையில் நெருங்குநிலை, புரிந்துணர்வு வளமுற்பட்டது. அதற்கு இன்னொரு காரணம் பாடசாலை, அமைச்சுக்கு அருகில் இருந்து கொண்டது.

அவர் அடிக்கடி என்னிடம் கூறும் ஒரு திருமந்திரம், நீதி நேர்மையும் நித்திய ஒழுக்கமும் உன்னிடம் இருக்குமானால் உனக்கு யாரும் வலை விரிக்க முடியாது, அவருடைய இந்தக் கூற்றை இன்றும் நான் மறந்துவிடவில்லை. இந்த தாரக மந்திரத்தை இன்னும் நான் கடைபிடிப்பதனால் தான் எனக்கு சொல்லொண்ணா துயர்களும் சவால்களும் பிரச்சனைகளும் வந்த போதெல்லாம் அந்த வாக்கே எனனைக் காப்பாற்றியது.

கிழக்கின் ஒரு உயர் கல்விமானாக, சேவையாளனாக கருத்தாளனாக வாழ்ந்த எங்கள் ஆசான் வரலாற்றுப் பக்கத்தில் ஒரு குறித்த அத்தியாயத்துக்கு உரியவராவர்.

**திருமலை நவம்**
Kd;dhs; mjpgu;
jp/ cTu;kiy> tpNtfhde;jh fy;Y}up



## The Hero of our Hearts

Charisma. If you were to look up the definition of charisma in the Oxford

dictionary, you would find that it means: having a compelling attractiveness or charm that can inspire devotion. For anyone who knew Thathy, he was the definition of charisma. A man so rich in character and charm that words cannot adequately capture who he was. In an attempt to honour his memory however, I shall try.

I am Thathy's eldest grandchild. My grandfather is the one who gave me my name, Nilakkshana, but he affectionately called me Nilu. I couldn't pronounce "Thatha", the Tamil title for grandfather, so I called him "Thathy" and that name has stayed with him throughout his journey as a grandfather. Apparently I used to playfully tell my grandmother that Thathy was my man and no one else's! I would proudly ride with Thathy on his motorcycle when he came home from work. He would say "enga aval?" and I would sit on the motorcycle in front of him and we would ride up and down the road.

There are so many lovely stories like this that I don't personally remember but have been told by others. I do however have other strong memories of Thathy that I will share with you now and I treasure these memories in my heart.

*Thathy wasn't a bland 2D person or even someone who excelled in only one or two areas. He had many wonderful elements to him and as a person he just shone overall. I must definitely start with his charisma for which he was well known. He exuded it in the way he walked, the way he stood with his hands on his hips, the way he would raise his eyebrows quickly and look into your eyes with that endearing smile.*

*Everyone wanted to be associated with Thathy. To emulate him. We all felt proud to be known as Thiyagarajah's family. I remember as a child, secretly feeling happy that while many people tried so hard to impress Thathy or just wanted to have his company, he already liked me because I was his granddaughter!*

*Despite Thathy's movie star good looks and large community fan base, he was actually a very down to earth man. He appreciated a more humble lifestyle. During a holiday to Sri Lanka when I was a teenager, we went as a family to see the tea estates. There we stayed in a very basic and dull communal hall. This choice of accommodation was intentional. Thathy told us that he wanted to know that his grandchildren could stay in these modest dwellings and not require a 5 star experience. For him, expensive resorts and fancy attire were not important. Don't get me wrong, Thathy was very stylish! But he didn't need or want a designer outfit to be that way. What Thathy valued the most were the simple but precious things like family, wholesome home cooking, laughter and loyalty. Honour and respect were also of the utmost importance to Thathy.*

*When I went to Sri Lanka during the school holidays, Thathy would show me his closely held values, morals and beliefs. My sisters and I looked forward to seeing our family and seeing Sri Lanka through Thathy's eyes. For him, Sri Lanka wasn't represented by the fancy resorts. The ones where you curiously order menu items like 'exotic golden soup', only to discover that it's parupu curry! For Thathy, these places were a nice addition to Sri Lanka but not its essence.*

*Thathy knew the best places to get mango with chilli powder and salt on the side of the road. The best food stalls to taste authentic Sri Lankan cooking. Where to go to drink the best fresh juices. He would point out the window and tell us what the different trees were on the side of the road, how they were used in Sri Lanka etc. We used to love seeing Sri Lanka in this way. He showed it to us not as just a country but as his home. After Thathy passed away, my visits to Sri Lanka were never the same....*

*Thathy was also a very hard worker, whether it was in his career or socially. I think that this gave him the insight to appreciate things and have gratitude. He empathised with suffering, unfair individual circumstances and he learned to think in innovative and bold ways. Thathy taught me that hard work often reaps sweeter rewards and the lessons learned on the way can teach one about life and oneself.*

*I remember walking towards a temple with Thathy when I was very young. It was quite a long walk, or at least it seemed long to me at the time. I asked Thathy why he was*

*walking on the hard rocky path instead of the smooth path that I was walking on. That was when he first explained to me the more long lasting and satisfying result when the harder road is taken, as opposed to the seemingly easier short cut. I later realised that he must have had some other reason for walking on the rocky path that day, but he had used it as a metaphor to illustrate a very important lesson to his granddaughter.*

*There were lots of different lessons that Thathy taught to all of us. Some lessons he gave directly, such as the talks he would have had with his children, the study time he kept aside no matter how busy he was for my cousins and the lessons embedded in stories or metaphor that he gave me. Most of Thathy's lessons however, he gave through example. Just being around him, we learned a lot vicariously and we wanted to be like him. He was a walking demonstration of all that he advised. There was no hypocrisy in Thathy.*

*Over the years, many characters in books and movies who possessed these similar qualities have reminded me of Thathy. They were often the wise one in the story, the one sought out for advice and counsel, like Dumbledoor from Harry Potter (coincidentally also the headmaster of his school!) and the regal cartoon elephant Babar. I also drew comparisons to the charming, handsome and charismatic ones, like Baron Von Trapp from The Sound of Music. I thought that this was only within my imagination, however later I found out that my sister had been making the exact same comparisons all those years!*

*I have a memory of Thathy's wisdom that I only appreciated later in life when I was old enough to understand it. I was 10 years old at the time and I overheard Thathy having a conversation with my uncle about family and being able to understand the impact of various factors on children. When I grew up and later reflected on the content of that conversation I had even more respect for my grandfather.*

*You see, when dealing with something that is not within our own reservoir of experience, it is very common for people to judge. To believe a black and white statement of this is right and that is wrong, therefore that person is right or wrong. When trying to deal with what is unfamiliar we can commonly fail to understand that life is filled with more greys as opposed to those black and white judgements that we so easily and callously cast. That conversation that I overheard made me realise that Thathy understood this. He understood that as hard as it can sometimes be, we should try not to judge and that there is always a reason for someone's behaviour. If we can understand this then we are much better for it.*

*I am proud to have had a grandfather so noble as to think this way. He was a wonderful grandfather in many ways. He used to be quite strict with his children but he was very soft with his grandchildren. When I was a young child, Thathy visited us in Australia as part of a work trip. One day he saw me scribbling on the face of an Australian politician in a book that we had at home. Children sometimes do things that they think are "cool" because they've seen other people do that. Even if they don't understand it. I had*

*seen on TV, footage of people vandalising politician's names and faces on billboards during protests. I wanted Thathy to think that I was cool so I started scribbling on the book over the politician's face. It seems so silly now but in my young mind it seemed like the perfect thing to do.*

*Thathy asked me what I was doing and I told him that I didn't like that man (I didn't even know who it was) and that's why I was scribbling out his face. I remember sensing that Thathy didn't think it was a nice thing to do and so I stopped. I'm sure that with his children, Thathy would have scolded them for this behaviour. However Thathy as a grandfather looked at me and possibly sensed that I felt a bit embarrassed. So he made the situation into a joke and said that maybe the man had a big nose and I was trying to change his nose on the book. We ended up giggling and I felt grateful that I wasn't in trouble.*

*I'm sure that my aunties and uncles are reading this and thinking of all the ways that they would have been punished if they'd scribbled on a book! However Thathy was very generous and sweet with his grandchildren. He has always been able to make me laugh. There was a time when I travelled on the train with Thathy as a child and he entertained me and my sister with a story about a big bull and a kutty bull. Both "bulls" in the story were coincidentally very similar to the two ladies sitting in front of us.....My sister and I laughed and laughed the whole train ride.*

*Thathy liked to say that there's a time and place for everything. And when we don't need to be serious, let's not. Thathy preferred to see the lighter side of things. The glass half full. If something is so terrible, can you fix it? Have you tried? So we have to accept it as it is? Ok, so then let's accept it with a smile and move on. Let's make it into a joke so that we can laugh about it instead of letting it bring us down. That's a quality that he passed on to the whole family. When the Thiyagarajah family get together you will hear laughter! And it will be laughter so contagious that you will want to laugh as well. That is from my grandfather.*

*He lives in our every laugh, in our every determined step, in our will to keep our chin up and move forward with a smile. When we decide to try instead of give up. That is Thathy. When we support each other and help others instead of turning away. That is Thathy. Those moments when we wonder if we are capable, but hear a small voice in our minds, in our hearts that says of course you are! That is Thathy. And in this way we honour his memory.*

*I feel very proud to be Thathy's eldest granddaughter and I wish so much that I could have known him for longer. For this reason I thoroughly enjoy hearing my mother and my aunties and uncles talk about Thathy. He was a blessing to his family and his community. After he passed away there have been numerous times when I wished that he was still alive. To get advice from, to resolve some conflict or just to talk to. I never got the opportunity to sit down and ask Thathy about his life. Or perhaps there were opportunities*


*but at that age I just thought that I would have plenty of other chances to talk to Thathy and learn from him. I never expected that he would say goodbye so early in his life.*

*I'm sure that Thathy would tell me that regret, while very understandable is not helpful. It is a very heavy and burdensome feeling. I'm sure that Thathy would tell me to learn from every experience but not to live my life with unhelpful regrets. If I could have said something to Thathy before he moved on, I would have said-*

*Thathy, I love you very much. You are the best grandfather in the world. I feel sad that you're going to leave now, because I thought that I'd have more time with you. There are so many questions I have. So many things I wanted to ask you about yourself and about life. So many qualities you have that I don't possess but I want to. I want to be more like you but with some things I don't know how. I wanted to learn that from you.*

*I'm going to miss your face and your voice and the smell of your powder and cologne. I'm not sure where you will be going, but I know that you will continue to be a blessing wherever you go. If you ever get a chance to look down on us, please can you sometimes come and see me and let me know that you are there? I would really like that Thathy. To know that you are nearby even just for a little while. I love you Thathy. Please don't forget me. I will never forget you. I will remember you and love you always. And I will tell stories about you to my children so that they know you as well. I want my descendants to know about my unique and utterly irreplaceable Thathy.*

**-Nilu**







I couldn't think of a bigger honour when I was asked to write a few words about our incredible grandfather Mr Kandiah Thiyagarajah, fondly known as "Thathy" by his thirteen grandchildren. My name is Kalppana Nanthakumaran, I am the second grandchild of our dear Thathy and one of his biggest fans.

Thathy was the definition of kindness. His generosity was limitless for his family and community alike. He always held his head high no matter what the situation was. He was the glue that held our family together and one of my greatest role models.

Thathy grew up as an only child who then went on to have seven children with my grandma Mrs Raniitham Thiyagarajah whom we call "Mamammah." They say that behind every great man there is a great woman, and this couldn't be truer in the case of this sweet couple.

I miss Thathy greatly, though I feel very blessed to have been born as his granddaughter. It's hard to describe the kind of Charisma that Thathy had-his presence was almost regal and he always made you feel safe and loved. Though he carried himself with pride he was also always humble. He was the epitome of what I thought a family man should be-brave, smart, funny, hardworking, well dressed (and very handsome) and always looking out for his family. He taught me that respect is earned by being kind rather than through fear. We were always so proud to call ourselves his granddaughters.

I adored Thathy and wanted to be just like him from when I was a little girl. Thathy visited Australia when I was 8 years old and I remember trying to capture every remnant I could

*of his stay, from his empty medicine boxes to his Talcum powder bottle to remember his scent. I still have them today, he was that special.*

*Our dear Mamammah and Thathy were so important and special to us. They loved us with all their earts and for that I'm so grateful. We would always want to tell them every small thing including breaking my arm at the age of 7-the most important thing at that time was calling Mamammah and Thathy to let them know what had happened. I still remember feeling a bittersweet twinge when I graduated from Medical School that I wouldn't be able to call Thathy to tell him all about it. He was always so proud and encouraging of any achievement we made-big or small.*


*Thathy was full of words of wisdom-the one I remember most is him telling me to "think of how to jump over the puddle than wade through it" when he would observe me overthinking a situation. He could read people around him like a book, it was part of what made him so brilliant. In fact, Thathy was an avid reader and an amazing artist. He inspired me to develop an interest in both areas. We would always look forward to seeing what he would next draw for us in his letters and I have attached one of his drawings. Thathy encouraged my sisters and I to aim high not only in academics but to never forget to contribute to society in a meaningful way. He had such a pure hearts of gold and always wanted to help those less fortunate.*

*Thathy was always reminding us to remember and value our Sri Lankan culture, especially as we lived in Australia. Every trip to Sri Lanka was filled with our favourite foods (Tippy tips and Manjok chips) and trips to beautiful destinations as well as places where we could be taught about hardship, such as orphanages. Thathy taught us to appreciate the important things in life that we would often take for granted, such as growing plants and respecting animals, food and family. One of his pet hates was anyone wasting rice.*

*I don't think any number of words can fully explain the kind of amazing person that Thathy was and the impact that he had on everyone he met. There can only ever be one Thathy. I still feel very sad when I think of how when I go to Sri Lanka next, there will be no Thathy waiting at the airport to greet us, that I will never see him comb his hair back in that stylish way again or that we will never get to fight to sit right next to him at the dining table again. Most of all I am sad that my two sons will never meet their fascinating great grandfather. I only hope that I can live up to the example of love, resilience and strength in character that he set for all of us. I am grateful to see a piece of Thathy in my mother Chandrika Rathini, who shares the same "Royal nose" and resilience as Thathy.*

*Thank you for reading my words and celebrating the distinguished life of our dear eternally loved Thathy. You will be forever missed and loved Thathy. Thank you for being the great person you were and in turn, shaping the person I am today.*

*Your loving granddaughter,*
***Kanky***
*Dr Kalppana Paramanandarajah,*
*BMedsci, MBBS, DCH, FRACGP*



*To many, he was the Mayor of Batticaloa and Principal of Shivananda. To the lucky ones who had the privilege of knowing him personally, he was a great husband and amazing father. To me, he was my grandfather. Our Thathi.*

*My name is Thivyanah and I am the last grandchild of his first daughter. As one of his many grandchildren, I can say that he always showered each and every one of his grandkids equally with love and affection. I have many fond memories of him from when I was younger. Moments that I will cherish forever.*

*I remember feeling so excited when he came home bearing gifts in the form of Tipi Tip packets for all of us to eat. He always wanted his grandkids to be happy, healthy and smiling. I will always remember that. I remember looking forward to reading letters sent from him where he would give me wise words of wisdom and sketch something for me with his artistic skills. He was a very regal, charismatic person who had an aura about him that no one can ever replace. I remember feeling like everything would be okay when he was around.*

*He is and will always be missed by everyone he touched the hearts of. I love you Thathi.*

***- Thivyah Kutty***

# வெளியில் ஆளுமை உள்ள தியாகராஜா வீட்டில் குழந்தைகளுடன் குழந்தையாக தனது பேரப்பிள்ளைகளுக்கு கடித உரையாடல் கலையை வளர்த்தவர்

Neelu darling –

I wrote a letter to you – Did you receive it? I have not received any reply from you – Have you forgotton your old Thaathi –

How is your new School and new friends – You must have grown up now "Big Girl". We are all keeping well and pray for the health and happiness of all of you there –

Bye –

Thaathi


Kaaki Darling – Hope you received my earlier letter – why have you not replied? Thaathi is now working in Colombo. I am enclosing a card with my address. I am sure you are excelling in studies, helping amma and looking after Thivya – We are all keeping and wish you all same –

Bye

Thaathi

Thivya Kutty




[illegible]/09/2000


Darling Neelukutty -

Thaatha has not written to you for a very long time - Thaatha did not forget you - I always think of you and love you very much - Every night we see you Country - atleast the Olympic events in Sydney -

We are all keeping fine and wishing you same - I am looking for the days when you all will be here -


Thank you very much for your loving letter and the Spoilsheets enclosed there in -

With Love




அமரர் தியாகராஜாவின் முதலாவது
பூட்டப் பேரன் அர்ஜூன் வரைந்த மடல்





7/1/97

Darling Neelukutty -


Thank you for your loving letter - I am happy that you will be going to the Strathfield Girls High School this year - I am also happy that E-chithy is going to be a mother soon - I also would like E-chithy to get a boy baby - You had asked about my job - I like my job - only thing I am alone most of the time - I go to the new House atleast once a month. I am happy to hear that you pray to God every night. He is our creator - I will tell mammamma about it - Ind lover -

I am sure you will do quite well in your new School - and get many first prizes - we are very proud of you. We all love you and we always think of you -

Wish you a happy தைப்பொங்கல்

Your loving

- Thaathi -



19/8/90

Dearest Neelu –

Received both your letters and enjoyed the contents – Thank you for ~~the~~ the loving sentiments expressed in your letters – I love you so much – and think of you all always –

I have told your Ammah not to be saying unwanted things and make you unhappy – I have given her some advice. Let me know if she still continues with her utterances of self pitty – As the eldest in the family you have to bear some responsibilities also. You are young for that but in a small way you must share in ~~little~~ the little household works.

Now that Ammah has undergone an operation – concerning her womb – you and Kanky should help her, and look after things Kutty ~~[illegible]~~ also – Don't give room for her to shout –


We are all keeping ... – in the ~~[illegible]~~ health and happiness of you all there –

You must study well and do well in all the Exams – and also coach Thiurya in her post primary work –

I found you keeping your eyes closed in one of the photos sent "sleeping?" — Kanki also looks so fine in her Saree – Try to to put some flesh – for you both are looking lean —

With Love –

– Thaathi –



21/12/98

Meeh kutty, Kauki kutty —

I am leaving tomorrow morning for Kallady and will be returning after Christmas Leave on 27th. Sorry I couldn't write to you in detail. Hope you will pardon Your Thaatha this time — Ammah waiting a reply early —

Next time I will write in detail. We are O.K. and wish you same. I think of you all and love you all — and longing for the day when I can see you again —

Loving
[illegible]



Jaimah knows the background — you can ask her!

# எங்கள் அப்பா



அப்பா!
எங்கே இப்போ நீங்கள் அப்பா
எம்முடன் தானா... இல்லையே... அப்போ
எம் பிராணிடம் அடைக்கலமா...?

ஏன் இந்த அவசரமோ எமதருமை அப்பாவே,
எங்குமே உங்கள் விம்பம் நிறைந்து கிடைக்கையிலே,
ஏங்குகிறோம் நாம் உங்களுக்காய் அனுதினமும் தனித்திருந்தே

கோழி தன் சிறகுக்குள் - அதன்
குஞ்சுகளை காப்பது போல்
பத்திரமாய் ஏழு குஞ்சுகளையும்
பார்த்து வளர்த்தவரல்லோ நீங்கள்

தனியனாய் பிறந்த தவிப்பினைப் போக்க,
தனக்கென ஏழு தங்கங்களை ஈன்ற
தன்னிகரில்லா தந்தையல்லோ நீங்கள் - இன்று...
தனியனாகவே போய்ச் சேர்ந்ததும் ஏன் தானோ?

"குடும்பத்தை உருவாக்க சொன்னால் - ஒரு
கிராமத்தை உருவாக்கி விட்டார் எங்கப்பா'' - என்று
கிண்டலடிக்கும் வேளை கிறுங்காமல் - ஒரு
குறும்பு நகையுடனெமைப் பார்ப்பீர்களே அப்பா
ஆனால்....

இப்போது சொல்லுகிறோம், சத்தியமாய் நம்புகிறோம்
இன்று நீங்கள் கிராமம் அல்ல பல சந்ததிகளே சமைத்து
இருந்து அமரராகி வீட்டீர்களே - உங்கள்
இதய சுத்தி சத்ய சேவை மூலம்
ஓய்வு என்பது உங்களுக்கு ஒவ்வாமைதான்
சுறுசுறுப்பு உங்கள் சுவாசம் - அது
இறுதி மூச்சு வரை இணைந்திருந்தது உங்களிடம்

பேருடனும் புகழுடனும் சென்றுவீட்டீர்கள் எமைவிட்டு
பேயறைந்தவராய் நாங்களல்லோ திகைக்கின்றோம் - உமைப்பிரிந்து
அவசர அவசரமாய் எம்கடமை தீர்த்தெல்லாம் - மிக
அவசரமாய் அரணடியில் சேர்வதற்கு தானா அப்பா?

""கதிரை'' யிலே இருக்கும்போதே என்காலம் முடியவேணும் - என்று
கதையோடு கதையாக பல தடவை சொல்வீர்கள் - என்றும்
கந்தனிடமும் அதைத்தான் கேட்டீர்களே... அதுதான்
கதிரையில் இருந்தபடியே சமாதி ஆகி வீட்டீர்களே
கனவாக இருக்கிறது காலமும் கடந்தோடுது
கனமான எம் நெஞ்சுக்கு ஆறுதல் இனி எப்போது?

வேண்டும் என்று வந்தவர்க்கு
வெறுங்கையோடு அனுப்பாத
வள்ளலாம் எங்கள் அப்பா
வடிவழகர் அப்பா

காணிகளை தஞ்சமென்று வந்தவர்க்கு தானமளித்தீர் - உங்களிடம்
கறந்து பிழைத்தவர்கள் கல்லடியில் ஏராளம்
கண்பட்டு போச்சுதோ கந்தையாவாத்தி மகனுக்கு
கண்காணா தூரம் பறந்தேகி வீட்டீர்களே

நம் ஏழுபேருக்கு ஏற்றபடியாய் இருந்து
நல்முறையில் அவரவர்க்கு நல்லறிவு பலகூறி

அரவணைத்து எழுத்து அளவளாவி அணைப்பதில்
அதிமேதாவி நீங்கள் அன்றி எமக்கு வேறு யாரப்பா?

தான் பெற்ற செல்வங்களும்
தானே பட்டம் வைத்து - பல
தடவை கேலி பண்ணி பழித்து மகிழ்ந்திருந்த காலம்
தானாக நினைவில் வந்து தடம்புரண்டு ஓடுதப்பா
நாங்கள் ஒன்று கூடிவிட்டால்
நகைச்சுவைதான் விஞ்சி நிற்கும்
நடிப்பும் சிரிப்புமாய் நாழிகைகள் கடந்தோடும்
நல்லதொரு அப்பாவை நாம் இழந்து தவிக்கிறோம்

இன்னும் பலகாலம் இருப்பீர்கள் என்றிருந்தோம் - இப்படி
இடைநடுவே போவீர்கள் என்றறிந்திருந்தால்
இன்னும் நெருக்கமுடன் அளவளாவி மகிழ்ந்திருப்போம்
இதயத்து சுமைகளை இறக்கி நாம் வைத்திருப்போம்.

உங்களிடம் சொல்வதற்கு ஏராளம் உள்ளதப்பா
உப்புச்சப்பில்லாத விடயமானாலும்
உருப்படியான விடயமது ஆனாலும்
உங்களிடம்தானே நாம் முதல்முதலில் சொல்லுவது

அப்பா நாம் அழுதால் உங்களுக்கு பிடிக்காதே
இப்போ நாம் கதறுகிறோம் எழுந்தோடி வாருங்களேன்
எப்போ நம் அப்பாவை இனி காண போவோமோ
தப்பேதும் செய்திருந்தால் மன்னித்து விடுங்களப்பா.

பழயவீட்டு பாசிமதிலில் பேய்ப்படம் வரைந்ததுவும்
பழயநெல்லு பெட்டகத்தில் வண்ணப்படம் தீட்டியதும் - அதை
பார்த்து நாம் மகிழ்ந்து பரவசப்பட்டதுவும்
பாழாய்ப் போச்சுதப்பா பரிதவிப்பாய் இருக்குதப்பா.

நல்முறையில் நற்துணையை பெற்றிட வழிவகுத்தாலும்
நல்லானந்தமாய் நாம் வாழ்க்கை நடத்திடினும்
நாம் இருவர் சோதரர்கள் ஒன்றாக சேர்ந்துவிட்டால்
நம் துணையை நாம் மறப்போம்
நடந்தகதை பேசி மகிழ்வோம்.

விடுமுறைக் காலத்தில் - உங்கள்
வீட்டில் ஒன்று கூடிவிட்டால்
வீடே விழாக்கோலம்
வீடு நிறைய தின்பண்டம்
வேண்டி வேண்டி போடுவீர்கள்
வேண்டும் வேண்டும் என்று
விரும்பி நாம் உண்ணுவதை
விருப்புடன் ரசிப்பீர்கள்
வீணாகப் போய் விட்டால்
விசனப்படுவீர்கள் அரிச்சாணியம் என்பீர்கள்
இனி எமக்கு இவ்வாறு விரும்பி
இறைப்பவர் யார் விசனப்படுபவர் யார்?

சாப்பாட்டு வேளைதனில்
சலசலப்பு எங்கள் வீட்டில் - அது
“"சகலரும் கூடி ஒன்றாய் உண்ண வேண்டும்" - என்ற அன்பு
சட்டம் கூட உங்களது தானே அப்பா

பலதடவை கலித்திருப்போம்
பசியாது உண்டிருப்போம் - ஆனால்
இப்போது புரிகிறது அதன் தார்ப்பர்யம்
இறைநம்பிக்கை மிக்கவர் நீங்கள் - ஆனாலும்
இறைவனுக்காய் விரதம் நாம் இருக்கும் வேளை தனில்
இணக்கமாய் இருவார்த்தை சொல்லமாட்டீர்களே அப்பா - ஏன்
இவர் புசிக்க நாம் பசித்திருப்பது பிடியாதவர்க்கு எந்நாளும்

எம்முடனும் அம்மாவுடனும் மட்டும் தான் என்றில்லை
எம்வீட்டு வாய்பேசா ஜீவன்களிலும் அவ்வாறே
ஒருவேளை உணவலைக்கு சற்றேனும் பிசிந்து விட்டால்
உக்கிரமாய் கோபம் கொள்வார் தான் பிசைந்து வைத்திடுவார்.

விளையாட்டாய் பிள்ளைகள் நாம்
விடிய விடிய விழித்திருந்து
விரும்பி கதை பேசையிலே
“"இன்னுமா உறங்கவில்லை"?
உறுக்கிவிட்டு செல்வீர்கள் - ஆனாலும்
உள்ளுக்குள் சந்தோஷம் உங்களுக்கு
மேயரின் எச்சம் எல்லாம் ஒன்றாய் கூடிவிட்டால்

மிஞ்சுவது சிரிப்பொலிதான் என்பீர்கள் - எப்போதும்
உங்களுக்கு ஒளித்து ஒளித்து கதைபேசி இருந்தகாலம்
உண்டென்று சொன்னாலும் அது தப்பில்லையப்பா
உங்கள் அருமை எல்லாம் புரிகிறது இப்போது - ஆனாலும்
உங்கள் அன்பு இனி எமக்கு எப்போது?

மறைந்த மா மனிதர் உங்கள்
மறக்கவொண்ணா நற்கருமங்கள்
மலைபோல் குவியலப்பா
(மறுபக்கம் நமக்கெதற்கு)
மக்கள் நாம் ஏழுபேரும்
மகிழ்வாய் நீங்கள் செய்த சேவையில்
மணியளவு தானேனும்
மறக்காது செய்திடுவோம் - இது
மயில் முருகன் மீது ஆணை
மணித் தீபமாய் இருந்து - தங்கள்
மக்கள் எமை காத்திடுங்கள் அப்பா

- பிள்ளைகள்

---

**பேரக்குழந்தைக்கு பரிசளிக்கும் பிரதம விருந்தினரான தாத்தா - பாட்டி**




# அமரர்.க.தியாகராஜா என்றும்
# தியாக தீபமாக இப்புவியில் வாழ்வார்



1959ம் ஆண்டு உயர்தர வகுப்பு (H.S.C) பல்கலைக்கழக புதுமுகத் தேர்வு (University Enterance) ஆகிய இரண்டும் கற்பதற்காக மட்/கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலைக்குச் சென்றேன்.அங்கு அரசியல், வரலாறு இரண்டு பாடங்களையும் படிப்பிக்கும் ஆசிரியராக எனக்கு அறிமுகமானவர்தான் திரு.க.தியாகராஜா அவர்கள். அவர் அப்பொழுதுதான் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகப் படித்து வெளியேறியிருந்தார். அதன் காரணமாக வெகு சிறப்பாகப் பாடங்களைக் கற்பித்தார். அதன் பெறுபேறாக நான் 1963ம் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குக் தெரிவானேன்.

அமரர் க.தியாகராஜா அவர்கள் பின்னர் மட்டக்களப்பு மாநகர மேயராகவும் மட்/ கல்வித்திணைக்கள வலயப் பணிப்பாளராகவும் பதவி வகித்துப் பின்னர் திருக்கோணமலையில் இருந்த மாகாணக்கல்வி அமைச்சின் மாகாணக் கல்வித்திணைக்களத்தில் மாகாணக்கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றுத் திருக்கோணமலைக்குச் சென்றார். நான் பேராதனைப்

பல்கலைக்கழகத்தில் தமிழ்ச்சிறப்புப் பட்டதாரியாகக் கற்றுத்தேறி மட்டக்களப்புக் கச்சேரியில் மாவட்டக் கலாச்சார உத்தியோகத்தராகப் பணியாற்றி திருகோணமலை கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சிற்கு கலாசார உதவிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று அங்கு சென்றேன்.

திருகோணமலைக் கல்வி அமைச்சின் மாகாண வலயப்பணிப்பாளராக இருந்த அமரர் க.தியாகராஜா அவர்கள் செயலாளராகப் பதவி உயர்வு பெற்று அமைச்சின் உடைமையைப் பொறுப் பேற்றார். ஒரே அமைச்சில் அவர் செயலாளராகவும். நான் கலாசாரப் பிரிவிற்கு உதவிப்பணிப்பாளராகவும் கடைமையாற்றக் கிடைத்தமையை நான் பெரும்பேறாக உணர்ந்து கொண்டேன். ஆசிரியரும், மாணவரும் ஒன்றாக ஒரே அமைச்சில் கடமை புரிவது என்பது பாக்கியம் என்றே உணர்ந்து கொண்டேன்.

கல்வி அமைச்சில் கடைமையாற்றிய உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு திரு/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபருடைய விடுதியைப் பல திருத்தங்கள் செய்து அமைச்சில் பணிபுரிந்த திரு.குணராசா, கெங்காதாரப்பிள்ளை, பொறியியலாளர் அரசரெட்டிணம், மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு.க. தியாகராஜா, நான் அத்தனை பேரும் அங்கு தங்க நேரிட்டது. இந்த தங்குவிடுதிக்குப் பக்கத்தில் கிடந்த வெற்றுக் காணியில் புதிய விடுதியொன்று அமைக்கப்பட்டு அதில் தங்குவதற்கு எல்லா உத்தியோகத்தர்களும் சென்று விட்டனர். நானும், மாகாணக் கல்விப்பணிப்பளர் அமரர் க.தியாகராஜா அவர்களும் மாத்திரம் இவ் விடுதியில் தங்கினோம். போதிய இடவசதியிருந்த காரணத்தினால் இருவரும் குடும்பத்தினரை அங்கு கொண்டு சென்று ஒன்றாகத் தங்கியிருந்தோம்.

மாகாணக்கல்விப் பணிப்பாளராகவிருந்த திரு.க.தியாகராஜா அவர்கள் கல்வி அமைச்சின் செயலாளராகப் பதவி உயர்வுபெற்றதும், செயலாளருக்குரிய விடுதிக்குச் சென்று விட்டார். அதிலிருந்து எனது குடும்பம் மாத்திரம் விடுதியில் இருக்கக் கிடைத்தது. 2002 இல் ஓய்வுபெற மட்டும் இவ்விடுதியிலே தங்கியிருந்தோம். கல்விக் கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்பட்ட கலாசார விழாக்கள், ஓவிய விற்பனைக் கண்காட்சிகள், நூல் வெளியீடுகள், ஆய்வு மாநாடுகள் யாவும் செயலாளர் க.தியாகாஜா அவர்களுடைய தலைமையில் நடைபெறுவதற்கு நான் நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

மட்டக்களப்பு கூத்து வட்டக் களரியில் விடிய விடிய ஆடும் மரபிற்கு அமைய ஒளிப்பதிவு செய்யும் முயற்சியில் அமரர்.கதியாகராஜா அவர்கள் ஆர்வம் கொண்டார். மட்/கல்வடி உப்போடையில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரிக் கலையமர்வில் நேரடியாக மட்டக்களப்பிற்குத் திருமலையிலிருந்து விஜயம் மேற்கொண்டு தனது முன்னிலையில் ஒன்பது (09) ஒளிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து மிகச் சிறப்பான பணியை மேற்கொண்டார். அச்சமயம் மட்/அரச அதிபராக அமரர். திரு.ஏ.கே.பத்மநாதன் அவர்களும் கலாச்சார உத்தியோகத்தராக அமரர் செல்வி.தங்கேஸ்வரி கதிர்காமன் அவர்களும் தங்கள் பங்களிப்பை வழங்கினர். இவ்வாறு கல்வி கலாசார செயலாளராக திரு.க.தியாகராஜா அவர்கள் ஆற்றிய பணி என்றும் நினைவில் நிலைத்திருக்கின்றன. அமரர்.க.தியாகராஜா அவர்கள் எனது ஆசிரியராகவும் நான் அவரது மாணவராகவும் இருந்ததோடு எனது மணிவிழாவிற்கு முதன்மை அதிபராக வந்து என்னையும் எனது மனைவியையும் வாழ்த்தினார். அவரது இன்னொரு மாணவன் திரு.புண்ணிய மூர்த்தி மட்/அரச அதிபர் அவர்களுடைய தலைமையில் மணிவிழா நடந்தேறியது. இன்னும் சிறப்பைக் கொடுத்தது.


**எல். கதிர்மன்னசிங்கம்**

முன்னாள் கலாசாரப் பணிப்பாளர்.

இணைந்த வடக்கு - கிழக்கு

01/06/2021

# வரலாற்று நாயகன்
# கந்தையா தியாகராஜா மறைவுகுறித்த
# நினைவு அலைகள்




ஓம் என்றொலித்தே
உலகை உறுத்தி வரும்
பேரலைகள் முன்னாளில்
பெரும் கோள் நிகழ்த்துகையில்
கண்டங்களாகிக்
கடலில் பிரிந்திருந்து
முத்தெனத் தோன்றும்
முழு இலங்கைக் குணதிசையில்
வான் முகிலின் நல்வரவை
வழிபார்த்துத் தொழில்புரியும்
விவசாயம் மீன்பிடிகள்
மேன்மைத் தொழிலாக்கி
வந்தோரை யேற்று

வளம் பெருக்கும் ஓர்பூமி
மட்டக்களப்பென்பார்
வாயிலும் "கா" தோளிலும் "கா"
தேன் வழங்கும் ஓர் "கா"
செழிப்பாம் பசு எருமை
வாழ வைத்துப் பால்சொரியும்
வளம் கா இவைகளுடன்
வாவியிலே மீனினங்கள்
பாடும் பெரும் தனைப்
பார் புகழும் மட்டுநகர்
தேனாடு ஏனையவர்
தெரியாப் பொழுதினிலே
சூரியனைப் பார்த்திருந்து
தோத்தரிக்கும் ஓர் பூமி
மட்டக்களப்பு தமிழ்
வளர்த்திட்ட வித்தகனைப்
பெற்ற புகழ்நாட்டும்
பேறாக இராமகிருஷ்ண
மடம் படைத்த கல்லடியாம்
வளர் நிலத்தின் பேறாக
வயிரமுத்து கந்தையா
காசிநாதர் சின்னப்பிள்ளை
ஆய இருவரது
அன்புப் பிணைப்பதனை
"ஆம்" ஓதும் பாங்காக
ஆயிரத்து தொளாயிரத்து
முப்பத்தைந்தாம் ஆண்டு
மார்ச் மாத இருபதிலே
அவதரித்த ஒரு புதல்வன்
அவனே தியாகராஜா

**கல்வி**

கந்தையா பக்தர்
கடமை நிலமைகளைப்
பார்த்து நடக்கும்
பழக்கம் வழக்கமுள்ளோர்
வளமுடையார் வாய்ப்பும்
மனமும் இணைவளமும்
நிலமும் உடையார்
நேர்மையிலும் அப்படியே
காலத்தே கல்வி
கலைபயிலும் நோக்காக
சிவானந்தா தன்னில்
சேர்த்து வழிவகுத்தார்
ஆரம்பக் கல்விதனை
அங்கே பயின்ற அவர்
இந்துக் கல்லூரியென
இன்றிருக்கும் கல்லூரி
அரசினர் கல்லூரியென
அன்று வழங்கியது
ஆயகலை பயின்று
பேராதனை சென்று
பீ.ஏ பட்டம் பெற்றார்.

**தொழில்**

பட்டம் கிடைத்தவுடன்
பத்திமா கல்லூரி
வரலாறு இலக்கியமாம்
வளர் கல்வி புகட்டலுக்கு
ஐம்பத்தெட்டாம் ஆண்டு
ஆணை கிடைத்ததனால்
நல்லாசானாகி
நன்மை புரிந்ததனால்
நல்லதொரு சந்தர்ப்பம்
நாதன் அமைத்திருந்தார்
கற்ற இடம் இன்று
கற்பிக்கும் இடமாக
அறுபத்தோரா மாண்டு
ஆகியது இவருக்கு
சிவானந்தா கல்லூரி
சேர்ந்து பயிற்றுவித்த
நற்பெயரும் நற்பேறும்
நண்ணியது இவர்தமக்கு.

**திருமண வாழ்க்கை**

மனஒருமை திருவருளும்
வாய்ப்பான காரணத்தால்
சொர்ண லெட்சுமி என்பாரைத்
துணைவி என ஏற்றார்

உறவின் பலனாக
உண்டான புத்திரர்கள்
தியாகராஜாவினது
தேட்டம் எனச் சொல்வார்
மூத்த மகள் சந்திரிகா ரதினி
பரமானந்தராஜாவைத்
திருமணம் செய்து
நிலக்சனா கல்பனா உடன்
திவ்யனாவைப் பெற்று
நிம்மதியாய் வாழுகின்றார்.

இரண்டாமவர் இராஜகலா சுகிர்தம்
சியாம் சுந்தரை மணந்து
சங்கீர்த்தனா தர்ணிஷா
புதல்வர்தமைப் பெற்றுள்ளார்.

மகனாம் ரவி தியாகேந்திரன்
சிவசாந்தினியை மணந்து
ரக்சனா சித்திராஞ்சன்
புதல்வகளைப் பெற்றுள்ளார்.

புத்திரி பவானி
குகப்பிரியாவை மணந்து
சுரக்சனா பிரியங்கா
புதல்விகளைப் பெற்றுள்ளார்.

சரவணாபவான் என்னும்
அடுத்த மகன் நிலாந்திதனை
மணந்து சுகமாக
வாழுகின்றார் சீராக
செல்வன் முரளீதரன்
மகாலெட்சுமி சமேதரென
வாழ்வு தொடங்கி
வளம் பெற்றிலங்குகிறார்

கடைக்குட்டி நிர்மலா
குமணதாசை மணந்து
இல்லறத்தை
ஆக்கி மகிழுகிறார்
தக்கோர் தியாகராஜா
தானெனும் உண்மைதனை
நிரூபித்து விட்டார்
நிஜம் இதிலே பொய்மை இல்லை

**வாழ்நாள் வெற்றி**

பட்டம் தனைப்பெற்றுப்
படிப்பீந்த பள்ளிதனில்
ஆசிரியராகியதில்
வித்துவான் ஆனதன்பின்
அதிபராய் அரசியலில்
அடிவைத்து மட்டுநகர்
மேயராய் நற்பணிகள்
மெத்தப் புரிந்திருந்தார்
கல்விப்பணி அவரின்
கவர்ந்திழுத்த காரணத்தால்
எழுபத்து மூன்றுமுதல்
இயல்பாக நான்கொண்டு
அதிபர் பதவிபெற்று
ஆக்கம் பல படைத்து
தென்கிழக்கில் சேவையது
செய்யும் அழைப்புவர
அக்கரைப்பற்று
ஆர்.கே.எம் பள்ளியிலே
அதிபரின் நான்காண்டு
அரிய பணிபுரிந்தார்
தொழில்தேடிச் செல்லும்
தொழிரீலார் பலரிருக்கத்
தொழிலவரைத் தேடும்
தூயநிலை அவர்வாழ்வில்
சேவை திறமை
செய்நன்றி நேர்மை இவை
சேர்ந்திருந்த காரணத்தால்
தேடியது தொழிலிவரை
கல்வி அதிகாரியாய்
மாகாண அடிப்படையில்
திருமலையும் சேர்த்த
சிறப்புப் பதவி பெற்றார்
பணிப்பாளராகப் பலகாலம் சேவை
செய்தார்
அவுஸ்திரேலியா, சிங்கப்பூர்

ஆயவெளி நாடுகளைச்
சென்று பயிற்சியுடன்
தேர்ச்சிபல அடைந்தார்.
ஆதலினால் இவர்தமக்கு
ஆகியது உயர்பதவி
வடக்கு கிழக்கு மாகாண
கல்வி கலாசார
விளையாட்டுத்துறை அமைச்சு
மேன்மையுறு செயலாளர்
பதவி தமையடைந்து
பணிசெய்ய ஊக்கியது
அதிஉயர்ந்த பதவியென
ஆளுனரின் செயலாளர்
பதவிதனைப் பெற்றுவிட்ட
பண்பாளர் இவரானார்.

**சமூகப்பணி - புகழ்**

பணத்துக்கே பணியென்னும்
பதம் நிலைக்கும் இந்நாளில்
இகத்துக்குப் பணி புரிதல்
என்கடமையென்றாக்கியவர்
தியாகராஜா செயலாளர்
தவிசமர்ந்த காலமதில்
நாட்டார் கலைகளிலே
நயமுணர்ந்து கூத்து தன்னை
ஆவணமாயாக்கும்
அரும்பணியை ஊக்குவித்தார்
வெளியே களரி கட்டி
விடியவிடிய கூத்து
ஆசிரிய கல்லூரி
அகத்தே செயல்படுத்தி
ஒளிப்பதிவுப் பணியதனில்
ஊக்கப்படுத்தியது
நாடறியும் இந்த
நகரே இவர் பணியை
எண்ணி மகிழும்
இராமகிருஷ்ணமட பணியும்
இந்துமதப் பணியும்
இறைபணியும் ஆற்றியவர்
எல்லாப் பணியும்
இணைந்த இவரிழப்பு
சொல்லமுடியாத
சோகம் பெரும் இழப்பு
சரித்திரத்து நாயகனாய்
சாவரைக்கும் நோயதின்றி
வைத்தியசாலைக் கட்டில்
வாட்டில் துயிலாமல்
நோயின்மை கல்வி
தனதானியம் அழகு
புகழ்பெருமை இளமை
அறிவு சந்தானம் வலிமை
துணிவு வாழ்நாள் வெற்றி
நல்லூழ் நுகர்ச்சி
ஆயபதி னாறு தமை
அடைந்துவிட்ட பெருமகனார்
குளித்து வெளிக்கிட்டக்
கும்பிடுநல்லறை புகுந்து
இருந்தபடியே
இருந்தார் இகம் மறந்தார்
ஈராயிரத்து மூன்று
இருபத்தைந்தாம் திகதி
செப்டெம்பர் மாதம்
திருப்புமுனை ஆகியது
ஆமாம் பெருந்தலைவன்
ஆனஇவர் தம்பிரிவு
ஈடில்லா ஒன்று
இவரின் கனவுகளை
நனவாக்கல் இங்குள்ள
நல்லோர் கடமையதே
உடலம் மறைந்ததுண்மை
உயிர் எம்மை மறவாது
வாழ்க அவர் நாமம்
வளர்க அவர் பணிகள்
வரலாற்று நாயகனாய்
மனதில் குடியிருக்க
ஆவன செய்வோம்
அதுவே முடிந்தசெயல்

- கவிதை ஆக்கம்

**அமரர். தமிழ்மணி திமிலைமகாலிங்கம்**

# இறைவன் திருவடி
# நிழலடைக



நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு''

உலகிலே வாழ்ந்து வரும் மக்கள் பலதரப்பட்டவர்கள். ஒரு சாரார் எவரையும், எதையும் கவனிக்காது தாம் நினைத்தவாறு வாழுகின்றனர். பிறிதொரு சாரார் தம்முடைய நலன், தம்மைச் சார்ந்தோர் நலனில் மட்டும் ஈடுபாடு கொண்டவராகச் செயற்படுகின்றனர். இன்னுமொரு சாரார் தாம், தம்முடைய குடும்பம் மட்டுமன்றித் தாம்வாழும் சமூகநலனையே பெரிதும் கருதிச் செயற்படுகின்றனர். இத்தகையோரைப் புறநானூறு எனும் பழந்தமிழ்நூல் தமக்கென வாழா பிறர்க்குரியாளர் எனப் போற்றி இத்தகையோராலே தான் இந்த உலகம் இயங்கி வருகின்றது எனக் கூறுகிறது. இத்தகைய பண்புள்ளவராகவும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் உடன் மாணவராகவும், அருமை நண்பராகவும் விளங்கியவரும், பிரபல கல்விமானாகவும், நிருவாகியாகவும், சமூகத் தொண்டராகவும், மனிதநேயமுள்ளவராகவும் திரு.

க. தியாகராஜா விளங்கினார். பல்கலைக்கழகத்திலேற்பட்ட நட்புறவு ஏதோவகையில் இன்றுவரை தொடர்ந்துள்ளது.

கல்லடியைச் சேர்ந்த திரு. கந்தையா ஆசிரியர் தம்பதிகளின் ஏகபுதல்வராகிய திரு. தியாகராஜா பெயரிற் கேற்றவாறு தியாக சிந்தனை உடையவர். இவர் சுதந்திரமாகச் சிந்திப்பவர். தமது மனச்சாட்சிப்படி சரியெனக் கொண்டனவற்றைக் கைவிடமாட்டார். தமிழ்ப்பற்றும், தேசப்பற்றும் மிக்கவர். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமகம்சர், சுவாமி விபுலானந்த அடிகள் ஆகியோரின் ஆன்மீக, அறிவியல் சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டவர். மன உறுதி, தலைமைத்துவத்துக்கான ஆளுமை உடையவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய இலட்சியங்களைப் பின்பற்றியவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கல்வி பயின்ற காலத்திலே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிப் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நெறியாள்கையிலே நிகழ்த்தப்பட்ட தமிழ் நாடகத்திலே நன்கு நடித்துப் பாராட்டுப் பெற்றவர்.

கம்பீரமான தோற்றப் பொலிவுடைய இவர் ஆசிரியத் தொழிலை விரும்பியே தெரிவுசெய்து நன்கு செயற்பட்டார். முதலிலே ஆசிரியராகவும், பின் சிவானந்தா வித்தியாலயத்தின் அதிபராகவும், கல்வி அதிகாரியாகவும், பின்னர் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராகவும் திறம்படச் செயலாற்றி வந்துள்ளார். கிழக்கு இலங்கையில் குறிப்பாகப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இது நிறுவப்பட்ட பின் இதன் பேரவை உறுப்பினர்களிலொருவராக இதன் வளர்ச்சியிலும், நலனிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இதுபோலவே சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரியின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினார். கிழக்கு இலங்கையில் வாழ்ந்துவரும் பிற இனங்களுடனும் நல்லுறவு கொண்டிருந்தார். கடைசியாகக் கிழக்கு மாகாண ஆணையாளராக விளங்கினார். அண்மையில் தன்னுடைய இல்லத்திலே இறைவழிபாடு செய்தபின் திடீரென மறைந்து அமரராகியது நண்பர்களுக்கும், ஏனையோருக்கும் பேரதிர்ச்சியினைத் தந்துள்ளது. இவர் இறந்துவிட்டார் என்பதை நம்ப முடியாதுள்ளது. இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிடத்தக்க புலமை வாய்ந்தவர்.

மேலும் இவர் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வராகச் சில ஆண்டுகள் நற்பணிகள் செய்துள்ளார். சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழாச்சபைத் தலைவராகவும் விளங்கிச் சுவாமிகளின் கல்வி, ஆன்மீகச் சிந்தனைகளை முன்னெடுத்துள்ளார். இவ்வாறு பலதரப்பட்ட நற்பணிகள் மூலம் நாட்டிற்கும், மக்களுக்கும் குறிப்பிடத்தக்க சேவை செய்துள்ளார். “”எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்'' எனும் திருக்குறளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இயங்கினார்.

“தக்கார் தகவிலர் என்பது அவரவர்

எச்சத்தாற் காணப்படும்'' எனும் திருக்குறளிற்கு ஏற்ப இவருடைய பிள்ளைகள் அனைவரும் நன்கு கல்வி பயின்று பண்புள்ளவராகப் பல்வேறிடங்களில் நற்பணிகள் செய்து வருகின்றனர்.

இந்துசமய வேதங்களின்படி மனிதனின் வாழ்நாள் நூற்றாண்டுகளாகும். எனவே அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழந்து நற்பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியாமற் போனமை துரதிஷ்டமே. இவரின் சிறந்த இலட்சியங்களைப் பின்பற்றுவதே இவருக்கு ஒருவர் செய்யக்கூடிய சிறந்த கைமாறாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பேராசிரியர் இலக்கியக்கலாநிதி

**வி. சிவசாமி**

முன்னாள் சமஸ்கிருதத் துறைத்தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# தோன்றிற் புகழுடன் தோன்றுக
# வாழ்வாங்கு வாழ்ந்த
# அமரர் கந்தையா தியாகராஜா




தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதின்றேல்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

இக்குறள் பாவிற்கு பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். புகழ்தரக்கூடிய கருமங்களையே ஏற்றுச் செய்க அல்லாவிடில் அக்கருமங்களை தொடங்கற்க என்பது இக்குறளின் விழுப்பொருளாகும். (காண்க *V.V.S.* ஐயர் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு 1915)

அமரர் திரு.க.தியாகராஜா அவர்கள் தமக்குப் பெருமை தரக்கூடிய பணிகளையே வாழ்க்கையில் ஏற்றுச் செய்தார். என்பதற்கு அவரது வாழ்க்கையில் பல உதாரணங்களை நான் அறிவேன்.

அன்னார் தாம் தடம் பதித்த பணித்தளங்களில் முதலாவது பணித்தளம் பாத்திமாக் கல்லூரியாகும். புனிதவளனார் துறவற சபையினரோடு அவர் கொண்டிருந்த ஈடுபாடு பாத்திமாக்

கல்லூரி மைதானத்தில் அமைந்திருந்த சிறு குடிசையில் அவரும் அவர்தம் சினேகிதர் இக்னேசியஸ் கோயில்பரம்பில் ஆசிரியர் அவர்களும் இணைந்து பணியாற்றியமையை அடிக்கடி நினைவு கூறுவார். அருட்.சகோதரர். *M.* இம்மானுவல் *S.S.J.* அவர்கள் கல்முனை கல்வி வரலாற்றில் தடம் பதித்த ஓர் அதிபர். அண்ணாரின் மேல் திரு. தியாகராஜா அவர்கள் பல பசுமைப்பந்தங்களையும், சம்பவங்களையும் மனதில் ஆழமாகப் பதிய வைத்திருந்தார்.

அவரை நான் முதன் முதலில் சந்தித்தது 1964ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு என்னை ஆயத்தம் செய்யுமாறு எனது சிரேஷ்டர் அருட் சகோ. இம்மானுவல் அவர்கள் பணித்தார்கள். பரீட்சைக்கு ஆறு மாதங்கள் இருந்தன. ஆலோசனைகள் பெறுவதற்காக திரு. தியாகராஜா அவர்களிடம் என்னை அனுப்பினார். திரு. தியாகராஜா அவர்கள் அச்சமயம் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலே கடமை புரிந்து கொண்டிருந்தார். தனது முன்னைய அதிபர் அருட்.சகோ. இம்மானுவல் அவர்களின் பெயரைக் கேட்டதும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டு தன்னால் ஆன உதவிகளைச் செய்தார். அரசியல் பாடத்திற்கான இறைமைத் தத்துவத்தை அழகுற விளக்கினார்கள். அது இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது.

அடுத்து நான் அவரைச் சந்தித்தது கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் நான் அதிபராக இருந்த போது தமது மகளை *(A/L)* கணித வகுப்பில் சேர்ப்பதற்காக வந்தார்கள். அந்த வகுப்பில் எல்லோரும் ஆண் பிள்ளைகள். அவரது மகள் மட்டுமே ஒரே ஒரு பெண். சற்றுத் தயங்கினேன். உங்கள் நிருவாகத்தில் எனக்கு எந்தப் பயமும் இல்லை. சேர்த்துவிடுங்கள் என்றார். அச்சமயம் அவர் அக்கரைப்பற்று *R.K.M.* மிஷன் பாடசாலையில் அதிபராகப் பணிபுரிந்தார். பின்னர் எமது சந்திப்புக்கள், உறவுகள் வலுவடைந்தன. கல்விப்பணிப்பாளராக, மாகாணக்கல்விப் பணிப்பாளராக, வடக்கு கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளராக அவரை அரசு இனங்கண்டபோது எமது உறவுகள் மேலும் வலுவடைந்தன. கார்மேல் பாத்திமாக் கல்லூரிக்கு பலமுறை பிரதம அதிதியாக அவர் வருகை தந்துள்ளார். அச்சமயங்களில் எல்லாம் தம்மை வளர்த்து வார்ப்புச் செய்த, முதற்படி எடுத்துவைத்த தம் கல்லூரியாகிய பாத்திமாக்கல்லூரியின் பழைய நினைவுகளை எடுத்தியம்பத் தவறவில்லை.

விபுலாநந்தர் அடிகளாரின் நூற்றாண்டு விழாவின்போது மட்டக்களப்பு கல்விப்பணிப்பாளராக விளங்கிய அண்ணார் விபுலானந்தர் நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய போது எமது கல்லூரியின் சிறு பண முடிச்சுகளோடு அவரோடு இணைந்து கொள்ள எமக்குப் பாக்கியம் கிடைத்தது.

இத்தகைய பிணைப்பு அவர் மாகாணக்கல்விப் பணிப்பாளராக இருந்த வேளையில் வடக்கு கிழக்கு தமிழ் தினப்போட்டியில் வவுனியாவில் வைக்க இணங்கினார். அந்த வேளையில் எதிர்பாராத தடைகள் தோன்றியமையால் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். *Brother* உங்களை நம்பி போட்டிகளையும், இறுதிநாள் விழாக்களையும் கல்முனையில் வைக்க எண்ணியுள்ளேன். இந்த வேண்டுகோள் வேறு யாரிடம் இருந்து வந்திருந்தாலும் அதை ஏற்றுச் சவால்களுக்கு முகங்கொடுப்பது கஸ்டமாகத்தான் இருந்திருக்கும். திரு. தியாகராஜா அவர்களின் அடக்கமான, அன்பான வேண்டுகோள் என்னையும் எனது கல்லூரிச் சமூகத்தையும் அண்ணாருக்காக எத்தியாகத்தையும் செய்யமுடியும் என்ற முடிவை எடுக்கச் செய்தது. அண்ணார் கல்முனையில் தமிழ் விழாவை எடுத்து மகிழ்ச்சி கண்டதோடு தமக்கே இயல்பான நன்றிப்பெருக்கினை உவந்து உவந்து பாராட்டினார்கள்.

என்னுடன் எதையும் நம்பிக்கையுடன் கலந்துரையாடுவார். இந்த உறவு அவர் ஆளுனரின் விஷேட ஆணையாளராக பணியாற்றியப்பொழுது மேலும் இறுக்கம் கண்டது. அவரை கல்முனை அலுவலகத்தில் காணச்சென்றால் ஏறக்குறைய ஒரு மணித்தியாலமாவது பல்வேறு விடயங்களைப் பற்றி உரையாடுவார். சமாதானம் மலர்கின்றபோது அம்பாறை மாவட்டத்திற்கான கல்வித்திட்டங்களை

வகுப்பதற்கு என்னையும் தம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவர் அடிக்கடி நினைவுபடுத்துவது. வட - கிழக்கு மாநகர சபைகளில் முதல் இடம் வகித்த மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னை நாள் மேயர் என்ற வகையிலும் விழாவில் பங்குகொண்ட அவரது படத்தை பத்திரிகையில் பார்த்த பொழுது மனதுக்கு இதமாக இருந்தது. ஆனால் 25.09.2003 இல் கடமைக்கு கல்முனைக்கு வருகை தர இருந்த வேளையில் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் எம்மை விட்டு பிரிந்து விட்டாரே!

வட - கிழக்கு கல்வி வரலாற்றிலும், இலங்கைக் கல்வி வரலாற்றிலும் ஒரு கல்விச் செயலாளருக்கு உரிய பணிகளை அப்பழுக்கின்றி செய்த ஒரு கடமை மனிதருள் திரு. தியாகராஜா முதன்மை இடம் வகிக்கிறார். ஆசிரியர்களை அதிபர்களை மதித்த ஒரு கல்விமான் கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சிக்காக பாடுபட்டு தம்மைத் தேய்த்துக் கொண்ட திரு. தியாகராஜா ஐயா அவர்கள் ஒரு மாமனிதர். அவர் பதித்தத் தடங்கள் இலகுவில் அழிய முடியாதவை. அழிக்க முடியாதவை.

- அமரர். அருட். சகோ. கலாநிதி **S.A.I. மத்தியு**
S.S.I. முன்னை நாள் அதிபர்





# என்றும் மக்களின்
# மனதைக் கவர்ந்தவர்



அமரர். கந்தையா தியாகராஜா அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், மிக்க கவலையும் அடைந்தேன். அமரர் அவர்கள் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய காலம் முதல் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தமது வாழ்க்கைப் படிகளில் சிறந்த ஒரு ஆசிரியராக, பொறுப்புமிக்க அதிபராக, காத்திரமான கல்விப் பணிப்பாளராக, திறமைமிக்க நகர பிதாவாக, கண்ணியமிக்க கல்விச் செயலாளராக, ஆளுனரின் ஆற்றல் மிக்க இணைப்பாளராக, சமூகத்தின் முன்னோடியாக, சேவகனாக, நண்பனாக, குடும்பத்தில் பொறுப்புள்ள குடும்பத்தலைவனாக, பாசமிகு தந்தையாக, பழகும் பண்புமிகுந்த மாமனாக, அன்புப் பேரனாக வாழ்ந்து ஆழமாக தடம் பதித்த அன்னாரது வாழ்க்கையும் அவர் விட்டுச் சென்ற எச்சங்களும் என்றும் மறக்க முடியாது.

திருகோணமலை மாவட்டத்திற்கு மாவட்டக் கல்விப் பணிப்பாளராக மாற்றம் பெற்று

வந்த காலம் மிகவும் நெருக்கடியானது. போர்க் கால சூழலிலும் கூட தமது கடமையை அனைவரும் மதிக்கத் தக்க வகையில் செய்துள்ளார். வசதியான இடங்களில் அமைந்த பாடசாலைகளோடு பிரயாணக் கஸ்டங்கள் மலிந்த கஸ்ட பிரதேச பாடசாலைகளுக்கும் அவரின் சேவையின் தாக்கம் காத்திரமாக சென்றடைந்தது. அவருடைய கல்விச் சேவை ஒவ்வொரு மாணவன், ஆசிரியர், அதிபர் மத்தியிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

அன்னாரது பிரிவு அன்னாரது குடும்பத்திற்கு மட்டுமல்ல இந்த நாட்டிற்கே பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் அவரது பிரிவைத் தாங்க முடியாது தவிக்கும் அவரது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவர் விட்டுச் சென்ற பணிகளை தொடர்வது அன்னாருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

**அமரர். க. துரைரெட்ணசிங்கம்**
பாராளுமன்ற உறுப்பினர்,
திருகோணமலை





## மட்டுநகர் அபிவிருத்தி

# புதிய மேயரின் இலட்சியம்



மட்டக்களப்பு நகரை இலங்கையிலுள்ள ஏனைய பெரும் நகரங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. மட்டக்களப்பு நகரை முன்னேற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியம். ஆனால் ஒரு தனி மனிதனின் முயற்சியும், எண்ணமும் ஒரு நகரை முன்னேற்றிவிட முடியாது.

சபையின் முழு ஒத்துழைப்பும், வளமான நிதி வசதியும், மத்திய அரசாங்கத்தின் அனுசரணையும், பொதுமக்களின் ஆதரவும், ஆர்வமும் இதற்கு மிகவும் அவசியமாகும்.''

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய மேயர் திரு. கந்தையா தியாகராஜா மாநகர சபையின் மேயர் அலுவலக அறையில் வைத்து "சிந்தாமணி''க்கு அளித்த சிறப்புச் செவ்வியின் பொழுது தெரிவித்தார்.

சமீபத்தில் நான் கனம் மேயரை டெலிபோனில் தொடர்பு கொண்டபொழுது அவர் அலுவலகத்தில் இல்லை எனப் பதில் கிடைத்தது.

பின்பு அவர் பதில் அதிபராகக் கடமையாற்றும் சிவானந்த வித்தியாலயத்திற்கு டெலிபோனில் தொடர்பு கொண்டபொழுது, "அவர் வகுப்பறையில் கடமையில் ஈடுபட்டுள்ளார்" என்று பதில் கிடைத்தது.

"இன்று "சிந்தாமணி"க்கு ஒரு விசேஷ செவ்வி கொடுக்க முடியுமா என்பதை அறியும்படி, பதில் கூறியவரிடம் தெரிவித்தேன். அத்துடன் எனது டெலிபோன் இலக்கத்தையும் கொடுத்திருந்தேன்.

சரியாக 11.32 மணியளவில் எனது டெலிபோன் மணி அடித்தது. எடுத்தபொழுது மாலை சரியாக 5.00மணிக்கு மாநகர சபை மேயர் அலுவலகத்திற்கு வருமாறு பதில் கிடைத்தது.

பதினைந்து நிமிஷம் முன்னதாகவே நான் மாநகரசபை அலுவலகத்திற்கு சென்று விட்டேன். சரியாக பி.ப. 5.00 மணி 5 நிமிஷமிருக்கும் புதிய மேயர் திரு. தியாகராஜா சில "பைல்"களை ஏந்திய வண்ணம் புன்முறுவலுடன் நடந்து வந்து பைல்களோடேயே கைகூப்பி வணக்கம் தெரிவித்து "ஐந்து நிமிஷம் தாமதமாக வந்து விட்டேன். மன்னிக்க வேண்டும். கச்சேரியில் நடைபெற்ற ஓர் முக்கிய கூட்டத்தில் கலந்து கொண்டதால் தாமதமாகி விட்டது'' என அவருக்கே உரித்தான குரலில் கூறினார்.

"அதில் என்ன சார்! நகரசபை நாற்காலிகளில் முன் உட்கார்ந்தவர்களான சில பெரியவர்கள் நேரத்தையே குறித்து விட்டு, அன்று முழுவதுமே வரமாட்டார்கள்! சொற்ப தாமதத்தால் என்ன நேர்ந்துவிட்டது" என்றேன்.

"இல்லை எல்லாவற்றிலும் "பங்சுவாலிட்டி" முக்கியம் அதை நான் கடைப்பிடிக்கின்றேன். அதிலும் தங்களைப் போன்ற பத்திரிகை நிருபர்களுக்குக் குறித்த நேரத்திற்கு செவ்வி கொடுத்தே ஆக வேண்டுமல்லவா?'' எனக் கூறி உரக்கச் சிரித்தார்.

பின்பு செவ்வி ஆரம்பமானது. நான் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து திரு. கந்தையா தியாகராஜா கூறியதாவது:-

கடந்த நூறு ஆண்டு காலமாக மட்டுநகர் முன்னேறவில்லை என்பதை நான் ஒத்துக் கொள்கின்றேன். மட்டுநகரை இலங்கையில் உள்ள பெரிய நகரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகவும் பின்தங்கியே காணப்படுகின்றது.

இதற்கு முன்னைய நகரசபை, மாநகரசபைகளையோ அல்லது அரசியல் வாதிகளையோ குறை கூறிப் பயனில்லை. ஒரு தனி நபரின் முயற்சியும் எண்ணங்களும் நகரை முன்னேற்றி விட முடியாது.

சபையின் முழு ஒத்துழைப்பும் வளமான நிதிவசதியும் மத்திய அரசாங்கத்தின் அனுசரணையும், பொதுமக்களின் ஆதரவும், ஆர்வமும் இதற்கு மிகவும் அவசியமாகும்.

**நவீன சந்தை!**

மட்டக்களப்பு நவீன சந்தை பல லட்ச ரூபா செலவிலே திட்டமிட்டு நிறுவப்பட்ட சந்தையாயினும் மட்டக்களப்பு மக்களின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இந் நவீன சந்தை அமைக்கப் படவில்லை. என்றே நானும் கருதுகின்றேன்.

எனவே, இப்போதுள்ள மீன் அறைகளைத் திருத்தி அமைப்பதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

மட்டுநகரில் ஒரு புதிய மத்திய பஸ் நிலையம் அமைப்பது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடாத்தி வெகு விரைவில் முடித்து வைக்க விரும்புகின்றேன்.

அத்துடன் நவீன பூங்கா, மணிக்கூட்டுக் கோபுரம் என்பனவும் அவசியமானவை!

**விளையாட்டரங்கு!**

மட்டக்களப்பு மைதானத்தில் ஒரு விளையாட்டு அரங்கு அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்கின்றேன். தற்போது அமைந்துள்ள "ஸ்டேடியம்" படிகள் சீராகவும், வசதியாகவும் அமையவில்லை. நிதி நிலைமை சீராகும் பட்சத்தில் நிச்சயம் ஒரு விளையாட்டு அரங்கு அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவேன்.

**மின்சார விநியோகம்!**

மட்டக்களப்பு நகரின் மின்சார விநியோகம் எதிர்பார்த்த அளவு திருப்தியில்லை என்பது உண்மையே. ஊறணி, கல்லடி ஆகிய பகுதிகளின் மின்சார விநியோகம் படுமோசமாகும்.

மஞ்சந்தொடுவாய் கிராமத்தில் வெகு விரைவில் ஓர் ""ஸ்ரான்ஸ்போமர்'' அமைக்கப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சு வார்த்தை மூலம் உடனடியாக தீர்த்து வைக்கவிரும்புகின்றேன்.

எனவே, இதன் மூலம் சீரான மின்சார விநியோகம் சாத்தியமாகலாம்.

**நேர்மையாக கடமை புரிய வேண்டும்!**

எனது பதவிக் காலத்தில் நேர்மையாகக் கடமை புரிய ஆசைப்படுகின்றேன். பாரபட்சமற்ற முறையில் எல்லோருக்கும் சமமாகச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது அவா. இம் முயற்சிகளுக்குத் தடை ஏற்படும் பட்சத்தில் எனது பதவியைத் துறக்கவும் நான் தயார்.

எனது மனச்சாட்சிக்கு எது சரியெனப்படுகின்றதோ அவ்வாறே நான் நடப்பேன். எனினும் ஒரு கொள்கையை முன்வைத்தே நான் இப் பதவிக்கு வந்தேன் என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

ஓர் நாட்டின் விருத்திக்குப் பத்திரிகைகளும் துணை புரிகின்றன. எனவே, என்போன்றோருக்குப் பத்திரிகைகளின் ஒத்துழைப்பு அவசியமாகும். இச் சந்தர்ப்பத்தில் ""தினபதி - சிந்தாமணி'' ப் பத்திரிகைகளுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு கூறிமுடித்தார். புதிய மேயர் தியாகராஜா.

புதிய மேயர் ஓர் இளைஞர். பார்ப்பதற்கு அழகான தோற்றம் உடையவர். இவரது நண்பர்கள் இவரை ஜெமினி கணேசன் எனச் செல்லமாக அழைத்து வருகின்றார்கள்.

**- திருமதி. சுகுணம் ஜோசப்**

தினபதி - சிந்தாமணி நிருபர்





## வ.சிவசுப்பிரமணியத்தின்

# விபுலாநந்த தரிசனம்

## நூலுக்கு

**மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபைத் தலைவரும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளரும் ஆகிய திரு. க. தியாகராசா B.A, Dip-in-Ed., S.L.E.A.S. அவர்கள் அளித்த**

## அணிந்துரை

கிழக்கிலங்கை, தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிய ஒப்பிலா நிதியம் சுவாமி விபுலாநந்த அடிகளார். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பரந்துபட்ட பெரு நோக்குடன் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை. பிறந்தமண்ணிற்கு மங்காப் புகழ் தேடித் தந்தவர். இல் வாழ்வினைத் துறந்தாலும் தமிழ்மொழிப் பற்றினையும், சமூக சமயத் தொண்டினையுந் துறக்காது அத்துறைகளில் வரலாற்றுப் பெருமைமிக்க சாதனைகளை ஏற்படுத்தியவர். ஆசிரியராக, அதிபராக, இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளின் முகாமையாளராக, தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் முதல் தமிழ்ப் பேராசிரியராக, புகழ்பூத்த கல்விமானாக, மதிப்பார்ந்த துறவியாக, முத்தமிழ் வித்தகராக, தலைசிறந்த மொழி பெயர்ப்பாளராக, நூலாசிரியராக, இலக்கிய ஆய்வாளராக, புரட்சிமிக்க சமூக சேவையாளராக மட்டற்ற சேவையாற்றியவர். மற்றையோரால் சாதிக்க முடியாதவற்றை சாதித்தவர். கிழக்கிலங்கையின் கல்வி வரலாற்றில் புதிய வரலாறு படைத்தவர். மறைந்து கிடந்த எமது பழந்தமிழ் இசைக்கு யாழ் நூல் மூலம் புத்துயிர் வழங்கியவர். இலக்கிய உலகில் பழமைக்கும், புதுமைக்கும் பாலம் அமைத்தவர். இளங்கோவடிகளின் கவிதைச் சிறப்பினையும் செகசிற்பியரின் படைப்பாற்றலையும் அசைபோட்டு அனுபவித்த அண்ணர் நவ கவிதையின் நாயகனான பாரதியின் கவிதைச் சிறப்பில் சொக்கி அவரது சிறப்பினையும், பெருமையினையும் பாரறியச் செய்தார். தான் வாழ்ந்த காலத்தில் கல்வி கற்க, கற்று உயர வழியில்லாது அல்லலுற்ற இளம் சமுதாயத்தினரின் உய்விற்காக தனது வாழ்வினை அர்ப்பணித்தவர். “ஈழத் தெருநீளம் வாழ வழிதெரியாத தாழ் நிலையில் ஏழைகளாய் கம்பனும் வள்ளுவனும் காளிதாசகவியும் அம்பலத்தே வாடிய” நிலை அவரைப் பெரிதும் பாதிக்கத் தவறவில்லை. இராமகிருஷ்ண சங்க ஆதரவின் கீழ் அவர் உருவாக்கிவிட்ட கல்லடி உப்போடை சிவாநந்த வித்தியாலயம், திருமலை இந்துக் கல்லூரி போன்ற கல்விக் கூடங்களும், மட்டக்களப்பு காரைதீவு ஆகிய இடங்களில் சிறந்த பணியாற்றும் அனாதை மாணவ மாணவியர்க்கான இல்லங்களும் இதைத் தெளிவாகப் பறைசாற்றி நிற்கின்றன.

03.05.1892இல் பிறந்தது முதல் 19.07.1947இல் இறைவனுடன் சேர்ந்தவரை அடிகளார் இவ்வுலகில் வாழ்ந்துவிட்ட காலமோ ஐம்பத்து ஐந்து ஆண்டுகள் ஆயினும் இக்காலத்தே அவர் சாதித்துவிட்டவை பலப்பல. அலங்கரித்த பதவிகளோ மிக மிக உயர்வானவை. பட்டங்களும் உயர்பதவிகளும் அண்ணாரைத் தேடி வந்தன. ஆயினும் அண்ணாரது ஆக்கங்கள், செயற்பாடுகள்,

சிந்தனைகள், வாழ்க்கைப் பணிகள் இதுவரை முழுமையா ஆராயப்படவில்லையென்றே கூற வேண்டும். அவரது புகழ்பூத்த பணிகளும் ஆக்கங்களும் போதியளவு ஆராயப்படவேண்டியுள்ளன. விபுலாநந்த அடிகளாரது பல்துறை சார்ந்த பணிகளையும், அருமை பெருமைகளையும் தேடி ஆராய்ந்து தொகுத்து உள்ளது உள்ளவாறு உலகிற்கு வழங்குவது நமது எல்லோரது கடமையுமாகும். இந்த நோக்கத்தின் அடியாக அமைக்கப்பட்டதே மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபையாகும். அடிகளாரின் நூற்றாண்டினைக் கொண்டாடும் முகமாக உலகெங்கும் அமைக்கப்பட்ட எண்ணற்ற சபைகளுக்கு முன்னோடியாக அமைக்கப்பெற்றது இது.

இலங்கையின் பல இடங்களிலும் நூற்றாண்டு விழா முயற்சிகளையும், சபைகளையும் தோற்றுவிப்பதற்குக் காரணமாகவும் அமைந்த பெருமை இதற்குண்டு. சிறந்த நூற்றாண்டு நினைவு மலர் ஒன்றினை வெளியிட்டமை; மாணவர்கட்கு பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் அடிகளார் நினைவுப் பரிசில்களை வழங்க ஒழுங்குகள் செய்தமை; மட்டக்களப்பில் மூன்று தினங்களில் முத்தமிழ் விழாவெடுத்ததுடன் இறுதி நாளில் வரலாறு காணா ஊர்வலம் ஒன்றினை நடத்தியமை; அடிகளார் நினைவுச் சொற்பொழிவுகளை சிறந்த அறிஞர்களைக் கொண்டு நடாத்தி அவற்றைப் பதிப்பித்து வருகின்றமை இதுவரை இச்சபை மேற்கொண்ட நடவடிக்கைகளாகும். இதேபோன்று அடிகளாரது அனைத்து ஆக்கங்களையும் தொகுத்து அவற்றை தொகுதி தொகுதியாக நூல் வடிவில் வெளியிடுவதும் இச் சபையின் செயற்திட்டங்களில் ஒன்றாகும். இதன் முதற்தொகுதி வெளியிடப்படுதவற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடிகளாரது வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றினை சிறப்பான முறையில் வெளியிட விரும்பிய எமது சபை அதற்கான ஒரு போட்டியையும் நாடளாவிய நிலையில் நடாத்தியது. சிறந்த வரலாற்று நூலுக்கு ரூபா 5000/= பரிசாக வழங்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இந்த வரலாற்று நூல் போட்டியில் கிடைத்த நூல்களுள் திரு. வ. சிவசுப்பிரமணியம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நூல் பரிசிற்குரியதென நடுவர்கள் தீர்மானித்துள்ளார்கள். நூலாசிரியருடைய சம்மதத்துடன் நூலில் செய்யப்பட்ட ஓரிரு திருத்தங்களுடன் "விபுலாநந்த தரிசனம்" என்ற பெயரில் விபுலாநந்த அடிகளாரது வாழ்க்கை வரலாற்றினை நூல் வடிவத்தில் வெளியிட்டு வைப்பதில் எமது சபையின் மற்றுமோர் திட்டம் செயலுருப் பெறுகின்றது. இதற்கு உதவிய சகலருக்கும், இப்பணி இனிதே நிறைவேற அருள்பாலித்த இறைவனுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


ஐம்பத்தைந்து ஆண்டுகாலத்தே அடிகளாரது வாழ்க்கையில் நிகழ்ந்தவை எத்தனையோ, அவர் சாதித்துவிட்டவை எத்தனையோ. நடமாடிய, வாழ்ந்த இடங்கள் எத்தனையோ, பழகிய நண்பர்கள் எத்தனையோ, நனவாக்கி விட்ட கனவுகள் எத்தனையோ. முடிந்த வரையில் இவற்றை வெளிப்படுத்தக் கூடிய வகையில் இந்த வாழ்க்கை வரலாற்று நூல் அமைந்துள்ளது. அடிகளாரது வாழ்க்கையில் நடந்துவிட்ட சம்பவங்களை இதன் ஆசிரியர் இந்நூலில் தந்துள்ளார். ஏனைய வாழ்க்கை வரலாற்று நூல் அமைப்பில் அல்லாது நாயகனுடைய வாழ்க்கை வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை தனித்தனி அத்தியாயங்களாக அமைத்து அவற்றினூடாக அடிகளார் பற்றிய செய்திகளை, விபரங்களைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் கூறிச்செல்கின்றார். அடிகளார் பற்றிய புதிய செய்திகள் இந்நூல் ஆசிரியரினால் தரப்பட்டுள்ளமை இதன் முக்கிய சிறப்பாகும். அடிகளார் பற்றிய வரலாறும் வாழ்க்கைப் பணிகளும் அன்னாரது தனித்துவமான சேவைகளும் இந்நூலில் 18 அத்தியாயங்களில் தர முயன்றிருக்கின்றார். திரு. வ. சிவசுப்பிரமணியம் அவர்கள். முதல் 6 அத்தியாயங்கள் துறவு பூணும் வரையிலுமான அடிகளாரது 22 வருட வாழ்க்கையினைப் பற்றியதாக அமைந்துவிட ஏனைய 12 அத்தியாயங்களும் அடிகளாரது சாதனைகள் பற்றிய மதிப்பீடாக அமைந்துள்ளன. அடிகளாரில் மட்டற்ற பற்றும், பாசமும், மதிப்பும், மரியாதையும் கொண்ட இந் நூலாசிரியரின் கண்ணோட்டத்தில் இந்நூலின் உட்கிடக்கை அமைந்துவிட்ட காரணத்தினாலும், அடிகளார் வாழ்ந்த காலத்தில் அன்னாருடன் பழகும் வாய்ப்புப்பெற்றிருந்த

காரணத்தினாலும் இந் நூலின் கண் காணப்படும் பல செய்திகள் தனிச்சிறப்பு வாய்ந்தனவாக அமைந்துள்ளன. இராமகிருஷ்ண சங்கத்துடனான அடிகளாரது தொடர்பு, அவரது சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி ஆகியவை பற்றிய செய்திகளின் திறனாய்வுக் கண்ணோட்டத்தில் இந்நூலில் ஆசிரியர் தந்துள்ளார். எட்டாம், பதினாறாம் அத்தியாயங்களில் பல புதிய செய்திகளையும், தனித்துவமான கருத்துக்களையும், காணக்கூடியதாக உள்ளது. இந்நூல் போட்டிக்காக எழுதப்பட்ட ஒன்றாக கருத முடியாது. ஆசிரியரின் நெஞ்சில் நீண்ட காலமாக கருக் கொண்டிருந்த துடிப்பும், விருப்பும், ஆர்வமும் இந்நூலாக உருக்கொண்டுள்ளன. இது அவரது நீண்ட நாள் முயற்சியின் வெளிப்பாடு பெரிதும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ள படைப்பு. அடிகளாரது நூற்றாண்டில் வெளியிட்டு வைப்பதற்கு பல வகையிலும் பொருத்தப்பாடுடைய நூல் ஆங்காங்கு இந்நூலில் தரப்பட்டுள்ள கலந்துரையாடல்களும், மேற்கோள்களும், கடிதங்களும் அடிகளாரது வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட, கருத்துச் செறிவுமிக்க, சுவையான செய்திகளைத் தந்துள்ளன. இதுவரை அறியப்படாத பல செய்திகளைத் தந்துள்ளன. இதுவரை அறியப்படாத பல செய்திகளை இந்நூலாசிரியர் இந்நூலில் தொகுத்துத்தந்துள்ளமை இதன் ஒரு சிறப்பம்சமாகும். அடிகளாருடன் தொடர்புடைய பல தமிழ் அறிஞர்கள் பற்றிய செய்திகளும் சுவைபடத் தரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அடிகளார் வதிந்த காலங்களில் நடந்தவை பற்றிய குறிப்புக்கள் பல புதிய விபரங்களைத் தந்துள்ளன. மிக எளிய, சரளமான ஆற்றொழுக்காக அமைந்த நடை இந்நூலிற்கு அணிகலமாக அமைந்து நிற்கின்றன.

திரு. வ. சிவசுப்பிரமணியம் அவர்கள் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர், ஒரு கலைப்பட்டதாரி, நீண்ட காலமாக தமிழ் ஆசானாக இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் கல்வித்துறையிலும், சமூக - சமயத் தொண்டிலும் முன்னின்று உழைப்பவர். இருபது வருடங்களாக அடிகளாரைப்பற்றி நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இந்நூலாசிரியருக்கு இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வெறும் ஆய்வாக மாத்திரமல்லாது நேரில் கண்ட, கேட்ட, அநுபவித்த செய்திகளைக் கொண்டதாகவும் இந்நூலினை அமைத்துள்ளார். அடிகளாரது தோற்றம் பற்றிய ஆசிரியரது குறிப்பு இதற்கான ஒரு உதாரணம். "ஒரு ஆண்மகனின் சராசரி உயரத்திலும் சிறிது குறைந்த உயரம். உச்சிப் பகுதி சிறிது தட்டையான சற்று பருத்த தலை. நுனி சிறிது சப்பையாக அமைந்த மூக்கு. செவ்வரி படர்ந்து அறிவொளி வீசும் கண்கள். தலையை சிறிது சரித்து நோக்கும் பார்வை. இதழ்களும், உள்ளங்கைகளும் சிவந்து கண்ணபிரானை நினைவூட்டும் கரிய திருமேனி. உரம் வாய்ந்த உடல், உறுதியான நடை, தனித்தன்மை வாய்ந்த குரல், பரிசுத்த துவராடை போர்த்த தூயவடிவம்" ஒருகணம் விபுலாநந்த அடிகளாரை நம் மனக்கண் முன் கொண்டு வந்த நிறுத்தவல்ல வர்ணனை! அடிகளார் மீது அபரிமித மதிப்புடையவர்; எமது விபுலாநந்த நூற்றாண்டு விழாச் சபையினை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்; எமது சபையின் இணைப்புச் செயலாளராக விளங்குபவர். அவரது அரிய முயற்சியின் பயனாக நூலுருவெடுத்துள்ளதே விபுலாநந்த தரிசனமாகும்.

விபுலாநந்த அடிகளாரின் வாழ்க்கையினையும், வாழ்க்கைப் பணிகளையும் முடிந்த வரையில் முழுமையாக இவ்வுலகின் முன் சமர்ப்பிக்க வேண்டுமென்பதே எமது பேரவா. எமது எதிர்கால சந்ததியினருக்கு விபுலாநந்த அடிகளார் பற்றிய ஆணித்தரமான முழுமையான வரலாற்றினை, கருத்துக்களை தொகுத்து வழங்குவது எமது பணிகளில் ஒன்றாக அமைந்தது. எமது சபையின் திட்டங்களில் ஒன்றான அடிகளாரது வாழ்க்கை வரலாற்று நூலினை போட்டி ஒன்றின் மூலம் தெரிந்து வெளியிட்டு வைப்பதில் எமது நூற்றாண்டு விழாச்சபை பெருமகிழ்ச்சி அடைகின்றது. இந்நூல் அடிகளார் பற்றி அறிந்து கொள்ளவும், எதிர்கால ஆய்வுகளுக்கும் பெரிதும் பயன்பாடு உடையதாகவும் இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

"வாழ்க விபுலாநந்தர் நாமம்"



# அமரர். தியாகராஜா அவர்கள்

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் தலைவர் திரு.க. தியாகராஜா அவர்களின் மறைவு சபைக்கு மட்டுமல்ல நாட்டுக்கே பேரிழப்பாகும்.

1992 ஆம் ஆண்டு விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை அமைக்கப்பட்டு சில நாட்களின் பின் என் நண்பர் ஒருவர் "மட்டு/ சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை முதன்முதலில் மிகப் பொருத்தமான, சிறப்பான ஒரு கருமத்தை ஆற்றியுள்ளது" என்றார். எனக்குப் புரியவில்லை எதைச் சொல்கிறீர்கள்? என அவரைக் கேட்டேன். அவர் "நான் குறிப்பிடும் கருமம் அச்சபை தன்தலைவராக திரு.க.தியாகராஜா அவர்களைத் தெரிவு செய்தமையே" என்றார். மிகப் பொருத்தமான கூற்று.

தலைவர் அவர்களிடம் எல்லா நிலைகளிலும் காணப்பெற்ற தூரநோக்கு, செயல்திறன், முகாமைத்துவம், அரவணைப்பு, என்னும் பண்புகள் எமது சபையை சரியான வழியில் துடிப்புடன் செயல்பட உதவின.

சபைமூலம் செய்யப்பட்ட பணிகள் தவிர சமயம் சமூகம், கல்வி ஆகிய துறைகளில் அவர் ஆற்றிய அரும்பணிகள் என்றும் நினைவு கூறத்தக்கன. மட்டக்களப்பு மாவட்டக் கல்வியதிகாரியாகவும், வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளராகவும், மட்டக்களப்பு மாநகர முதல்வராகவும் அமர்ந்திருந்து அவர் ஆற்றிய பணிகள் அரசாங்கப் பணிகள் போலமையாது சமூகப் பணிகள் போல அமைந்தன. அப்பணிகள் தனியாக மதிப்பிடப்பட வேண்டியவை.

திடீரென்று அவர் மறைந்தது, அவரை அறிந்திருந்த அவரது அன்பர்கள் அனைவரையும் ஒரு கணம் செயலிழக்கச் செய்துவிட்டது.

அவரது இழப்பினால் பேரதிர்ச்சியும் பெருந்துயரும் அடைந்துள்ள அவரது அன்புத் துணைவியார், அருமைக் குழந்தைகள், அவரது அன்புச் சுற்றம் ஆகியோருக்கு மட்டக்களப்பு நூற்றாண்டு விழாச்சபை தனது ஆழ்ந்த துயரத்தையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது. அந்த ஆத்மா பரகதியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபையின் சார்பில்

**வ. சிவசுப்பிரமணியம்.**

இணைப்புச் செயலாளர்



# வந்திப்போம் ஆத்ம சாந்தி மலர்ந்திடற்கு

அமரர். க. தியாகராஜாவின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்கும், ஆழ்ந்த துயரத்திற்கும், உள்ளாக்கியதுடன் ஈடுசெய்ய முடியாதவொரு பேரிழப்பாகவும் அமைந்து விட்டது.

மட்/ சிவானந்த வித்தியாலயம், மட்/ அரசினர் கல்லூரி என்பனவற்றின் பழைய மாணவரான அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப்பட்டத்தை பெற்று ஆசிரியரானார். தொடர்ந்து பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் அப்பல்கலைக் கழகத்திலேயே பெற்றுக் கொண்ட அவர் நீண்ட காலம் சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றித் தனக்கென ஒரு மாணவர் பரம்பரையைத் தோற்றுவித்தார். அதிபர் பதவி, கல்வி நிர்வாகப்பதவி போன்றன அவரைத் தேடி வந்தன. வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக, கல்விச் செயலாளராகப் பதவிகளில் அமர்ந்து கல்வி வளர்ச்சிக்குத் காத்திரமான பங்களிப்பை ஆற்றினார். தான் ஆசிரியராக இருந்த காலமே மகிழ்ச்சியான காலமென்று எங்களிடம் அவர் கூறுவதுண்டு. அந்தளவுக்கு அவர் ஒரு நல்லாசிரியனாக திகழ்ந்து கற்பித்தற் பணியில் தனக்கென உரிய உத்திகளையும், பாணிகளையும் கொண்டு விளங்கியவர். கடினமான விடயங்களையும் இலகுவாகப் புரிய வைப்பது அவரிடம் காணப்பட்ட சிறப்பம்சமாகும். உளவியல் கோட்பாடுகள், கற்றற் கோட்பாடுகள் என்பன அவரது கற்பித்தலின் பின்னணியாகவிருக்கும். அதனால் அவரது வருகையைத் தமது வகுப்பிற்கு மாணவர்கள் அவாவுடன் எதிர்பார்ப்பதுண்டு. அவரது ஆளுமையில் பல பண்புகள் பொதிந்திருந்தன. உடன்பாட்டுச் சிந்தனை ஊக்குவிக்கும் பண்புதான் கற்ற கல்விக்கூடங்களில் பற்றும் ஈடுபாடும், கடமையைத் தெய்வமெனப் போற்றுதல், நீதிக்காக வாதிடல், இராமகிருஷ்ண விவேகானந்த தத்துவ ஈடுபாடு, தியாகத்தாலும், அறிவுப் புலமையாலும் நமது நாட்டிற்குப் புகழ் தேடித்தந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளிடம் ஒரு தனியான ஈடுபாடு என அடுக்கிக் கொண்டு போகலாம். கிழக்குப் பல்கலைக்கழத்தின் வளர்ச்சியிலும் அவர் ஆழ்ந்த அக்கறை காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சுற்றத்தார், நண்பர்கள் ஆகியோருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரின் ஆத்மசாந்திக்கும் இறைவனை வேண்டுகின்றேன்.

வாழ்வாங்கு வாழ்ந்திருந்த தியாகராஜா
மாமனிதன் செயல்வீரன் மற்றோர்க்கு

தாழ்வில்லா நெறிகாட்டி உதவி செய்தோன் சரியென்று
பட்டதனைத்துணிந்து சொன்னோன்


ஆழ்ந்தகலும் அறிவாலே கல்வித் தொண்டில்
அனைவரையும் வென்றிட்டோன் அமரனாக

வாழ்ந்திருப்பான் சிவனடிக்கீழ் ஆத்மசாந்தி மலர்ந்திட
வந்திப்போம் மறையோன் தாழே

**மா. செல்வராஜா**
(முன்னாள் அதிபர் மட்/ சிவானந்தா வித்தியாலயம்)
கல்விப் பிரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம்.








# அமரர் தியாகராஜாவின் வாரிசுகள்



ரதினி சந்திரிக்கா பரமானந்தம் குடும்பம்




ராஜகலா சியாம்சுந்தர் குடும்பம்



ரவி தியாகேந்திரன் குடும்பம்



பவானி குகப்பிரியா குடும்பம்



சரவணபவன் குடும்பம்



முரளிதரன் குடும்பம்



நிர்மலா குமணதாஸ் குடும்பம்



நினைவில் நிற்கும் நினைவு

நித்திய நாயகனின் நினைவுப் பேருரை நிகழ்வில் வழங்கப்பட்ட நினைவுப் பாமாலை

# நான் கண்ட நல்லாசான்

**சு**ழி போட்டுத் தொடங்கியதும்
வழியமைத்து வரமளித்தாய்!
விழியழகு நாயகனே
விநாயகப் பெருமானே!
செவியழகுப் பொலிவுடன்!
புவியாளும் மன்னவனே!
எழுத்தாயும், கவியாயும், இசையாயும்
என்னுடனே தானிருந்து
ஒரு தருவாய் உத்தமனே!
என் கவி வரிக்கு உயிர் தருவாய்!
கலைவாணித் தாயே நீ!

மீன் பாடும் தேன் நாட்டில்
வித்தகனாம் விபுலானந்தன்
உருவாக்கிய கல்விச்சாலை
சிவானந்தா அன்னையவள்
மடி மீது தவழ்ந்த நல்ல
ஆசான்கள் பல பேரில்
இன்றைய இவ்வரங்கின்
நாயகனும் நல்லதொரு
ஆசானாய்த் திகழ்ந்தார் அன்று.

தியாகராசா ஆசான் எங்கள்
கல்விக் கண் திறந்து விட்ட
நல்லதோர் ஆசான் திலகமவர்
பல்துறையில் விற்பன்னராய்!
ஆளுமையில் வல்லவராய்!
நிருவாகத்தில் நேர்மையினராய்
ஆசான் அவர் திகழ்ந்திட்டார்

ஆசானாய், அதிபராய் மட்டுமன்றி
மாண்புடைய மாநகர முதல்வராய்!
சிம்மாசனமேறி சீரோடு
செங்கோல் செலுத்தினாரே!
ஆளுமையின் திறமையினால்
அமைச்சினது செயலாளராய்!
செயற்பட்டு சிறப்படைந்தார்!

தியாகராசா ஆசான்தான்
தமிழ் எனக்குக் கற்பித்தார்
எழுவாய், பயனிலையும்
வேற்றுமை உருபுகளும்
விளக்கமாகக் கற்பித்தார்

இலக்கணமும், இலக்கியமும்
துலக்கமாய்ச் சொல்லித் தந்தார்.

சிவானந்தாவை சிறப்பாக
வழிநடத்தி நிர்வகித்த நிர்வாகி
அதிபர் கணபதிப்பிள்ளை அவர்
எங்கள் கண்ணீர் வெள்ளமதில்
தத்தளித்து ஓய்வு பெற்று
விடைபெற்றுச் சென்ற வேளை
அவ்விடம் வெற்றிடமாய் ஆகியதே
வெற்றிடத்தை நிரப்புவது யாரென்று
சிவானந்தா அன்னையவள்
தட்டுத்தடுமாறி நிலை குலைந்து
திகைத்து நின்ற வேளையிலே
நானிருக்கேன் கலங்காதே
தாயே நீ யென்றபடி
அதிபராய்ப் பதவியேற்று
அரவணைத்த ஆசான் திலகமான
தியாகராசா ஆசான் இவர்
ஆசானவர் சேவையினால் சிவானந்தா
சிறப்படைந்து உயர்வு பெற்றதுவே
சாதாரண மற்றும் உயர் தரத்தில்
சிறப்பான பெறுபேறுதான் பெற்று
திகழ்ந்ததுவே முதலிடத்தில்

அறுபத்தி ஒன்பதாம் ஆண்டினிலே
சிறப்பான பெறுபேறு பெற்றிட்ட
பதினெட்டு மாணவர்கள்
கொடிகட்டிப் பறந்தனரே!
சிறப்புப் பெறுபேறு பெற்றவருள்
நானும் ஒருவன் என்று
மார் தட்டிச் சொல்லுகின்றேன்
தமிழ் மொழியில் புவியியலில்
மிகத் திறமை சித்தி பெற்று
மகிழ்வடைந்தேன் நானன்று


"தந்தை மகற்காற்றும் நன்றி
அவயத்து முந்தியிருப்பச் செயல்"
என்ற வள்ளுவனின் வாக்கிற்கிசைவாக
தந்தையவர் தனையனை அவையினிலே
முன்னவனாய் முன்னிருக்கச்
செய்ததன் பயனாலே
"மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும்
சொல்"
எனும் வள்ளுவனின் மறுவாக்கிற்கிசைவாக
தந்தையமர்ந்த அரியாசனம்
மீதமர்ந்து தனையனவர் ஆட்சி
செய்கிறார் அழகுறவே!

அம்மகானை எம்மனதிருத்தி
இக்கவிதை நான் வரைந்தேன்
ஏற்றிடுவீர் சபையோரே
நன்றிகள் பல கூறி
நான் விடை பெறுகின்றேன்.!

நன்றி

என் தமிழ் வாழ்க!
என் மொழி வாழ்க!
என் இனம் வாழ்க!










































## என் தந்தைக்கு ஏற்ற
# துணையானவள்



மட்டக்களப்புக்கு அழகூட்டுவது அந்த வாவிதான். மட்டக்களப்பு வாவியின் கரையோரமாக தென்னைகளின் தெம்மாங்கு. வாவியின் சிற்றலைகள் கலீர் கலீர் எனச் சிரித்தவாறு அலைகளைத் தள்ளிக் கொண்டே வளைந்தோடும். இடையிடையே சிறுசிறு உப்பங்கழிகள். கிண்ணைமரங்களில் இருந்து விழும் கிண்ணம்பழங்கள். அவற்றைப் பொறுக்கி எடுப்பதற்குப் போட்டி போடும் சிறார்கூட்டம். இக்கரையில் இருந்து அக்கரையில் மட்டக்களப்பு நகர் விசாலித்துப் படுக்கும். இவற்றை தொடுப்பதற்கு என்றே பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட பிரமாண்டமான பாலம். வாவியின் இருகரைகளிலும் தோணிகள்.

கல்லடியில் நாற்சார் வீடு. எடுபிடி ஆட்களோடு இயங்கிக் கொண்டே இருக்கும். அந்த வீடு செல்லத்துரையருடையது. மட்டக்களப்பில் வசதியான பணக்காரர்களைப் போடியார்கள் என்று அழைப்பது வழக்கம். அவ்வாறான வீடுகள் பல இருந்தன. எங்கள் ஆங்கில ஆசிரியர் திரு.சுந்தரலிங்கம் அவர்களின் வீடும் அதேவகையைச் சேர்ந்ததே. அந்த வீட்டை நிரப்புவது

எங்கள் வகுப்பு மாணவர்களே. சனி, ஞாயிறு நாட்களில் அவருடைய வீட்டில் அவரின் தாயாரின் அனுமதியுடன் வாவியில் நீச்சலடிப்போம். அது சுகமான அனுபவமே. செல்லத்துரையருக்குக் கல்லடியில் ஒரு தனிச் செல்வாக்கு. அவரின் அருமை மகள் பள்ளியில் துள்ளியாடிய ரஞ்சிதம் சொர்ணலக்ஸ்மி. அதே தெருவில் வசீகர உடற்கட்டோடு மிடுக்கான நடைபோடும் ஆணழகன் தியாகராஜா பக்கம் நாடுவதை சுழன்று வந்தது. 'கண்ணணொடு கண் நோக்கொக்கின் வாய் சொல்' தேவையா? காதலராகச் சுழன்று வந்தனர். மட்டக்களப்பில் சிறந்த பெண்கள் பாடசாலையாக வின்சென்ற் விளங்கியது. அன்யை S.S.C சித்தியடைந்ததும் வீட்டில் தங்கிவிட்டார்.

வின்சன்ற் மகளிர் கல்லூரிக்கு முன்னால் ஒருவகை பாம் பனை போன்ற தாவரங்கள் கிளைகள் பரப்பி விடுதியில் உள்ள மாணவியருக்கு இங்கிதத்தை ஏற்படுத்தும். பாடசாலைக்கு வரும் மாணவியருக்கும், கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் களைத்த மாணவியருக்கும் ஓலைகளை விசிறி தெம்பூட்டும். தியாகராஜா ரஞ்சிதம் சொர்ணலக்ஸ்மி ஒரு பிறவிக்கலைஞர். தையல் கலையில் கைதேர்ந்தவர். றேந்தைகள் என்று அழைக்கப்பெடும் பின்னற் கலையில் கைதேர்ந்தவர். குழந்தைகளுக்கு குளிர் காலத்தில் அணியும், குழந்தைகளுக்கு உரிய உடைகளைப் பின்னுவார். வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கும் தானே அழகான சட்டைகளைத் தைத்துக் கொடுப்பார். பண்டிகை நாட்களில் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுக்கும் பாத்திரம் அறிந்து தைத்து உதவுவார்.

பிறருக்கு உதவும் குணம் அவருடனேயே பிறந்ததா? பெண்மைக்குரிய 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ இவள்' என்றாறு அழகுமயிலாக அன்ன நடைபயின்று போவதை அன்றைய இளைஞர் பலர் இரசித்தனர். ஆனால் ரஞ்சிதத்தின் விழிகளும், மனமும் தியாகராஜாவின் மிடுக்கு நடையில் மயங்கிச் சுழன்றன. கோயில் திருவிழாக்கள் காதலுக்கு தூதுபத்தி காட்டி உற்சாகப் படுத்தின. மெல்ல ரஞ்சித்தின் மாற்றத்தைத் தனது கணவரிடம் போட்டு வைத்தார். செல்லத்துரையரின் காதுகளிலும் வேறுவழிகளாலும் வந்து விழுந்தன.

அவருக்கும் தியாகராஜாவில் ஒரு பிடிப்பு இருந்தது. தியாகராஜா சிவானந்த வித்தியாலயத்தில் கற்றார். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வந்துவிட்டார். தியாகராஜாவின் குணாம்சங்கள் இராமகிருஷ்ண சங்கத்தைக் கவர்ந்து விட்டது. அவரைத் தேடி ஆசிரியம் வந்தது. இரண்டு குடும்பங்களும் கலந்து பேசி காதலர்களைச் சேர்த்து ஊரறியத் திருமணம் செய்து வைத்தனர். தியாகராஜா ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமையாளர். ஆளுமை மிக்கவர். அவருக்கு ஈடாக ரஞ்சிதமும் மும்மொழிப் புலமையாளராக விளங்கினார்.

திருவள்ளுவருக்குக் கிடைத்த வாசுகிபோல், பாரதிக்குக் கிடைத்த ஒரு செல்லம்மாபோல் தியாகராஜாவுக்கு ஒரு ரஞ்சிதம் சொர்ணலக்ஸ்மி கிடைத்துவிட்டார். இல்லறம் நல்லறமாகியது.

'மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறுவிரையேகரும்பேதேனே'

எனத் தியாகராஜா போற்ற, காதலுற்ற மனைவி கண்ணாளனே கடைக்கண்ணாலே உன்னை ரசித்தேன் எனக் கலவியும், புலவியும் காதலர்க்கு அளித்து இன்புற்றிருந்தனர். அதன் பயனாக 'செல்வங்களுட் சிறந்தது மக்கள் பேறே' என்பதற்கேற்ப சிறந்த செல்வங்களாக நான்கு பெண்களும் மூன்று ஆண்களுமாகப் பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தனர்.

தமிழர் தம் சமுதாயத்தில் ஒரு தாயின் வளர்ப்புக்கலை பற்றி

கல்முனை, மட்டக்களப்பு எனப்பல பாடசாலைகளில் ஆசிரியராகச் சேவைசெய்தார். சிவானந்த வித்தியாலயத்தில் அதிபராக அரிய சேவை செய்தார். இடையில் அரசியலிலும் கால் பதித்தார். மட்டக்களப்பு மாநகரசபையின் நகரபிதாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து சில ஆண்டுகள் நகரபிதாவாகச் சேவை செய்தார்.

மட்டக்களப்பின் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வினைப் பெற்றார்.

சில ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளராகச் சேவை செய்தார். 13வது இலங்கை இந்திய அரசியல் திருத்தத்தின் அடிப்படையில் மாகாண அமைப்புமுறை வந்தது. வடக்கு, கிழக்கு மாகாகணங்கள் இணைக்கப் பட்டதால் அவை இரண்டும் ஒரு மாகாணமாக ஏற்றுக் கொண்டனர். இதனை நன்கு கவனித்தால் ஒரு மாகாணத்துக்கு ஒதுக்கப் படும் நிதியே இந்த இரண்டு மாகாணத்துக்கும் ஒதுக்கப் பட்டது. பின்னர் ஆட்சியில் இருந்தவர்களே நீதி மன்றத்தில் வாதாடி இரண்டு மாகாணங்களையும் பிரித்தனர். இதனை இந்திய அரசும் பார்த்துக் கொண்டிருந்தது. அவர்களுக்கு வேண்டியது இந்தியாவின் அமைதியே. யார் அடிபட்டாலும் கவலையில்லை என்று பார்த்துக் கொண்டிருக்கிறது.

இது அரசியலாகிவிடும் என்பதால் திருமதி. ரஞ்சிதம் சொர்ணலக்ஸ்மியின் பண்புகளை விளக்குவோம். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பதை மறுக்க முடியாது. தன் கொழுநன் துயருறும் போது தான் வருந்துவதாகத் துடிப்பவள் பெண்ணே. இந்தத் தத்துவத்தை யாவுமாகி நிற்கும் நமது இறைவன் அர்த்த நாரீஸ்வராகக் காட்சி தருவது ஏன்?. ஆணும் பெண்ணுமாய் ஏன் இறைவன் இப்படி காட்சி தருகிறார்? பாதி ஆணும், பாதி பெண்ணுமாய் அறிவியல் பூர்வமாக விளக்குவதாக சைவசமயம் விளங்குகிறது. ஆணின்றி பெண் இல்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்ததே இனிய உலகம். காதல் எனும் அற்புதம், அதன் உணர்வுகளால் உயிரினங்கள் பிணைக்கப் படுவதும், ஒழுக்க நெறிகள், அகம், புறம் என வாழ்க்கை முறை தோன்றியது. அனைத்து உயிரினங்களுக்கும் இது பொருந்தும். அதனாலேயே இனப்பெருக்கம் நடைபெறுகிறது.

இவற்றை மையமான கருப்பொளாகக் கொண்டே இலக்கியங்கள் எழுந்தன. மனித இனம் உன்னதமானது. பிறவிகளில் மனிதப்பிறவியே மிகச் சிறந்ததாக விளங்குகிறது. மனிதப் பிறவியிலும் கூன்,குருடு நீங்கிப் பிறத்தல் அரிதென்பர். பறவையினங்களும் குஞ்சுகளுக்கு உணவூட்டிப் பறவை காட்டி பருவம் வந்ததும் பிரித்து விடுகின்றன. மனித இனம் சற்று வித்தியாசமானது. தாய் ஒரு சேயை பெற்றெடுப்பதென்பது இன்னொரு பிறவி எடுப்பதற்குச் சமம் என்பார்கள். அதனாலேயே கருவுற்ற தாய்க்குப் பல சடங்குகளை செய்கிறார்கள். தாய்க்குச் செய்யும் அத்தனையும் கருவிலுள்ள சிசுவையே சென்றடையும். தாய்தானே சேயின் முதல் ஆசிரியரும் கண்கண்ட தெய்வமும் ஆகும். சேயை வளர்த்தெடுக்கும் தாய் சேய்க்கு தாய்ப்பாலோடு உணர்வு கலந்து மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் கற்றுக் கொடுக்கிறார். இளமையில் கற்றுக் கொள்ளும் விழுமியங்கள் இறுதிவரை நிலைக்கும். இந்த வரையறையை நிறைவு செய்து கணவனையும், குழந்தைகளையும் கவனித்து சமூகத்தில் தங்கத்தலைவராக ஆக்கிய பெருமையை திருமதி. ரஞ்சிதம் சொர்ணலக்ஸ்மி பெறுகிறார்.

இதனாற்தான் பெண்ணிற் பெருந்தக்க யாவுள? என்று திருவள்ளுவர் ஏன் கூறினார்? திருவள்ளுவரின் துணைவி வாசுகி. வாசுகி மறைந்தபோது வள்ளுவர் துடித்துப்போனார்.

'அடிசிற் கினியாளே, அன்புடைய மாதே' என அரற்றிப் புலம்பினார்.

'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்' என்றொரு பழமொழி உண்டு. பல புராண காலப் பெண்கள் கணவனே கண்கண்ட தெய்யவம் என வழிவழியாகப் போற்றிவந்தனர். தனது கணவன் கள்வன், அதனால் கொலை செய்யப்பட்டான் எனக் கேள்விப்பட்ட கண்ணகி வெகுண்டெழுந்து அரச சபையில் வாதாடிக் கணவன் குற்றமற்றவன் என நிரூபித்தாள். மதுரை எரிந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. "ஒரு பெண்ணாக நான் பெருமையடைகிறேன். ஆண்களை விட சமூக மனப்பாங்குடன் சேவையாற்றக்கூடிய வல்லமை என்னிடம் உண்டு. அனைத்துப் பெண்களிடமும் உண்டு. பெண்மை என்பது தாய்மையைக் குறிப்பது. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல என்று பெண்மையைப் போற்றுவர். ஓடும் நதியும், வானில் நீந்தும் நிலாவையும் பெண்ணாகவே வர்ணிப்பர். அதனாலே பெண்மை வாழ்கவெனக் கூத்திடுவோமடா என்று பாரதி பாடினான்.

ஒரு தாயாய் பொறுப்புடன் எப்படி வீட்டில் கடமைகளை அர்ப்பணித்துச் செய்ய முடியுமோ அதேயளவு வெளிக்கடமைகளையும் அர்ப்பணிப்புடன் பெண்களால் ஆற்றமுடியும்.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' என்பது பெண்களின் கடமை என்று கூறினாலும் அதற்குள் ஆழமான பொறுப்புக்கள் உள்ளன. சான்றோனாக்குவது தந்தைக்குக் கடனே' எனவும் சான்றோர் கூறிவைத்துள்ளனர். இங்குதான் தாய்மையின் பங்கு பூதாகாரமாக விளங்குகிறது. தந்தை இல்லம் செழிக்கப் பொருள் தேடவேண்டும். தனது குழந்தையைத் தோளில் தூக்கித் தூரத்தில் உள்ளனவற்றைக் காட்டுவார். தோளில் இருக்கும் சேய் தீர்க்கதரிசனம் உடையவராக மிளிரவேண்டும் என்பதற்காகவே.

பெற்ற செல்வங்களின் தேவையறிந்து வளர்ப்புக் கலையில் வல்லவராக இருந்தால்தான் ஆளுமையுடைய சான்றோர்களை உருவாக்கலாம். ஆதிகாலத்தில் இருந்தே வளர்ப்புக்கலை பற்றி நமது சான்றோர்கள் போற்றியுள்ளனர். ஈன்று புறந்தருவது மட்டுந்தான் என்தலைக் கடன் என்று தாய்மார் ஒதுங்கியிருந்தால் பிள்ளைகளின் கதி என்னாகும்? 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்' என்றார் ஒருவர். கணவன் மட்டக்களப்பின் மாநகர மேயராகப் பதவியேற்று வீடுவந்தபோது அவர் அடைந்த மகிழ்ச்சி அளவற்றது. கணவருக்கு வேண்டிய வேலைகளைத் தாமதிக்காமல் நிறைவேற்றினார். அதிபராகக் கல்விச் சேவையிலும் ஈடுபட்டிருந்தார்.

கல்விப் பணிப்பாளராக திருகோணமலை மாவட்டத்துக்கு நியமனம் பெற்றார். பிள்ளைகள் படிக்க வேண்டும். எனவே கணவனுடன் திருகோணமலையில் தங்கியிருந்தார். வீட்டு வேலைகளை நிறைவேற்றினார். மாகாண அமைப்புமுறை வந்ததும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். மனைவியையும் அழைத்து வந்து விடுதியில் இருந்தார். கணவனுக்கு வேண்டிய மருத்துவத் தேவைகளைக் கவனித்து வந்தார். திருமதி. ரஞ்சிதம் சொர்ணலக்ஸ்மியின் கவனிப்பு திரு.தியாகராஜா ராஜாவாக வாழ்ந்தார். இரண்டு பிள்ளைகள் அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார்கள். ஒரு மகன் சரவணபவன் மட்டக்களப்பு மாநகர மேயராகச் சேவைசெய்கிறார். திருமதி. பவானி குகப்பிரியா சிறந்த நடன ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

இவர்களைப் பற்றி எழுதுவதாயின் பெரியதொரு நூலையே எழுதலாம். இந்த தம்பதியினரைப் பற்றி எழுத முற்படும் போதெல்லாம் கண்கள் குளமாகின்றன. இப்புவியில் இவர்களுடன் நட்புறவு கொள்ள நாங்கள் என்ன தவம் செய்தோமோ? என்ற எண்ணமே எழுகின்றது.

**- நண்பன்**

## எழுவரின் பிரம்மாக்கள்

நாம் இப் புவியில் வர நமக்காக தாம் இணைந்த பிரமாக்கள் நம் அருமை பெற்றோர். பிறப்பெனின் இறப்பும் உண்டு, ஆயினும் பெற்றோரின் இழப்பு பெரும் தவிப்பு நமக்கு பாடையில் போகும் வயதானாலும் நமைச் சுமந்த மடியின் வாசம் தனி சுகமே. திடீரென பிரிந்த தந்தையின் வெற்றிடம் திகைப்பை எம்முள் விதைத்து நின்றிட - தன் பிள்ளைகளை தயார் படுத்தியே புறப்படுவேன்! என அன்று கங்கணம் கட்டிய அம்மா....

எத்துணை முயன்றும் சற்று தோற்றுத்தான் போனார். மெல்ல முடியாத வலியாக தைக்கிறது அம்மாவின் பிரிவு.... தன் நினைவு மறந்தாலும்... உள் உணர்வால் உசுப்பேத்திக் கொண்டிருந்தவர் அம்மா நீங்கள். உள்ளுக்குள் அழுகிறோம் உடைந்து விட்ட அந்த கிடுக்கு பிடிக்காய்... அம்மா, அப்பா இருந்தால் - நாம் அம்மா அப்பா ஆனாலும் குழந்தைகள் தான்.

திடீரென தந்தையை இழந்து துடித்தோம், நொடி நொடியாய் தனை இழந்த தாயையும் கண்டு தவித்தோம்.....

எமக்கு ஒரு குறையும் இல்லை... ஆயினும் எண்ண முடிச்சுக்களின் ஆழத்தில் ஒரு வலி.... "நாம் இந்த உடல் அல்ல, நாம் இந்த மனமும் அல்ல".... இது எல்லாம் தெரிகிறது.... ஆயினும் உருவத்தால் பிரிந்து சென்ற அந்த ஆத்மாக்களை மீண்டும் மீண்டும் உருவுக்குள் திணித்து சுமக்கும் மனம் ஒரு வேடிக்கை கருவிதான்.


**-பிள்ளைகள்**

# அன்னையின்


# நினைவுகளில்....




தன் சகோதரியுடன்...



மகனுடன்...




தன் சகோதரியுடன்...



இறுதி காலங்களில் தன் மாங்கேணி தோட்டத்தில் நிறுவப்பட்டிருக்கும் தன் தந்தை செல்லத்துரை குருநாதியின் நினைவுதூபி அருகில்...



Autralia வில் மகன் முரளி வீட்டில்





மகளோடு...




கணவரோடு...















சரித்திரமாய்
வாழ்ந்த
ஒரு மனிதனின்
சாதனைகள்
சிகரங்களை நோக்கிய
அவன் அசைவுகள்
காலத்தின் குரலாய்
அவன் வார்த்தைகள்
ஒரு தலைமுறையின்
வழிகாட்டியாய்
ஒரு சரித்திரப் புத்தகத்தின்
பக்கங்கள்
இங்கே புரட்டப்படட்டும்

–ரமக்கல்



Design & Print : Wanasinghe Printers, Batticaloa. 065-2227170